உ

ஓம்.

தத்ஸத்ப்ரஹ்மணேநமஃ.

சதுர்வேதபாஷியகர்த்தாவாகிய

ஸ்ரீ வித்தியாரண்ணியசுவாமிகள்

அருளிச்செய்த

பஞ்சதசப்பிரகரணம்.

இது

முன் பதிப்பிக்கப்பட்டுள்ள

பல பிரதிகளிலுமிருந்த

வித்தியாசங்களை ஒழித்து

நன்குவிளங்கும்படி

தக்கவர்கள் முன்னிலையில்

பிழையறப்பரிசோதிக்கப்பட்டு

சென்னை:

சை. ர. சிவசங்கரசெட்டியாரால்

தமது

மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சார்வரிஞு தைமீ.

இதன் விலை ரூபா—க.

பஞ்சதசப்பிரகரண அட்டவணை.

ஓம்
பரப்ரம்மணேநமஃ.

பஞ்சதசப்பிரகரணம்.

குருஸ்துதி.

அநேகவித லக்ஷண காரியத்தோடு கூடியிராநின்ற மஹாமாயா மோஹத்தை எந்நேரமும் எடுத்து விழுங்குவதையே வேலையாகவுடைய ஸ்ரீ சங்கராசாரிய குருமூர்த்திகளினது பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம்.

நூல்.

முதலாவது சித்திரதீபம்.

வித்தியாரண்ணிய ஸ்வாமிகள், உலோகாநுக்கிரக நிமித்தமாக வேதாந்தத்தின் பொருள்களெல்லாவற்றையும் மனதிலே சேகரித்துக்கொண்டு வேதாந்தவிஷய மெல்லாவற்றிலும் அதிகரிக்கமாட்டாதவர்களும் வேதாந்தமனைத்தும் படித்தாலும் அதன் அர்த்தந் தெளிந்தறியக் கூடாதவர்களுமாகிய சகலருக்கும் எளிதாக வேதாந்தத்தின் உண்மைப் பொருளைக் கண்டநுபவித்து மோக்ஷ மடையத்தக்கதாக் வேதாந்த சம்மதப்படி தம்மனதி லிருக்கின்ற பிரமாநுபவத்தைப் பஞ்சதசப்பிரகரணத்தினலே வெளிப்படுத்த வேண்டுமென்று கருதிப் பதினைந்து பிரகரணங்களுள் முந்தின பிரகரணத்தினலே அத்தியாரோபம் அபவாதம் என்கிற இரண்டு நியாயத்தையுந் தழுவிக்கொண்டு, பரமாத்மாவினிடத்தில் ஆரோபிக்கப் பட்டிருக்கிற ஜகத்தினுடைய இலக்ஷணஞ் சித்திரமேயல்லாமல் உண்மையல்லவென்பதைச் சித்திரபட திருஷ்டாந்த வாயிலாக

வெளிசெய்தார்கள். புடவையினிடத்திலே சித்திரம் ஆரோபிக்கப் பட்டதுபோலப் பரமாத்மாவா யிருக்கின்ற தன்னுடைய சொரூபத்தில் ஜீவன் ஜகத்து ஈசுவரன் என்கின்ற சித்திரம் ஆரோபிக்கப்பட்டதென்க.

வினு: க. சித்திரபடந் தானேதானுக இருந்தால் வெளுத்த படமென்றும், கஞ்சிபூசினுல் பசைப்படமென்றும், கரியாலே சித்திரம் அச்சுக்கட்டினுல் லாஞ்சனபடமென்றும், வர்ணமடைத்துத் தீர்ந்தால் இரஞ்சித படமென்றும் சொல்லப்படுவதுபோலப் பரமாத்துமாவிற்கு நான்கு அவஸ்தைகள் யாவை?

விடை: க. பரமாத்மா, ஒருபாதியுமற்றுத் தானுயிருக்கும்போது சித்தென்றும், மாயையினுடனே கூடினுல் அந்தரியாமியென்றும், சமஷ்டி சூக்ஷ்மபூத சூக்ஷ்மசரீரத்துடனே கூடினுல் இரண்யகர்ப்பன் என்றும், சமஷ்டி ஸ்தூலபூத ஸ்தூலசரீரத்துடனே கூடினுல் விராட்புருஷன் என்றுஞ் சொல்லப்படும்.

வினு: உ. பரமாத்மாவே சித்திரபடமானுல், அதனிடத்துள்ள சித்திரபேதங்கள் எவை?

விடை: உ. பிரமாதி ஸ்தம்ப பரியந்தமாக உத்தமம் மத்திமம் அதமமாய்க் காணப்படுகிற பிராணிகளும், மலை ஆறு கோபுர முதலான ஜடங்களும் சுபாவசைதன்னியத்தினிடத்திலே மாயையாகிற வர்ணத்தினுலே கற்பிக்கப்பட்ட சித்திரங்களாம்.

வினு: ங. இதுவே சித்திரமானுல், சேதனம் அசேதனம் என்று இருவகுப்பா யிருப்பானேன்?

விடை: ங. படத்துச் சித்திரசரீரங்களிலே அநேக படாபாசங்கள் எழுதி யிருத்தல்போல் சைதன்னிய சித்திரத்திலே பிராணிகள்மாத்திரம் சிதாபாசர்களாகக் கற்பிக்கப்பட்டார்கள். இவர்கள் சாக்ஷாத் சைதன்னிய மாகார்கள்.

வினு: ச. மலை ஆறு கோபுரமுதலானவைகட்குச் சிதாபாசத்துவம் ஏன் இல்லை?

விடை : ச. சித்திரத்திற் பர்வத முதலான வைகட்குவஸ் திராபாசம் இல்லாததுபோலச் சிருஷ்டியிலே யகப்பட்ட மண் முதலானவைகட்குச் சிதாபாசத்துவம் இல்லை.

வினு : ரு. பிராணிகள் மாத்திரத்திற் சிதாபாச கற்பனை க்குப் பிரயோசனம் யாது ?

விடை : ரு. நால்வகைச் சரீரங்களையடைந்து ஜனன மரணுதி சம்சாரத்தைப் பாவிப்பதே பிரயோசனம்.

வினு : சு. இப்படிச் சிதாபாசனுக்கே சம்சார முளதா யின் சகலவாதிகளும் ஆத்மாவிற்கே சம்சாரமென்று சொல்வ தற்குக் காரணம் என்னை ?

விடை : சு. ஆபாசப்புடவையின் வர்ணத்தை அதிஷ் டானப்புடவையின் வர்ணமாகச் சொல்லுவதுபோல ஆபாச னது சம்சாரத்தை அதிஷ்டானத்திலாரோபித்தற்கு அஞ்ஞான மே காரணமாம்.

வினு : எ. அந்த அஞ்ஞானத்திற்கு இலக்ஷணம் யாது ? அதைப் போக்குதற்கு உபாயம் யாது ?

விடை : எ. தன்னிடத்திற் கற்பிக்கப்பட்ட சிதாபாசனை யும் அவன் சம்சாரத்தையுந் தன்னுடைய சுபாவமாக எண்ணும் மயக்கமே அஞ்ஞானம்; தனக் கொருகாலுஞ் சம்சார மில்லை, சம்சாரமுஞ் சம்சாரியுங் கற்பிதமென்றறிகிற விவேகமே அஞ் ஞானத்தைத் தள்ளும் உபாயமாம்.

வினு : அ. அந்தவிவேகம் எதனுல் வரும் ?

விடை : அ. ஜீவன் ஜகத்து பரமாத்மாக்களைக் குரு சந்நி தானத்தில் திடமாக விசாரித்தால் வரும்.

வினு : கூ. மோக்ஷாவஸ்தையிற் பலமாக மிஞ்சத்தக்க பரமாத்மாவை மாத்திரம் விசாரிக்கவேண்டுமே யல்லாமல் வந்தி யாபுத்திரனைப்போலுள்ள ஜீவனையும் ஜகத்தையும் விசாரிப்பதி னுல் யாது பயன் ?

விடை : கூ. சொரூபமாயிருக்கிற பரமாத்மாவினிடத்தி லே ஒரு விசாரமு மில்லை. விசாரமெல்லாம் ஜீவன் ஜகத்துக்க

ளிற்ருன். இவற்றை நுண்மையாக விசாரிக்கின் இருவகையும் வாதிக்கப்படும்; வாதிக்கப்பட்டவுடனே பரமாத்மா தானுகவே மிஞ்சும்.

வினு: க0. விசாரித்த ஞானிகட்கு ஜீவன் ஜகத்துக்கள் வாதிக்கப்பட்டால் திரும்பவும் விவகாரந் தோன்றுவானேன்?

விடை: க0. சுழுத்தியிலே ஜீவனும் ஜகத்தும் தோற்ரும லிருந்தும் முத்தி யில்லா திருத்தலால் தோற்ருமற்போகிறது வாதையல்ல; இந்த இருவகையும் மித்தையென்னும் நிச்சயமே வாதையாம்.

வினு: கக. இந்த இருவகையுந் தோற்றுமானுல் பரமாத்மாமாத்திரம் மிஞ்சுவது எப்படி?

விடை: கக. பரமாத்மாவே அழிவற்ற உண்மைப்பொருளென்னும் நிச்சயமே மிஞ்சுதலாம்; ஜகத்து மறைவது மிஞ்சுவதன்று. ஜகத்தில்லா திருந்தால் ஜீவன் முத்திகூடாது.

வினு: கஉ. இந்த இருவகையினையும் எதுவரையில் விசாரிக்கவேண்டும்?

விடை: கஉ. விசாரத்தினுலேவந்த ஞானம் பரோக்ஷ ஞானம் என்றும், அபரோக்ஷ ஞானமென்றும் இருவகையாம். இதில் அபரோக்ஷஞானம் வருகிறவரையில்விசாரிக்கவேண்டும்.

வினு: கக. இந்த இருவகை ஞானத்திற்கும் இலக்ஷணம் யாது?

விடை: கக. பிரமம் ஒன்றுண்டென்பது பரோக்ஷ ஞானம்; நானே அந்தப் பிரமமென்னும் துணிவு அபரோக்ஷ ஞானமாம்.

வினு: கச. இந்த அபரோக்ஷஞானத்தை வருவிக்கும் விசாரம் யாது?

விடை: கச. கடாகாசம் மகாகாசம் ஜலாகாசம் மேகாகாசம்போலக் கூடஸ்தரையும் பிரமத்தையும் ஜீவனையும் ஈசுவரனையும் பகுத்தறிவதே விசாரம்.

வினா : கரு. கடாகாசமும் மகாகாசமுங் கண்டோம்; ஜலாகாசத்திற்கும் மேகாகாசத்திற்கும் இலக்ஷணம் யாது?

விடை : கரு. கடஜலத்திற் பிரத்தியக்ஷமாக மேகநக்ஷத்திரங்களுடனே காணப்படுகிற ஆகாசம் ஜலாகாசம்; மேகஜலத்தில் அநுமானத்தினாற் கண்ட மஹாகாசத்தின் பிரதிவிம்பம் மேகாகாசமாம்.

வினா : கசு. கூடஸ்தர்முதலான நாலு சைதன்னியங்கள் எவை?

விடை : கசு. நிர்விகாரமாக விருக்கின்ற அதிஷ்டான சைதன்னியம் சரீரத்தில்வளைபட்டது கூடஸ்தரும், வளைபடாதது பிரமமும், கூடஸ்தரிடத்திற் கற்பிதமான அந்தக்கரணப் பிரதிபிம்பன் ஜீவனும், பிரமத்திற் கற்பிதமான மாயாபிரதிபிம்பன் ஈசுவரனுமாம்.

வினா : கஎ. சரீரத்தில் நானென்று விவகரிக்கிற ஜீவனுக்கு அந்நியமான கூடஸ்தர் எங்குளர்?

விடை : கஎ. ஜலாகாசத்தினால் கடாகாச மறைபட்டாற்போல ஜீவனால் கூடஸ்தரும் மறைபட்டு இருவரும் ஏகமாகத் தோற்றுகின்றார்கள்.

வினா : கஅ. இந்த ஜீவன் கூடஸ்தரை யேன் பகுத்தறியவில்லை?

விடை : கஅ. இதுவே மூலாஞ்ஞானமாம்.

வினா : கசு. இந்த மூலாஞ்ஞானமாகிய அவித்தை யெத்தனை விதம்?

விடை : கசு. ஆவரணமென்றும், விக்ஷேபமென்றும் இரண்டுவகையாம்.

வினா : உ0. இவ்விரண்டிற்கும் இலக்ஷணம் யாது?

விடை : உ0. நான் கூடஸ்தரைக் காணேனென்னும் அறிவாகவிருந்தும் கூடஸ்தர் தோற்றவில்லையென்னும் மயக்கமே ஆவரணம்; கிளிஞ்சிலை வெள்ளியென்று பார்ப்பது

போலச் சுபாவ சைதன்னியமாயுள்ள தன்னைக் கற்பிதமான அகங்காரியாய்க் காண்பதே விக்ஷேபமாம்.

வினா: உக. ஆதித்தனிடத்தில் இருள் இராததுபோலச் சுயம்பிரகாசமாயிருக்கிற ஆத்மாவினிடத்தில் அப்பிரகாசமான அஞ்ஞானம் வாராதாகலின் அஞ்ஞான காரியமான ஆவரணம் எப்படிவந்தது? இதுவுமில்லை யெனின் ஆவரணத்தைப் போக்கும் வேதாந்தத்தைப் படிக்கவேண்டியதில்லையே?

விடை: உக. நான் அஞ்ஞானியென்கிற அநுபவம் ஜடத்தினிடத்திலே காணப்படாமல் சித்தினிடத்திலே காணப்படுவது திருஷ்டமாம்.

வினா: உஉ. அநுபவமாயினும் யுக்தியில்லையே.

விடை: உஉ. திருஷ்டமாய்க் கண்டதற்கு யுக்தி வேண்டியதில்லை; காணாததிற்கே யுக்திவேண்டும்.

வினா: உங. அனுகநியாயம்போலச் சங்கித்தாலல்லவோ புத்தியில் திடப்படும்?

விடை: உங. அநுபவத்தைக் கடந்து சங்கிக்கலாகாது; ஆகையினாலே கூடஸ்தருக்கும் அஞ்ஞானத்திற்கும் விரோதம் இல்லை.

வினா: உச. ஆனால் இந்த அஞ்ஞானத்தைத் தள்ளுகிற விரோதி யாது? அதை எவ்விடத்தில் காணலாம்?

விடை: உச. சாஸ்திர விசாரஞானமே அஞ்ஞானத்திற்கு விரோதி; இதை ஞானிகளிடத்தில் காணலாம்.

வினா: உரு. அகங்காரி யாவன்? இவன் எதனாற்கற்பிக்கப்பட்டவன்? இவனுக்கு அதிஷ்டானம் யாது?

விடை: உரு. காரணகாரிய சரீரத்தை யுடையதான சைதன்னியமே அகங்காரி. அஞ்ஞானகாரியமான விக்ஷேபத்தினால் கற்பிக்கப்பட்டவன். இவனுக்கு அதிஷ்டானம் கூடஸ்த சைதன்னியமாம்.

வினா: உசு. இப்படிக் கற்பிதமான அகங்காரிக்கும் சுபாவமாயுள்ள தனக்கும் சுபாவசித்தமான அபேதமும், பிராந்திசித்தமான பேதமும் எப்படி யிருக்கின்றன?

விடை: உசு. இது என்னப்பட்ட அதிஷ்டானக் கிளிஞ்சிலிலுள்ள இதந்தையும் உண்மையும் என்கிற ஆரோபம் மித்தையென்கிறதுபோலச் சுபாவசித்தபேதமான வெள்ளியினிடத்து இது வெள்ளியென்று அபேதமாகக் காணப்படுவது பிராந்தியாதல்போல நான்தானென்கிற அபேதம் பிராந்திசித்தமாம்.

வினா: உஎ. இது என்னும் சாமானியம்போலவும் வெள்ளியென்னும் விசேஷம்போலவும் ஆத்மாவும் அகங்காரியும் ஏன் எங்குங் காணப்படவில்லை?

விடை: உஎ. தேவதத்தன்தான் போனவன், யஞ்ஞயதத்தன்தான் கண்டவன், நீதான் சொன்னவன், நான்தான் கேட்டவனென்னும் விவகாரத்தினுல் இது வெள்ளி, இது புடவை, இது கடமென்பதுபோலச் சாமானிய விசேஷமிரண்டுங் காணப்படுகின்றன.

வினா: உஅ. இந்தப் பேதஞானத்தினுல் பிரயோசனம் யாது?

விடை: உஅ. தானென்கிற சொல்லுக்கு அர்த்தம் நான் என்கிற அகங்காரிக்கு அன்னியரான கூடஸ்தரென்று சித்தாந்தமாவதே பிரயோசனம்.

வினா: உகூ. கடந்தான், படந்தான், கோபுரந்தானென்னுமிடத்தில் அசேதனத்தினிடத்திலே தானென்கிற சொல்வரலாமோ?

விடை: உகூ. சிதாபாசன் இல்லாதபடியினுல் ஜடமென்று சொல்லப்படும் கடபடாதிகளும் சிதாபாசனிருத்தலால் சேதனமென்று காணப்படும் பிரமாதி ஸ்தம்ப பரியந்தமான பிராணிகளும் ஆத்மா ஒருவரிடத்திலே இருவகைக் கற்பிதங்களாதலால் எல்லாவற்றிலுந் தானென்று வழங்குகிறசொல் எங்

கும் ஆத்மாவுண்டென்கிறதைக் காட்டுகின்றது ; ஆகையினல் தானென்கிறசொல் எங்கும் வரலாம்.

வினு : கூ0. தானென்கிறசொல்போல் இது அது வென் கிறசொல்லும் எல்லாவற்றிலுஞ் சாமான்யமாக விருத்தலால் ஏன் அவைகளும் ஆத்மாவாக மாட்டா ?

விடை : கூ0. இது அது வென்கிறசொல் நல்லது பொல் லாததென்கிற சொல்போலச் சிலவற்றில் சாமான்யமாதலைக் கண்டதே யல்லாமல் முற்றுமாதலைக் காணவில்லை. ஆகையினல் இதுதான், அதுதான், நல்லதுதான், பொல்லாததுதா னென்று, சர்வத்திர சாமான்யமாகத் தோற்றுகின்ற தானே ஆத்மாவென் றும், மற்ற விசேஷங்களெல்லாம் மாயாகற்பிதமென்றுஞ் சித் தாந்தம்.

வினு : கூக. இது எல்லோருக்கும் ஏன் தெரியவில்லை ?

விடை : கூக. முன்சொன்ன அஞ்ஞானத்தினல் தாதான் மியாத்தியாசத்தையடைந்த அஞ்ஞானிகள் சாமான்யவிசேஷம் இரண்டும் வெளிப்படையாய் வேறுபட்டிருக்கினும் ஒன்ருய்க் கண்டார்கள்.

வினு : கூஉ. இந்த அத்தியாசம் எப்படிப் போம் ?

விடை : கூஉ. விசாரஞானத்தினலே போம்.

வினு : கூகூ. இந்த ஞானிக்கு, காரணமான அஞ்ஞானம் விலகியுங் காரியமான விசேஷம் இருப்பது என்னே ?

விடை : கூகூ. விக்ஷேபத்திற்குக் காரணம் அஞ்ஞான மென்றுங் கர்மமென்றும் இரண்டாம் ; அவற்றில் அஞ்ஞானம் நசித்தும் கர்மம் நசியாதபடியினல் பிராரத்தகர்மந் தொலையு மட்டும் விக்ஷேபம் இருக்கும்.

வினு : கூச. காரணம் நஷ்டமாயுங் காரியம் இருக்கு மென்பது என்ன நியாயம் ?

விடை : கூச. உமது தர்க்கமதத்தில் காரணம் நஷ்ட மாயும் காரியஞ் சற்றுப்போ திருக்குமென்பது உமக்குஞ் சரி தானே.

வினா: ௬௫. அப்படியானாலுங் காரணத்திற்குப்பின். காரியஞ் சற்று நேரமல்லவோ இருக்கவேண்டும்? ஒரு புருஷாயுள் வரையிலும் இருக்குமென்பது எப்படிக்கூடும்?

விடை: ௬௫. இரண்டொருநாளில் உண்டான காரணத்திரவியமான நூல் வெந்தும் ஒருசாமங் காரிய தாமதமுண்டென்றால், அநந்த கற்பங்களிலுள்ள அஞ்ஞானப்பிராந்தி நஷ்டமாய் அதன் காரியமானவிக்ஷேபம் பிராரத்வத்தோடு போமென்றது சொற்பகாலமல்லாமல் அதிககாலமல்லவே.

வினா: ௬௬. இப்படிச் சொல்லுதற்குப் பிரமாண மில்லையோ?

விடை: ௬௬. சுருதி யுத்தி அனுபவம் மூன்று முள்ளன.

வினா: ௬௭. ஆனால் சித்தாந்தந்தான் யாது?

விடை: ௬௭. அஞ்ஞானிகள் நான் தான் என்கிற இரண்டையும் ஒன்றாகக் கண்டு கலங்கிச் சம்சாரத்தில் அடிபடுவார்களென்றும், இந்த இருவகையும் ஞானிகள் பகுத்தறிந்து முத்தராவார்களென்றும் சித்தாந்தமாம்.

வினா: ௬௮. வேதாந்தமல்லாத சாஸ்திரங்களினால் முத்தியில்லையோ?

விடை: ௬௮. மற்றச் சாஸ்திரங்களெல்லாம் பிராந்தர்களால் உண்டாக்கப்பட்டவைகளாதலால் அவை குழப்பத்தின் மேல் குழப்பமாய்க் கலக்கமாகுமே யன்றிப் பிராந்தியைத்தெளிவிக்கமாட்டா.

வினா: ௬௯. எந்த எந்தச் சாஸ்திரகர்த்தாக்கள் எதெதைப் பொருளென்று கலங்கினார்கள்? இவர்களுக்குப் பரம்பரையாகத் தெளிவுவரும் வழி யாது?

ஆத்மநிர்ணயத்தில் விவாதம்.

விடை: ௬௯. பாமரரும், உலோகாயதரும் விரோசனன் சொன்ன யுத்தியினால் ஸ்தூல சரீரமே ஆன்மா வென்பார்கள்.

சார்வாகர்கள்: சீவன் போனவுடனே சரீரம் மரித்துப் போகிறபடியால் நான் கண்டேன், கேட்டேனென்கிற யுத்தியினால் தேகம் ஆத்மாவல்ல, இந்திரியமே ஆத்மாவென்றுசொல்லுவார்கள்.

ஹிரண்யகர்ப்ப உபாசிகளான பிராணாத்மவாதிகள் பிராணன்போனால் இந்திரியங்களிராதபடியினால் பிராணனே ஆத்மாவென்பார்கள்.

உபாசகர்கள்: மனதில்லாதபோது பிராணன் றெரியாதபடியினாலே மனதே ஆத்மாவென்பார்கள்.

க்ஷணிகவாதிகள்: புத்தியில்லாவிட்டால் மனது பாதிக்கிறபடியினால் புத்தியே ஆத்மாவென்பார்கள்.

பௌத்தர்களான மாத்தியமிகர்கள்: சுழுத்தியில் புத்தி முதலானவை ஒன்றுங் காணாதபடியினாலே சூன்யமே ஆத்மாவென்பார்கள்.

பட்டர் முதலானோர்கள்: சுழுத்தியிலே சூன்யமாயிருந்ததென்று கண்டுசொல்ல வருகிறபடியினால் ஆத்மா சத்தென்பார்கள்.

ஆத்ம பரிமாணத்தில் விவாதம்.

அந்தராளர்: சூக்ஷ்மநாடிவழியே சஞ்சரிக்கிறபடியினால் ஆத்மா அணுவென்பார்கள்.

திகம்பரர்: பாத மஸ்தகபரியந்தம் அறிவு கலந்திருக்கிறபடியினாலே ஆத்மா புருஷப்பிரமாணமென்பார்கள்.

பிரபாகரரும், தார்க்கிகரும்: ஆத்மா பரிச்சின்னமாயிருந்தால் அழிந்துபோமாகலின் பரிபூரணமாய் ஜடமாயிருக்கிறதென்பார்கள்.

பட்டர் மதவாதிகள்: சுழுத்தியிலே சடமாயும் ஜாக்கிரத்திலே அறிவாயுங் காணப்படுகிறபடியினாலே ஆத்மா ஜடம் சித்தென்னும் இருவகையாயிருக்குமென்பார்கள்.

சாங்கியர்: அசங்கனுக்கு இரண்டு அம்சங் கூடா; ஆத்மா சித்தாய்ப் பரிபூரணமாயிருக்கும். அவரவர்களிடத்தில் சுழுத்தியிற் காணப்படுகிற ஜடம் அந்த ஆத்மாக்களுக்குச் சுகதுக்கங் கொடுக்கவந்த பிரகிருதியென்பார்கள்.

ஈசுவர நிர்ணயம்.

யோகிகள்: பிரகிருதியும் புருஷனொருவன் இல்லாவிட்டால் சேஷ்டிக்கமாட்டாது. அடக்கி யாளுவாரில்லாதிருந்தால் ஆத்மாக்களுக்குப் பந்தமோக்ஷமில்லை; ஆதலால் இந்த ஆத்மாக்களைத்தவிர ஈசுரனொருவ னுண்டென்பார்கள்.

இனி இதில் உண்டாகும் விவாதம்.

பதஞ்சலிபகவான் * கிலேச † கர்ம ‡ விபாகங்களோடும் அவற்றின் ¶ ஆசயங்களோடுங்கூடாத புருஷவிசேஷனே ஈசனும்; அவன் ஜீவன்போலும் அசங்க சித்தாகுமென்று சொல்லுவார்.

தார்க்கிகர்: அசங்களுகிய ஈசுவரனுக்கு நியந்திருத்துவங் கூடாது. நித்தியமான இச்சாஞானக்கிரியைகளை உடையவன் ஈசுவரனென்று சொல்லுவார்கள்.

ஹிரண்யகர்ப்ப உபாசகர்: ஈசுவரன் நித்தியஞானுதிகளையுடையவனுயின் சதாசிருட்டி யுளதாதல்வேண்டும்; ஆதலின் ஹிரண்யகர்ப்பனே ஈசுவரனென்பார்கள்.

---

* கிலேசம்: அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபினிவேசம் என்பனவாம்.

† சர்மம்: அசுக்ல கிருஷ்ணகர்மம் யோகிக்கு, இதரர்க்குப்புண்ணியபாவ மிசிரம்; அசுக்ல கிருஷ்ணமென்பது சகாமரூப சுபகர்மம் அசுபகர்மம் என்னும் இரண்டின் விலட்சணமான யோகாநந்தத்திற்கு ஏதுவான புண்ணியவிசேஷம்.

‡ விபாகம்: ஜாதி, ஆயுள், போகம் என்னும் பலவிசேஷங்கள்.

¶ ஆசயம்: சம்ஸ்காரம்.

விஸ்வரூபமதம்: ஸ்தூல சரீரத்தைவிட்டுச் சூக்ஷ்மசரீரந் தனியே யில்லை. கிருஷ்ணன் விஸ்வரூபங் காட்டுகிறபோது எங்குங் கால் எங்குங் கையாகக் காட்டினபடியினால் ஈசுவரன் விராட்புருஷனே, ஹிரண்யகர்ப்பனல்ல.

பிரஜாபத்தியமதம்: எங்குங் கால், எங்குங் கையாகவிருக்கிறதே ஈசுரனானால் மரவட்டையும் ஈசுவரனாகவேண்டும்; ஆகையினாலே பிரஹ்மாவே ஈசுவரனல்லாமல் மற்றவன் ஈசுவரனல்ல.

வைஷ்ணவமதம்: இந்தப்பிரம்மாவும் விஷ்ணுவினுடைய நாபியிலே பிறந்தபடியினாலே விஷ்ணுவே ஈசுவரனென்று சொல்லும்.

சைவமதம்: சிவனுடையபாதம் விஷ்ணுமூர்த்தி காணாதபடியினாலே சிவனே ஈசுவரனென்று சொல்லும்.

காணாதிபத்தியமதம்: திரிபுரசங்காரத்திலே சிவனும் கணபதியைப் பூஜைபண்ணியபடியினாலே விக்நேசுவரனே ஈசுவரனென்று சொல்லும்.

புராணிகமதம்: இப்போது சொல்லப்பட்ட தேவதைகளெல்லாம் புண்ணியஸ்தலங்களிலே விளங்குகையினாலேஸ்தலங்களே ஈசுவரனென்று சொல்லும்.

தர்மசாஸ்திரம்: ஸ்தலங்களும் மரங்களினால் விளங்குகையினாலும், மூங்கில் அரசு எருக்கு முதலானவைகளை அவரவர் குலதேவதைகளாகப் பூசைபண்ணுவதனாலும் மரங்களே ஈசுவரனென்று சொல்லும்.

இப்படி இன்னும் அநேக மதவாதிகள், தங்கள் தங்கள் மதாபிமானத்தினாலே மந்திரவாதம் ரசவாதம் முதலான சாஸ்திரங்களைப் பற்றிப் பிரமிக்கின்றார்கள். இப்படி அஞ்ஞானத்தினால் சாஸ்திரகர்த்தாக்களலைந்தவழி சொன்னோம்.

வினா: ௬௦. இப்படி எல்லாச் சாஸ்திர கர்த்தாக்களும் வஸ்துநிர்ணயம் பண்ணமாட்டாமல் அலைந்தார்களானால் வஸ்துநிர்ணயம் உண்டாவதெப்படி?

விடை : ௪0. பிரமம் ஒன்றே பொருள், மற்றவையாவும் மாயாமயமென்னும் வேதாந்த விசாரத்தினாலே வஸ்து நிர்ணயமுண்டாம்.

வினா : ௪க. அப்படியானால் இந்த வாதிகளுக் கெல்லாம் விரோதமல்லவோ?

விடை : ௪க. ஒன்றே பொருளென்னும் வேதாந்தத்திற்கும், அதனையே குருடர் யானைகண்டாற்போலக் கண்டிருக்கிற இந்த வாதிகளுக்குஞ் சற்றும் விரோதமில்லை.

வினா : ௪உ. பிரமம் ஒன்றே உண்மைப்பொருள், மற்றவையாவும் மாயாமயமென்பதற்குப் பிரமாணம் யாது?

விடை : ௪உ. இப்பொருளைக் கூறும் முப்பத் திரண்டு உபநிஷத்துகளுமே பிரமாணமாம்.

வினா : ௪௩. இவ்வளவுஞ் சித்தினிலக்ஷணம் சொல்லப்பட்டது. இனி மாயைக்கு இலக்ஷணம் யாது?

விடை : ௪௩. மோக ஜட லக்ஷணமுள்ளதாம்.

வினா : ௪௪. இந்தப் பிரபஞ்சத்தில் மாயாலக்ஷணம் இரண்டினையும் பகுத்துக் காட்டவேண்டும்.

விடை : ௪௪. கடமுதலான பூதபௌதிகமெல்லாம் ஜடமாம்; சத்தென்றும் அசத்தென்றும் பகுத்தறியப் படாமை மோகமாம்.

வினா : ௪௫. ஜீவன் ஜகத்து ஈசுவரனென்னு மிவை எல்லாராலும் உண்மையாக நிச்சயப்பட்டிருத்தலால் மாயையென்பதெப்படி?

விடை : ௪௫. இந்த மாயாகற்பிதமெல்லாம் இலௌகிக திருஷ்டியிலே உண்மையாகவும், யுக்தியினாலே அநிர்வசநீயமாகவும், பிரஹ்மஞானிக்குக் காலத்திரயத்திலும் இல்லாததாகவும் இப்படி மூன்றுவிதமா யிருக்கும்.

வினா : ௪௬. இந்த மாயா கற்பிதப் பிரபஞ்ச மெல்லாம் எக்காலத்தில் உண்டு? எக்காலத்தில் இல்லை?

விடை : சசு. ஜாக்கிர சொப்பனங்களில் விரித்த சித்திர படம்போல் உண்டாயிருக்கும் ; சுழுத்தி மூர்ச்சை சமாதிகளில் சுருட்டின சித்திரபடம்போல இல்லாததாம்.

வினு : சஎ. இந்த மாயை சுதந்தரமோ ? பராதீனமோ?

விடை : சஎ. சைதன்னியத்தையின்றி விளங்காமையி ஞற் பராதீனமுமாம், அசங்கமாயிருக்கிற கூடஸ்த சைதன்னிய த்தை ஜட ஜகத்தாகவும், சிதாபாசர்களான ஜீவேசுரர்களாக வும் பண்ணுதலாற் சுதந்தரமுமாம்.

வினு : சஅ. அப்படியாஞல் மாயையினுலே பிரமத்திற்கு ச் சொரூபலக்ஷணங் கெடுமே?

விடை : சஅ. மாயை கூடஸ்தரைப் பற்ருமலே ஜீவ ஜகத்துக்களை யாக்குதலால் சொரூபலக்ஷணங் கெடாது.

வினு : சகூ. முன் பிரமத்தையே ஜீவ ஜகத்தாக்கிய தென்று கூறி, பின் பிரமத்தைப் பற்ருமற் செய்ததென்பது மாறன்ருே ?

விடை : சகூ. கூடாததைக் கூட்டுவிப்பதே மாயைக்குச் சுபாவமாகையால் விரோதமில்லை.

வினு : ருo. இப்படி மாயை கூடாததைக் கூட்டுவிப்ப தென்பது எப்படி ? அந்தச்சக்தி அதற்கு எதனுல் வந்தது ?

விடை : ருo. மாயையில் பிறந்தபூதங்களில் ஒன்றில் வெளியும், ஒன்றில் சலனமும், ஒன்றில் சூடும், ஒன்றில் குளிர் ச்சியும், ஒன்றில் கடினமுங் காணப்படுதலால், இந்தமாயை கூடாததைக் கூட்டுவிப்பதாம். இந்தச்சத்தி மாயைக்குச் சுபாவ மேயல்லாமல் ஒன்றினுல் வந்ததல்ல.

வினு : ருக. இந்த ஜகத்து மாயா மயமென்பதை யெல் லாரும் ஏன் அறியவில்லை ?

விடை : ருக. இந்திரஜாலக்காரனைக் காணுமளவும் இந் திரஜாலம் உண்மையாகத் தோற்றுவதுபோல, மாயைக் கதிஷ்

டானத்தை யறியுமளவும் மாயை யுண்மையாகத் தோற்றும்; அதிஷ்டானத்தை யறிந்தாற் பொய்யாய்ப்போம்.

வினா: ருஉ. சகல வாதிகளும் மாயையிற்றானே இது பொருள், அது பொருளென்று சங்கிப்பது என்னை?

விடை: ருஉ. சந்தேகசொரூபமாயிருக்கிற மாயைக்குப் பரிகாரந் தேடாமல் சங்கைக்குள் சங்கை பண்ணுவதற்கு அஞ்ஞானமே காரணமாம்.

வினா: ருங. ஆனால் இந்தமாயைக்குப் பரிகாரம் யாது?

விடை: ருங. இது பொருளல்ல, மாயாமயமென் றறிவதே பரிகாரமாம்.

வினா: ருச. கண்ணாரக்கண்டும் நிர்ணயிக்கப்படாத இந்திரஜாலம்போன்ற இந்த ஜகத்து மாயாமயமாகாமல் உண்மையாக விருப்பதென்னை?

விடை: ருச. சத்து அசத்தென்று இருவகை நிர்ணயத்திலும் அகப்படாத ஜகத்தை உண்மையென்று கொள்வதற்குக் காரணம் அறியாமையாம்.

வினா: ருரு. நீர் சொன்னதேயல்லாமல் முன் ஜகத்து மாயையென்று சொன்னவருண்டா?

விடை: ருரு. ஜடமாய்க் கர்ப்பவாசம்செய்த சுக்கிலமுஞ் சேதனம்போல வெளிப்பட்டுப் பெரியவன் சிறியவனென்று உண் டுடுத்திக் கண்டு கேட்டுத் திரிவதைவிட வேறு இந்திரஜாலம் யாதென்று வசிஷ்டர் சொல்லியிருக்கிறார். இந்தத்தேகம் போற்றான் ஆலமர முதலானவைகளுமாம். விதை யெங்கே வந்தது, மரம் எங்கேவந்ததென்று மயங்கவேண்டாம்; சகலமும் மாயையென்றே காணவேண்டுமென்று வியாசர் சொல்லியிருக்கிறார். மனதினாலே சிந்திக்கில் நிர்ணயமாகாத பொருளைத் தர்க்கிக்கலாகாதென்றும், நிர்ணயப்படாத ஜகத்திலே இதுபொருள் அதுபொருளென்று சங்கிக்கவேண்டியதில்லை, சகலமும்மாயை என்றே காணவேண்டுமென்றும் யாக்கியவல்கியர் சொன்னார்.

இத்தன்மையதென்று சிந்திக்கப்படாததை யுண்டாக்கும் சத்தி மாயையென் றெல்லோருஞ் சொல்லியிருக்கிறார்கள்.

வினா: ருசு. இந்தமாயைக்கு விதை யெங்கே காணலாம்?

விடை: ருசு. மரத்தையடக்கியிருக்கிற பீஜம்போலச் சாக்கிர சொப்பனபிரபஞ்சத்தை யடக்கியிருக்கிற மாயாபீஜத்தைச் சுழுத்தியில் எல்லாருங்காணலாம்.

வினா: ருஎ. சகல புந்திவாசனைகளும் மாயையில் அடங்கி யிருத்தற்கடையாளம் யாது?

விடை: ருஎ. மாயாப்பிரதிவிம்பர் மாயையிலே சகலவாசனையுங்கண்டு சர்வஞ்ஞரா யிருப்பதே அடையாளம்.

வினா: ருஅ. ஈசுவரஉபாதி யாது? ஜீவஉபாதி யாது? ஜீவேசுரர்கள் யாவர்? ஈசுரனுண்டென்று எதனால் அறிவது?

விடை: ருஅ. மேகம்போல விருக்கும் மாயை ஈசுவர உபாதி, மேகத்தின் திவலைபோல விருக்கும் புத்திவாசனைகள் ஜீவஉபாதி, திவலைமேகங்களிற் பிரதிபிம்பித்த ஆகாசம்போல விருப்பர் சிதாபாசர்கள். மேகாகாசம்போல ஈசுவரனை அநுமானத்தினால் அறியவேண்டும்.

வினா: ருகூ. இந்தப்புத்திவாசனையில் பிரதிபிம்பித்த சிதாபாசனையும் மாயாப்பிரதிபிம்பனாயிருக்கிற ஈசுரனையும் எவ்வாறு பகுத்துக்காண்பது?

விடை: ருகூ. வாசனையானது சிதாபாசனுடனே கூடிப் புத்திரூபமாய் முளைக்கும்போது சிதாபாசனை வெட்டவெளியாய்க்காணலாம்; ஈசுவரனைச் சர்வஞ்ஞன் அந்தரியாமி சர்வேசுரன் என்று வேதஞ்சொல்லக் கேட்டறியலாம்.

வினா: சுo. இரண்டுபேருஞ் சிதாபாசர்களானால் இவர்களுக்குத் தாரதம்மியம் யாது?

விடை: சுo. ஜீவர்கள் மாயையின் வசமாயுள்ளவர்கள், ஈசுரன் மாயையைத் தன்வசமாயுடையனென்பதே தாரதம்மியமாம்.

வினா : சுக. ஈசுவரனைச் சர்வஞ்ஞன் அந்தரியாமி சர்வே சுவரனென்பது எதனால்?

விடை : சுக. இவருக்கு உபாதியான மாயையினிடத்தில் சகலமு மிருத்தலால் சர்வஞ்ஞன் என்றும், சகவஜீவர்களுடைய புத்திகளுக்குள்ளுமிருந்து ஆட்டுகிறபடியினால் அந்தரியாமி யென்றும், இவரால் நியமிக்கப்பட்டது வேறொருவராலும் மாற்றப்படமாட்டாமையால் சர்வேசுவரன் என்றுஞ் சொல்லப்படுவர்.

வினா : சுஉ. ஈசுவரனுக்குச் சர்வஞ்ஞத்துவ முண்டானால் எல்லாராலும் ஏன் அநுபவிக்கப் படவில்லை?

விடை : சுஉ. வாசனைக ளெல்லாம் பரோக்ஷ மாதலால் அநுபவிக்கப்படவில்லை.

வினா : சுஙு. ஆனால் அந்தச் சர்வஞ்ஞத்தன்மையுளதென் றறிவதெப்படி?

விடை : சுஙு. சர்வபுத்திகளிலும் அந்தச் சர்வஞ்ஞத் தன்மையைக்கண்டு வாசனையின்கண் அநுமானிக்கவேண்டும்.

வினா : சுச. அந்தரியாமிக்கு இத்தனைக் குணங்களும் உண்டென்பதற்குப் பிரமாணம் யாது? இவருக்குச் சரீரம் யாது? இவர் கற்பித்ததே பிரபஞ்சத்திற்கு வழி யென்பதற்குப் பிரமாணம் யாது?

விடை : சுச. அந்தரியாமிக்கு வெகு குணமுண்டென்பதற்கு அந்தரியாமிப் பிராமணமென்னும் வேதம் பிரமாணமாம். புடவையில் நூல் உபாதானமாயிருப்பதுபோல எல்லாவற்றிலும் இவர் உபாதானமாயிருத்தலால் சகலமும் இவருக்குச் சரீரமாம். ஈசுவரன் சகல பூதங்களிலுமிருந்து தேகாதிப் பாவைகளை அபிமானக் கயிற்றைப்பூட்டி விதி நிஷேதவழியே ஆட்டுவிக்கிறானென்னும் கீதாவசனமும், இது தர்மமென்றறிவேன், இதில் பிரவிருத்தியுமில்லை, இது அமர்தமென்றறிவேன், இதைவிட்டுத் திரும்பவுமில்லை, யாரோ ஒருவ ராட்டுவிக்கிறாரென்னும் பாண்டவகீதையும் ஈசுவரன் கற்பித்ததே வழியென்பதற்குப் பிரமாணமாம்.

வினு : சுடு. சகலமும் இப்படி ஈசுவரனுலேயே இயக்கப் படுமொயின் புருஷனுடைய முயற்சி வேண்டியதில்லையா ?

விடை : சுடு. முயற்சியும் அவரவர் கர்மத்திற்கிடாக ஈசுவர சங்கற்பமேயாதலால் முயற்சி செய்யவேண்டியதேயாம்.

வினு : சுசு. கர்மத்தின் வழியே முயற்சி யுண்டாகின்றதெனின் ஈசுவரசங்கற்பம் வேண்டியதேன்?

விடை : சுசு. ஈசுவரப் பிரசாதங்கொண்டுதான் அசங்கனென்னும் ஞானம் வரவேண்டியதாயிருத்தலின் ஈசுவரானுக்கிரகமும் வேண்டும்.

வினு : சுஎ. ஈசுவரானுக்கிரகங்கொண்டு தான் அசங்கனென்னும் ஞானம் வந்ததனுற் பிரயோசனம் யாது ?

விடை : சுஎ. அவ்வளவினுலே முத்தியென்று வேதஞ் சொல்லுகிறது.

வினு: சுஅ. அந்தஅந்தரியாமி சிருஷ்டிக்கிற முறை யாது? அழிக்கிற முறை யாது ?

விடை : சுஅ. சித்திர படத்தை விரித்தாற்போலத் தம்மிடத்திற் பிரபஞ்சத்தை அவரவர் கர்மவசமாய்த் தோற்றுவிப்பதே சிருஷ்டி, சுருட்டின சித்திரபடம்போல அவரவர்கர்மத்தின் வழியே பிரபஞ்சத்தைத் தம்மிடத்தில் ஒடுக்குவதே பிரளயம்.

வினு: சுகூ. ஒரு ஈசுவரனே சித்திற்கும் ஜடத்திற்கும் எப்படிக் காரணமாவர் ?

விடை : சுகூ. சைதன்னியத்தன்மையால் சித்திற்குக் காரணமாவர், மாயா உபாதியால் ஜடத்திற்குக் காரணமாவர்.

வினு: எO. இப்படியானுற் பிரஹ்மமே ஜகத்காரணமென்று சுரேசுராசாரியர் கூறிய தென்னே ?

விடை : எO. கூடஸ்தரையுஞ் சீவனேயுஞ் அந்நியோந்நியாத்தியாசத்தினுல் ஒருமையாய்க் கண்டாற்போல, ஈசுவரனேயும் பிரமத்தையும் அவ்வத்தியாசத்தினுல் ஒன்ருகக்கண்டு கூறினுர்.

வினா: எக. அந்நியோந்நியாத்தியாசம் எப்படிப் பொருந்தும்?

விடை: எக. ஈசுவரனுடைய ஜகத்காரணத்துவம் பிரஹ்மத்தினிடத்திலும் பிரஹ்மத்தினுடைய சச்சிதாநந்த இலக்ஷணம் மாயாப் பிரதிபிம்பரிடத்திலும் அத்தியாசம் பண்ணப்பட்டுக் கஞ்சிபூசின படம்போலே ஒன்றாயிற்று.

வினா: எஉ. இவ்வுண்மையினை நீரறிந்தவகை யாது?

விடை: எஉ. ஆறு லிங்கங்களாலும் வேதாந்த விசாரத்தாலும் பிரஹ்மம் அசங்கமென்றும் மாயாப்பிரதிபிம்பரே சிருஷ்டிக்கிறவரென்றும் அறிந்தோம்.

வினா: எரு. சிருஷ்டித்த முறை யாது?

விடை: எரு. சுழுத்தியில் சொப்பனமுண்டாவதுபோல ஆநந்தமயராயிருந்த ஈசுவரனும் மாயையை விரியப்பார்த்து இரண்ணிய கர்ப்பரானார்.

வினா: எச. ஒரு வேதத்திலே ஒன்றினின்றும் ஒன்றுண்டாயிற்றென்று கிரமசிருஷ்டி சொல்லுகிறது; ஒரு வேதத்திலே ஒருமித்த சிருஷ்டி சொல்லுகிறது. இவற்றில் எது பிரமாணம்?

விடை: எச. இந்த இரண்டுவகைச் சிருஷ்டியாகிய சொப்பனமும் உள்ளதாகலின் இரண்டும் பிரமாணமாம்.

வினா: எரு. இரணியகர்ப்பசொரூபம் யாது?

விடை: எரு. சூக்ஷ்ம சரீர சமஷ்டி யபிமானியாகப் படத்திலே சூத்திர மிருப்பதுபோல எங்கு மிருப்பவராய் இச்சா ஞானக் கிரியையெனும் மூன்று சத்திகளை யுடையவர் இரண்யகர்ப்பர்.

வினா: எசு. இந்த இரண்யகர்ப்பம் எப்படிக் காணப்படும்?

விடை: எசு. சந்தியாகாலத்து இருளில் காணப்படும் உலகம்போலும் கரியினால் அச்சுக்கட்டினசித்திரபடம்போலும் எங்கு மொருங்கே குறுமுளையா யிருக்கும் பயிர்வகைபோலும்

ஈசுவரனுடைய சரீரமும் சூக்ஷ்ம சரீரங்களால் அழகாக எங்கும் ஒருங்கே லாஞ்சனை பண்ணப்பட்டுத்தோற்றும்.

வினா: எஎ. இந்தச் சூக்ஷ்ம சரீரந் தூலாவஸ்தையை யடைந்து தோற்றுவதெப்படி? விராட்டென்பது யாது?

விடை: எஎ. பஞ்சீகரணம் பண்ணப்பட்டு வெய்யிலிலே விளங்குகிற உலகம்போலவும், தீர்ந்த சித்திரபடம்போலவும் பழுத்த பயிர்வகை போலவும் ஸ்தூலித்து வெட்டவெளியாய்க் காணப்படுகிற ஸ்தூல சரீராதிப் பிரபஞ்சமே விராட்டாம்.

வினா: எஅ. பிரபஞ்சமே விராட்டென்பதற்குப் பிரமாணம் யாது? அவருக்கு அவயவங்களெவை? அவயவங்களைப் பூசித்தால் வரும் பயன் யாது?

விடை: எஅ. விசுவரூப அத்தியாயமும் புருஷ சூக்தவேதமும் பிரமாணம். பஞ்சமூர்த்திகள், வர்ணாச்சிரமமுடைய தேவாசுராதிகள், சராயுஜாதிகள், அரசுமுதலியன, நெல்முதலியன, மயில் முதலியன, நீர், கல், மண், கட்டை, வாச்சி, உளி முதலியனவாம். இவை ஈசுவரனது அவயவங்களாகலின் இவற்றையுபாசித்தால் உபாசித்தமூர்த்திக்கும் அதிகாரிக்கும் தக்கதாய்ப் பலன் வரும்.

வினா: எகூ. எல்லோரும் பூசிப்பது ஈசுவர அவயவமானல் எல்லோருக்கும் மோக்ஷம் ஏன் வரவில்லை?

விடை: எகூ. மாயிகத்தையுபாசித்தால் மாயிகபலமே யல்லாமல் மோக்ஷம் வராது?

வினா: அ0. மற்றெதனல் மோக்ஷம் வரும்?

விடை: அ0. பிரஹ்ம தத்துவ விசாரத்தினல் மோக்ஷம் வரவேண்டுமேயல்லாமல் மற்றெதனுலும் வராது.

வினா: அக. பிரஹ்மஞானமன்றிப் பிறவற்றால் சம்சாரம் போகாதோ?

விடை : அக. தான் விழித்தா லல்லாமற் றன்னுடைய சொப்பனம் போகாததுபோல, அத்துவிதப் பிரஹ்ம தத்துவத்தில் அஞ்ஞான கற்பிதமான ஜீவேசுவர ஜகத்தென்னும் சொப்பனமும் அதிஷ்டான ஞானத்தினுற் போகவேண்டும்.

வினு : அஉ. பிரஹ்மத்திற் கபின்னமான ஜீவேசுரர்களையுங் கற்பித ஜகத்துடன் சேர்க்கலாமா?

விடை : அஉ. அவர்களும் மாயாகற்பிதர்களாகலின் சேர்க்கலாம்.

வினு : அரு. இவர்களாற் கற்பிக்கப்பட்டவை எவை?

விடை: அரு. ஈக்ஷணமுதற் பிரவேசாந்தமான சிருஷ்டியாவும் ஈசுவரனுற் கற்பிக்கப்பட்டனவும், சாக்கிரமுதல் மோக்ஷ பரியந்தமான சம்சாரம் யாவும் சீவனுற் கற்பிக்கப்பட்டனவுமாம்.

வினு : அச. இவ்வாறு பிரஹ்ம மாத்திரமே யுண்மைப் பொருளானுல் வாதிகளெல்லாம் ஜீவேசுவரவிஷயத்தில் வாதம் புரிந்து மாயக் காரணம் யாது?

விடை : அச. அவர்களைப்பற்றிய அஞ்ஞானமேயாம்.

வினு : அரு. இந்தவாதிகள் கெட்டுப்போகலாமா? இந்தத்தத்துவத்தை அவர்களுக்கு ஏன் போதிக்கலாகாது?

விடை : அரு. பிராந்தர்களுக்குப் பக்குவம் வருவதற்கு முன் போதித்தால் இளைப்புமாத்திரம் மிஞ்சுமே யல்லாமல் அவர்கள் புத்தியில் ஏருது?

வினு : அசு. எந்தவாதிகள் எதனுல் பிராந்தர்களா யிருக்கிறுர்கள்?

விடை : அசு. லோகாயதன்முதல் சாங்கியன் பரியந்தஞ் சீவப்பிராந்தியி லலைந்தவர்கள்; யோகிமுதல் விருக்ஷார்ச்சகன் பரியந்தம் ஈசுரப்பிராந்தியில் அலைந்தவர்கள்.

வினு : அஎ. சாஸ்திர கர்த்தாக்களையும் பிராந்தர்களென்று சொல்லலாமோ?

விடை : அஎ. அத்வைதபிரஹ்மத்தை அறியாதபடியினல் அவர்களும் பிராந்தர்கள்தான். அவர்களுக்கு இகபரம்இரண்டு மில்லை.

வினு : அஅ. சீவவாதிகளோடு ஈசுரவாதிகளையும் பிராந் தர்களென்று சொல்லலாமோ?

விடை : அஅ. சொப்பனத்திலே பிக்ஷையெடுப்பவனிலும் இராஜாவாயிருப்பவன் அதிகமாயினும் விழித்தபின்பு இரண்டு சொப்பனமும் பொய்யாய்ப்போவதுபோல் இவ்விருவகை வாதி களுங் கற்பிதத்தில் தாரதன்மிய முடையவராயினும் ஞானம் வந்தவனைக் குறித்துப் பிராந்தர்களேயாவர்.

வினு : அகூ. மோக்ஷமடைய விரும்புவோன் இந்தவாதங் களை விசாரிக்க வேண்டியதில்லையோ?

விடை : அகூ. பூர்வபக்ஷமாய் விசாரித்துத் தள்ளவேண் டும்; சித்தாந்தமாய் விசாரிக்கப்படுவது வேதாந்தமேயாம்.

வினு : கூ0. சாங்கியம் யோகமிரண்டிலும் சீவனும் ஈசுர னும் சுத்த சைதன்னியமென்று சொல்லுதலால் அவற்றை ஏன் வேதாந்தத்திற் சேர்க்கலாகாது?

விடை : கூ0. சீவேசுவரர்களுக்குப் பேதஞ் சித்தமாயிருத் தலின் நம்முடைய சித்தாந்தத்தில் அவை சேரா.

வினு : கூக. உம்முடைய சித்தாத்தத்திலே தொம்பதத் திற்குந் தற்பதத்திற்கும் பேதமில்லையோ?

விடை : கூக. அத்துவிதத்தைப் போதிக்கவேண்டியதற் காக ஒருவாறு பிரித்துக்காட்டினதே யல்லாமல் அர்த்தபேதம் இல்லை.

வினு : கூஉ. அப்படியானல் இலக்ஷணையினற் பதார்த்த சோதனை ஏன் செய்யவேண்டும்?

விடை : கூஉ. அஞ்ஞானத்தினற் சீவேசுரர்களை வேருகக் கண்டிருக்கும் பிராந்தர்களுக்கு அந்தப்பிராந்தியைப் போக்கும் நிமித்தம் பதார்த்தசோதனை செய்து காட்டவேண்டும்.

வினா: கங. பதார்த்தசோதனையினால் இருவரையும் ஒருவராய்க் காண்பது எப்படி?

விடை: கங. உபாதி கற்பிதமான ஜலாகாசத்தையும், மேகாகாசத்தையும் விட்டு, இவற்றிற்கதிஷ்டானமாயுள்ள கடாகாசத்தையும் மஹாகாசத்தையும் ஒன்றென்று காண்பதுபோல் தொம்பத தற்பதங்களிலும் உபாதிகற்பிதமான ஜீவேசுவரர்களை விட்டு, இவர்களுக் கதிஷ்டானமான கூடஸ்தரையும் பிரஹ்மத்தையும் ஒன்றாகக்காண்பதே இலக்ஷணையினாற் பதார்த்த சோதனை செய்தலாம்.

வினா: கச. இவ்வாறு சாங்கியமதத்து ஜீவனையும் யோகமதத்து ஈசுரனையும் இரண்டு பதங்களுக்கும் அர்த்தமாக்கலாமோ?

விடை: கச. இங்ஙனமாயின் வேதவிரோதிகளாயிருக்கும் லோகாயதன் பரியந்தம் சேர்க்கலாம்.

வினா: கரு. சாங்கியயோக மதத்துள்ள விரோதம் யாது?

விடை: கரு. ஆத்மா அநேகமென்பதும், ஜகத்துச் சத்தியமென்பதும், ஈசுவரன் ஒருவனுண்டென்பதும் அத்துவிதற்கு விரோதம்.

வினா: கசு. அத்துவிதத்திற்கு ஒத்து வராவிட்டால் என்ன! ஜீவன் அசங்க சைதன்னியமென் றறிவதனால் முத்தியில்லையா?

விடை: கசு. ஜகத்தும் ஈசுரனும் நித்தியமென்பதனால் தான் அசங்கனென்றறிந்தாலும் முன்போலப் பிரகிருதியும் கூடும்; பின்புள்ள ஈசுவரனுஞ் சிக்ஷைபண்ணுவன். ஆகையால் மோக்ஷம் எப்படிவரும்?

வினா: கஎ. அசங்கனாயிருக்கிற ஆத்மாவிற்கு அவிவேகத்தினாற் பிரகிருதி சங்கம்வந்தது. விவேகம்வந்தபிற்பாடு இவனையெப்படிக்கூடும்?

விடை : கஎ. அப்படியானால் உன்னுடைய சித்தாந்தங் கெட்டு மாயாவாதத்தினால் வேதாந்தத்தில் பிரவேசித்தாய்.

வினா : கஅ. உம்முடைய அத்துவிதத்திற்கு ஆத்மாக்கள் நாநாவாகாதபோது இவன் முத்தன், இவன் பத்தன் என்னும் நிர்ணயம் எப்படி வந்தது ?

விடை : கஅ. இந்த நிர்ணயமெல்லாம் மாயைதானே கற்பிக்கும்.

வினா : கக. ஆத்மா ஒன்றேயாய் அத்துவிதீயமா யிருக்க அதனிடத்தில் மாயை எப்படி விகற்பத்தைக் கற்பிக்கும் ?

விடை : கக. கூடாததைக் கூட்டுவிப்பதே மாயைக்குச் சுபாவமாகையாற் சகலத்தையும் கற்பிக்கும். சுபாவத்திலே பந்தம் முத்தி பத்தன் முத்தன் என்பவை இல்லையென்று வேதஞ் சொல்லுகிறது.

வினா : க00. இவை யாவுஞ் சுபாவத்தி லில்லாவிடின் பின் எவ்வாறுண்டாகும் ?

விடை : க00. மாயையென்னும் காமதேனுவுக்குச் சீவேசுவரர்களென்று இரண்டுகன்றுக ளுண்டு ; வேண்டியபடி துவைதப்பால் கறக்கும். ஆகையினால் அத்துவிதம் ஒன்றொழிய இரண்டில்லை.

வினா : க0க. இப்படிப் பேதம்யாவும் மித்தையென் றறிந்து பரமாத்மா ஒருவரே உள்ளபொருளென் றறிந்திருக்கும் ஞானிகளும் விவகாரம் பண்ணக்கண்டோம். அதுகூடுமோ ?

விடை : க0க. முன்போலச் சத்தியமாயெண்ணி விவகாரம் பண்ணாமல் மித்தையென்று கண்டு விவகாரம் பண்ணுவதால் கூடும்.

வினா : க0உ. அஞ்ஞானி எப்படி விவகரிப்பன்? ஞானி எப்படி விவகரிப்பன் ?

விடை : க0உ. இகபரவியாபாரங்களெல்லாம் உண்மையென்றும், அத்துவிதம் இல்லையென்றும் கண்டு விவகரிப்பவன் அஞ்ஞானி; அத்துவிதமாத்திரம் உண்மைப்பொருளென்றும் மற்றுள்ளனவெல்லாம் மித்தையென்றுங் கண்டு விவகரிப்பன் ஞானி.

வினு : க0ங. அத்துவிதம் பிரத்தியக்ஷமாமோ ?

விடை : க0ங. நீ ஞானவடிவா யிருக்கின்றுயா ? இல்லையா ? ஞானவடிவமா யிருத்தலால் பிரத்தியக்ஷமே யென்பது பொருள்.

வினு : க0ச. உள்ளபடி ஏன் தோற்றவில்லை ?

விடை : க0ச. அது துவிதத்திலுஞ்சரியல்லவோ? துவிதத்தில் † ஸ்தாலி ‡ புலாக ¶ நியாயப்படி அத்துவிதமுஞ் சித்திக்கும்.

வினு : க0ரு. துவிதமழிந்தல்லவோ அத்துவிதஞ் சித்திக்கவேண்டும் ?

விடை : க0ரு. துவிதம் இருக்கும்போதே துவிதத்தைக் காணும் அறிவாகவே அத்துவிதஞ் சித்திக்கும்.

வினு : க0சு. ஞானம்வந்தும் இரண்டும் நிற்குமோ?

விடை : க0சு. அவற்றை யறிந்த சாக்ஷி மாத்திரமாக மிஞ்சுவதனுல் துவிதம் மாயாமயம், அத்துவிதமே நித்தியம்.

வினு : க0எ. ஒருகால் மீண்டும் துவிதஞ் சத்தியமாய்த் தோற்றினுல் செய்வதென்னை ?

விடை : க0எ. மீண்டும் அத்துவிதத்தைப் பரிசீலனஞ் செய்யவேண்டும் ?

---

† ஸ்தாலி என்றது பானை.

‡ புலாகம் என்றது சோறு.

¶ நியாயம் என்றது திருஷ்டாந்தம்.

வினா: க0அ. எத்தனைகாலம் பரிசீலனம் செய்யவேண்டும்?

விடை: க0அ. இந்தத் துக்கத்தைத் துவிதத்திலே செய்யும்; அத்துவிதத்தில் செய்யவேண்டாம்.

வினா: க0கூ. பசிதாகமுதலியன முன்போலக் காணப்படுகின்றனவே?

விடை: க0கூ. அவை எனக்கென்னும் அகங்காரிக்கேயல்லாமல் சாக்ஷியாகிற நமக்கில்லையென்று பகுத்தறி.

வினா: கக0. அத்தியாசத்தினாலே சித்துரூபத்திலுங் காணப்படுகிறதே?

விடை: கக0. இன்றுமுதல் அத்தியாசத்தைக் கைவிட்டு ஆத்ம அகங்காரங்களை வேறுகண்டிரு.

வினா: ககக. அத்தியாசஞ் சீக்கிரத்தில் வருவதுபோல விவேகம் ஏன் சீக்கிரத்தில் வரவில்லை?

விடை: ககக. அத்தியாசத்தைப்போல விவேகத்தையுந் திடப்படுத்தினால் வரும்.

வினா: ககஉ. துவிதம் மித்தையாய்ப் போவதுபோல அத்துவிதமும் மித்தையாய்ப் போகாதோ?

விடை: ககஉ. இவ்வாறு வரும், இவ்வாறு போமென்று நிர்ணயப்படாமல் மாயாமயமாயிருப்பது துவிதமோ அத்துவிதமோவென்று உன்னநுபவத்தைப் பார்.

வினா: ககங. துவிதம்போல அத்துவிதமும் அநித்தியமாமோ?

விடை: ககங. துவிதம் முன்னில்லை யென்பதை அத்துவிதங் கண்டாற்போல, அத்துவிதம் முன்னில்லையென்பதை யொன்றினாலுங் காணப்படாமையால் அத்துவிதமே நித்தியாபரோக்ஷமாம்.

வினா: ககச. இப்படி யறிந்துஞ் சிலர் திருப்தியடைந்து கவலைகெட்டுச் சந்தோஷியாமலிருப்பது ஏன்?

விடை: ககச. சாஸ்திரார்த்தத்தைத் தனக்காக்கிக் கொண்டு விசேஷமாய் நம்பாமல் மேலெழுந்த புத்தியாயிருத் தலினாலாம்.

வினா: ககரு. என்றைக்கு இருதயத்திலிருக்கிற ஆசை யெல்லாம் பற்றற விட்டுப்போயினவோ, அன்றைக்கு இவன் முத்தனென்று வேதஞ் சொல்லுகிறது. அது ஞானிகளிடத்திற் ஏன் காணப்படவில்லை?

விடை: ககரு. அகங்காரத்தையும் ஆத்மாவையும் ஒன்றாக க்கண்டுவரும் ஆசை கூடாதென்று அந்தவேதத்திற்கு அர்த்தம். அகங்காரக் கிரந்தியைவிட்டு ஆத்மாவை வேறுகண்டிருப்பவனு க்கு அகங்காரத்திற் கோடியாசை வந்தாலும் ஹானியில்லை.

வினா: ககசு. அகங்காரக்கிரந்தி விட்டுப்போன பின்பு அகங்காரத்தில் ஆசை வரலாமோ?

விடை: ககசு. பிராரத்துவ பலத்தினால் வரும்.

வினா: ககஎ. ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பிராரத்த பலஞ் சரியானால் இருவருக்கும் பேதம் யாது?

விடை: ககஎ. இவன் வித்துவான், இவன் மூடனென் பது வேதபரீக்ஷையினால் காணப்படுவதே யல்லாமல் சொரூப த்தினால் காணப்படாததுபோல அகங்காரக்கிரந்தி விடுபட்டத னால் ஞானி யென்றறிவதே யல்லாமல் பிராரத்வ சேட்டையி னால் பேதந் தெரியாது.

வினா: ககஅ. அகங்காரக்கிரந்தி போகாதிருக்கினும் பர மார்த்தமாய் ஆத்மாவுக்குச் சம்சாரமில்லையே?

விடை: ககஅ. இப்படி யறிந்தையாயின் நீயே கிருதார்த் தன்.

வினா: ககக. அகங்காரக் கிரந்தி விடுபட்டவனுக்கு அடையாளம் யாது?

விடை : ககக. பிரவிருத்தி நிவிருத்திகளில் ஒன்றைத் துவேஷிப்பது மில்லை, ஒன்றை வாஞ்சிப்பது மில்லையென்னும் கீதாவசனப்படி யிருப்பதுதான் அடையாளம்.

வினா : கஉ0. ஆனால் உபேக்ஷைசெய்வதே ஞானமா ?

விடை : கஉ0. கைகால் செத்துப்போனால் கர்மத்தில் உபேக்ஷைவரும். இத்தன்மைய வியாதியே தத்துவஞானமென்னும் உன் புத்தி தெளிவுடையதே.

வினா : கஉக. இப்படிப் பரிகாசம் பண்ணவேண்டிய தில்லை. சடபரதர் முதலானோர் உபேக்ஷையாயிருந்தது புராணத்திற் கேட்டிருக்கிறோமே ?

விடை : கஉக. பெண்கள் வாகனங்கள் முதலியவற்றோடு கூடி விளையாடினாலும் ஞானி சரீரத்தைத் தானென் றெண்ணானென்று சாமவேதஞ் சொல்லுகிறது.

வினா : கஉஉ. சடபரதர் காட்டிற்போனது ஞானநிமித்த மன்றோ ?

விடை : கஉஉ. அஞ்ஞானிகளது சங்கத்தைத் துறந்ததே யல்லாமல் கற்கள் மரங்கள்போலப் பிரவிருத்தி யற்றிருக்க வில்லை.

வினா : கஉங. இப்படி ஒவ்வொரு குணங்களைப் பிடித்து இதுவே ஞானமென்று உலகத்தவர் சொல்லுவது என்னை ?

விடை : கஉங. சாஸ்திர சித்தாந்த மறியாத மூடர்கள் ஒன்றிருக்க ஒன்று சொல்லுவார்கள். அறிந்தவன் அப்படிச் சொல்லான்.

வினா : கஉச. சாஸ்திர சித்தாந்தந்தான் யாது ?

விடை : கஉச. சகல சன்மார்க்கமும் சேர்ந்து வைராக்கியம் உபரதி ஞானம் என்று மூன்றுவிதமாயிருக்கும். இந்த மூன்று வகைக்கும் ஏது, சொரூபம், காரியம், அவதி, பலம் என்னும்ஐந்தும் வெவ்வேறாயிருக்கும். இவற்றை இன்னது இத்தன்மைத்தென்று பகுத்தறியாத அவிவேகி எல்லாவற்றையும் ஞானமென்று தடுமாறிச் சொல்லுவன்; பகுத்தறிந்தவன் அப்படிச்சொல்லான்.

வினா: கஉரு. வைராக்கியமுதலிய மூன்றற்கும், ஏது முதலாயின யாவை?

விடை: கஉரு. வைராக்கியத்திற்கு ஏது: விஷயத்தில் தோஷதிருஷ்டி, சொரூபம் ஒக்காளம், காரியம் திரும்ப ஆசை வராமலிருப்பது, அவதி பிரமலோக பரியந்தந் துரும்பாயெண்ணுதல், பலம் பிரமலோகம்: உபரதிக்கு ஏது: அஷ்டாங்க யோகம், சொரூபம் சித்தநிரோதம், காரியம் விவகாரக்ஷயம், அவதி சுழுத்தியைப்போலச் சரீரத்தை மறத்தல், பலம் பிரமலோக சாமீபம். ஞானத்திற்கு ஏது: சிரவண மனன நிதித்தியாசனம். சொரூபம்*தத்துவமித்திபாபாவனை, காரியம் திரும்ப அகங்காரக் கிரந்தி வாராமலிருக்கிறது, அவதி முன் தேகமே தானென்று நின்றாற்போலப் பிரமமே தானென்கிற திடம், பலம் மோக்ஷம்.

வினா: கஉசு. இந்த மூன்றும் இருத்தல் வேண்டாமோ?

விடை: கஉசு. இந்தமூன்று மிருந்தால் திடசௌக்கிய முண்டு. ஆனால் மோக்ஷத்திற்கு ஞானமாத்திரம் போதும். கர்ம வசத்தினாற் சிலரிடத்தில் மூன்றுமிருக்கும், சிலரிடத்தில் ஒன்றிரண்டிருக்கும். இதனால் மயங்கவேண்டியதில்லை.

வினா: கஉஎ. இப்படி மயங்காமல் நிலை நின்றவன் செய்யுங் காரியம் யாது?

விடை: கஉஎ. சின்மாத்திரமாயுள்ள தன்னிடத்தில் மாயையினாற் கற்பிக்கப்பட்டுள்ள ஜகமாகிய சித்திரத்தை யுபேக்ஷித்துச் சதாகாலமுஞ் சின்மாத்திரமாகவே காண்பது.

இந்தச்சித்திர தீபிகையை அநுசந்தானம் பண்ணிவருபவன் ஜகத்தைச் சித்திரமாகக் காண்பானே யல்லாமல் முன்போல உண்மையென்று கண்டு மயங்கான்.

முதலாவது சித்திரதீபம் முற்றிற்று.

ஆக வினாவிடைகள் கஉஎ.

---

* தத்துவமித்தியாபாவனை என்பது கூடஸ்த அகங்காரங்களின் பேதஞானம்.

இரண்டாவது திருப்தி தீபம்.

சகலலோகங்கட்கும் வேதாந்தமனைத்தும் பிரசித்தப் படுத்திப் புருஷார்த்தத்தைப் பகுத்த ஸ்ரீவித்தியாரண்ணிய ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம்.

புருஷனுனவன் ஆத்மாவை யிவரே யானென்றறிந்தால் பின் யாருக்குப் போகநிமித்தமாய் எந்தப் போகத்தைவேண்டிச் சரீரதாபப்படுவனென்னும் பிரகதாரண்ணிய உபநிஷத்திற்கு அர்த்தஞ் சொல்லுகின்றோம்.

வினு: க. இந்த உபநிஷத்து எதைச் சொல்லுகிறது?

விடை: க. சித்திர தீபிகையில் சொன்னபடி ஜகத்து மித்தையென்றும், உண்மையான சின்மாத்திரமே தானென்றுந் திடப்பட்ட சீவன்முத்தனுடைய திருப்தியைச் சொல்லுகிறது.

வினு: உ. இந்த வேதத்தில் புருஷன், யான், அவர் என்னும் சொற்களுக்கு அர்த்தம் யாது?

விடை: உ. சுபாவத்திலே சித்தைத்தவிர வேறு பொருளில்லாவிடினும் விவகாரத்திலே மாயாகற்பிதமாகச் சீவேசுரர்களென் றிரண்டுபேருண்டு; இவர்களிற் சிருஷ்டிமுதலானவைகளை யியற்றுபவன் ஈசுரன், சாக்கிரமுதல் மோக்ஷபரியந்தமான சம்சாரத்தை நிருவகிப்பவன் சீவன். இதில் அதிஷ்டானசைதன்னியத்தோடு கூடிய சீவனைப் புருஷனென்று சொல்லுகிறது.

வினு: ௩. அதிகாரியைச் சொல்லும் புருஷ சத்தத்திற்கு அதிஷ்டானத்தையுங் கூட்டி யர்த்தமாக்கலாமோ?

விடை: ௩. அதிஷ்டானத்தைத் தவிர ஆரோபத்திற்கு வேறு சொரூபமில்லாமையினாலும் விவகாரத்தில் இருவரும் ஒருவராகத் தோற்றுவதனாலும் முத்தியில் ஆரோபமும் அதிஷ்டானமாத்திரமாய்ப் போவதனாலும் இரண்டையுங் கூட்டிச் சொன்னோம்.

வினா: ௪. இந்தப்புருஷன் அதிஷ்டானப் பிரதானமாய் எப்படிப்பேசுவன்? ஆரோபப்பிரதானமாய் எப்படிப்பேசுவன்?

விடை: ௪. அதிஷ்டானம் ஆரோபத்தில் அடங்கியிருக்குங்காலத்தில் ஒருமைப்பாடாக நான்சம்சாரியென்று பேசுவன்; ஆரோபத்தைத்தள்ளி அதிஷ்டானமே தானாய்க் காணும்போது நான் அசங்கன் சின்மாத்திரனென்று பேசுவன்.

வினா: ௫. நான் அசங்கனென்னும்போது அசங்கனிடத்திலே அகங்காரங் கூடுமோ?

விடை: ௫. அகங்காரம் முக்கியம், அமுக்கியம் என இருவகைப்படும். அவற்றுள் அதிஷ்டான அகங்காரங்களைப் பகுத்துக்காணாத மூடர் ஒருமைப்பாடாக நான் வந்தேன், நான் போனேனென்று சிதாபாசனாகப்பேசுவது முக்கிய அகங்காரம். இலக்ஷணா விருத்தியினாலே பகுத்துக் கண்ட ஞானி நான் அசங்கன், சின்மாத்திரனென்று பேசுவதும், விவகாரத்தில் நான் வந்தேன், நான்போனேனென்று சிதாபாசனாகப் பேசுவதும் அமுக்கிய அகங்காரம். ஆதலின் இலக்கணையால் அகம் சத்தார்த்தமாக நானென்னு முணர்ச்சிக்கு இடமாதலால் அசங்கன் நானாகின்றேனென்னும் ஞானங்கூடும்.

வினா: ௬. அஞ்ஞானி ஞானியென்னும் இருவருஞ் சிதாபாசராகலின் இவர்களில் ஞானி தனக்கன்னியமாயுள்ள சாக்ஷியை நானென்னலாமோ?

விடை: ௬. முகாபாசத்திற்குக் கண்ணாடியில் பிரதிவிம்பிக்கும் முகம் சுபாவமன்று. அதைப்பார்க்கும்முகமேசுபாவமாம். அதுபோலச் சிதாபாசனுக்குஞ் சிதாபாசனாயுள்ள தான் மித்தையாயும், சாக்ஷியாய் மிஞ்சும் தான் சுபாவமாயுமிருத்தலால் தன்னுடைய சுபாவ சைதன்னியத்தை நானென்னலாம்.

வினா: ௭. சிதாபாசனாயுள்ளவன் மித்தையானால் அவன் அநுசந்தானம்பண்ணும் ஞானமும் மித்தையாமாகலின், அது சம்சாரத்தை எப்படிப் போக்கும்?

விடை : எ. இந்த ஞானம் மித்தையாயினும் சிதாபாசனுக்குமுன்னிருந்த சம்சாரம் பொய்யாகலின்அதைப்போக்குதற்கு இதுவே போதும்.

வினு : அ. புருஷசத்தத்திற்குஅர்த்தங்கேட்டோம்; இனி ஆத்மாவை யிவரே நானென்றறிவ தெப்படி?

விடை : அ. சந்தேக விபரீதமறத் தேகமே தானென்றிருந்தாற்போலச் சாக்ஷியே தானென்றறிகிற திடஞானமே இவரே தானென்றறிவது.

வினு : கூ. இவரே தானென்னும் சொல்பிரத்தியக்ஷத்தை யன்றோ சொல்லுகிறது? அறியப்பட்டதிற்குப் பரோக்ஷத்துவம் கூடுமோ?

விடை : கூ. பத்தாமவனுக்குத் தன்னிடத்திலேதானே அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷம், அபரோக்ஷம், துக்கநிவிருத்தி, தடையற்றவானந்தம் என்னும் ஏழவஸ்தையுங் கண்டதுபோல ஆத்மாவினிடத்திலும் ஏழவஸ்தையும் கூடும்.

வினு: க0. தசமனிடத்தினும்ஆத்மாவினிடத்திலும் இந்த ஏழவஸ்தையும் அநுபவமாகக் காட்டும்.

விடை : க0. தசமன் ஒன்பதுபேரையும் எண்ணினவுடனே பத்தாமவனைக் காணாததே அஞ்ஞானம்; பத்தாமவனைக் காணோம், அவனில்லையென்பதே ஆவரணம். ஆற்றோடேபோனானென்றழுவதே விக்ஷேபம். ஆப்தன் உபதேசத்தினால் சுவர்க்காதிலோகம் உண்டென்றறிவதுபோலப் பத்தாமவன் இருக்கிறானென்றறிவது பரோக்ஷஞானம். நீயே பத்தாமவனென்று ஆப்தன்எண்ணிக் காட்ட அறிந்ததே அபரோக்ஷஞானம். முன் இறந்தானென்றழுத அழுகைபோனதே துக்கநிவிருத்தி. பத்தாமவனைத் தானாகக்கண்ட சந்தோஷமே தடையற்ற ஆநந்தம். இவ்வாறே ஆத்மாவினிடத்திலும் வருமாறு:—

சிதாபாசன் அநாதிசம்சாரத்திலழுந்தித் தன்னுடைய சுபாவத்தை விசாரியாமல் உபேக்ஷையாயிருப்பதே அஞ்ஞானம். மார்க்க மல்லாத மார்க்கத்திலே விசாரித்து ஆத்மாவுண்டானாற் றோற்றாதோ, இல்லையென்றறிவதே ஆவரணம். சரீரத்திரயத்தையும் சிதாபாசனையுந் தானாகக்கண்டதே விக்ஷேபம். ஆப்தன் உபதேசத்தினாற் பிரமமுண்டென் றறிவதே பரோக்ஷஞானம். வேதாந்த விசாரத்தினால் அந்தப் பிரஹ்மம் நானென்றறிவதே அபரோக்ஷ ஞானம். நான்கர்த்தா போக்தா வல்லனென்று ஒழிந்ததே துக்க நிவிருத்தி, செய்யத்தக்கனவெல்லாஞ் செய்து முடிந்தன, அடையவேண்டியன வெல்லாம் அடைந்து முடிந்தன வென்னும் சந்தோஷமே தடையற்ற ஆநந்தம்.

வினா: ௧௧. இவற்றுள் பந்தப்படுத்தும் அவஸ்தைகள் எவை? மோக்ஷத்தைக் கொடுக்கும் அவஸ்தைகள் எவை?

விடை: ௧௧. முன்னைய மூன்றும் பந்தத்தைக் கொடுக்கும், பின்னைய நான்கும் மோக்ஷத்தைக் கொடுக்கும்.

வினா: ௧௨. முன்னைய மூன்றனுள் எந்தெந்த அவஸ்தை எந்தெந்த அநர்த்தங்களைக் கொடுக்கும்?

விடை: ௧௨. ஆத்மாவை நானறியே னென்னும் உதாசீனமே அஞ்ஞானத்தினால் வந்த அநர்த்தம். அமார்க்கத்திலே விசாரித்துக் கூடஸ்த ரிருந்தாற் றோற்றாரா, இல்லையென்னும் விபரீதமே ஆவரணத்தினால் வந்த அநர்த்தம். இகபரத்தைக் குறித்துச் செய்தொழி லெல்லாம் நம்முடைய தொழில்தானே, புண்ணியபாவ பலங்களும் நம்மை விடா வென்னும் நடுக்கமே விக்ஷேபத்தினால் வந்த அநர்த்தம். இப்படி மூன்றவஸ்தைகளும் அநர்த்தத்தைக் கொடுக்கும்.

வினா: ௧௩. அஞ்ஞானமும் ஆவரணமும் விக்ஷேபத்திற்கு முற்பட்டன வாதலால் ஏழவஸ்தையுஞ் சிதாபாசனுக்கென்று சொல்ல லாகாது; விக்ஷேபங் காரியப்படுவதற்குமுன் காரணரூபமாய்ப் பிரஹ்மத்தினிடத்திலே யிருந்ததென ஏன் சொல்ல லாகாது?

விடை : ௧௩. பிரஹ்மம் நிர்விகாரமாகலின், அதனிடத்தில் இருக்குமென்னலாகாது; சிதாபாச னிடத்திற்றான் முன் இரண்டவஸ்தையும் வாசனா ரூபமாயிருந்தன. ஆகையினால் ஏழவஸ்தையுஞ் சிதாபாசனுக்கேயாம்; ஆத்மாவுக்கில்லை.

வினா : ௧௪. பூர்வாசாரிக ளெல்லோரும் அஞ்ஞானத்திற் காதாரஞ் சிதாபாசனென்று சொல்லாமல் பிரஹ்மமென்று சொன்னதென்னை ?

விடை : ௧௪. ஆரோபத்திற்கு அதிஷ்டானம் பிரஹ்மமாதலால் எல்லாம் பிரஹ்மத்திலாரோபமென்றுசொன்னார்கள். நாம் அனுபவத்தினால் அவஸ்தை யெல்லாஞ் சிதாபாசனுக்கென்று சொன்னோம்.

வினா : ௧௫. இந்த ஏழவஸ்தையுஞ் சிதாபாசனிடத்தில் அநுபவமாய்க் காட்டவேண்டும்.

விடை: ௧௫. நான் சம்சாரி, நான் பரோக்ஷஞானி, நான் விஞ்ஞானி, நான் துக்கமற்றவன், நான் கிருதகிருத்தியன் என்னும் விக்ஷேப முதல் ஐந்தவஸ்தையுஞ் சிதாபாசனே யநுபவிக்கக்கண்டதுபோல, நான் அஞ்ஞானி, என் திருஷ்டிக்குப் பிரஹ்மமில்லை யென்னும் முன் இரண்டவஸ்தையுஞ் சிதாபாசனே யநுபவிக்கக் கண்டோம்.

வினா : ௧௬. இனி, மேல் அவஸ்தைகள் நான்கும் மோக்ஷத்தைத் தருவ தெப்படி ?

விடை : ௧௬. பரோக்ஷ ஞானத்தினால் அசத்தாவரணமும், அபரோக்ஷ ஞானத்தினால் அசித்தாவரணமும் மூலாஞ்ஞானத்தோடு நஷ்டமானபடியினாற் பிரஹ்மமே நாமென்று வெட்டவெளியாய்த் தோற்றுதலால், ஆரோபிக்கப்பட்ட ஜீவத்துவம் நஷ்டமானவுடன் கர்த்தத்துவ முதலான சகல துக்கமும் விட்டுப்போம். சகல சம்சாரமும் நிவர்த்தியானவுடனே நான் நித்தியமுத்தனென்னும் கெம்பீரத்தால் தடையற்ற ஆனந்தம் வரும். இப்படி நாலவஸ்தைகளும் மோக்ஷத்தைத் தருகின்றன.

வினா: ௧எ. பிரஹ்மம் சுயம்பிரகாசமானாற் பரோக்ஷ ஞானத்திற்கு எப்படி விஷயமாகும்?

விடை: ௧எ. பிரஹ்மம் உண்டென்று பிரகாசித்தலால் விஷயமாகலாம்.

வினா: ௧அ. சுயம்பிரகாசமானால் தானாய் விளங்கவேண்டுமே யல்லாமல் பிரஹ்மம் உண்டென்று விளங்கலாமா? அதனால் அந்தப் பரோக்ஷஞானம் அப்பிரமாணமன்றோ?

விடை: ௧அ. அப்பிரமாண மென்றல் முன் நிர்ணயத்திற்குஅழிவுவந்ததனாலா? கண்ணாரக் காணாததனாலா? தாறுமாறாயறிந்ததனாலா? ஏகதேசமாய்க் கண்டதனாலா? இந்த நான்கு வகையில் ஒன்றைக் கண்டு அப்பிரமாணமென்னல்வேண்டும். ஆனாற் பரோக்ஷஞானத்திற்கு இந்த நான்குவகையு மில்லை.

வினா: ௧௯. இந்த நான்குவகைத் தூஷணங்களும் இல்லையென்ப தெப்படி?

விடை: ௧௯. பிரஹ்ம மில்லையென் றெப்பிரமாணத்தாலுங் காணாமையினால் முன் நிர்ணயத்திற் கழிவில்லை, கண்ணாரக் காணாமையால் பரோக்ஷ ஞானம் அப்பிரமாண மெனின், சுவர்க்காதி ஞானமும் அப்பிரமாணமாதல் வேண்டும். பிரத்தியக்ஷமாகப் போவதைப்பரோக்ஷ மென்றதனால் பிராந்தியென்பது கூடாது; ஏகதேசங் கண்டது கொண்டு அப்பிரமாண மெனின் கடஞான முதலாயின பிராந்தியாகவேண்டும். ஆதலாற் பரோக்ஷஞானத்திற் கொரு தூஷணமு மில்லை.

வினா: ௨0. நிரம்ஸ வஸ்துவினிடத்தில் அம்ஸகற்பனை யெப்படி வந்தது?

விடை: ௨0. தன்னைக் குறித்தில்லாவிடினுந் தள்ளப்படும் உபாதியை முன்னிட்டிருக்கின்றது.

வினா: ௨௧. உபாதியை முன்னிட்டு எப்படி யிருக்கும்?

விடை: ௨௧. பரோக்ஷஞானத்தினால் அசத்தென்னும்அம்ஸந் தள்ளப்படுகின்றது; பிரத்தியக்ஷ ஞானத்தினால் அபானும்ஸந் தள்ளப்படுகின்றது.

வினா : உஉ. பிரத்தியக்ஷஞானத்திற்கு ஹானியில்லையோ?

விடை : உஉ. பத்தாமவன் தானே யென்று கண்டபின் முன் கண்ட வொன்பது பேர்களுக்குள் பத்தாமவன் இல்லையென்று கண்டதுபோல, ஆத்மாவே பிரஹ்மமென்று கண்டபின்பு முன் தானாக விவகரிக்கப்பட்ட அகங்காரத்தைத் தானல்லவென்று விலக்குவதேயல்லாமல் நான் பிரஹ்மமென்னும் பிரத்தியக்ஷ ஞானம் கெடாது.

வினா : உங. அவாந்தர வாக்கியத்தினால் பரோக்ஷ ஞானமும், பின் மஹாவாக்கிய விசாரத்தினாற் பிரத்தியக்ஷஞானமும் வருமென்று எங்கே சொல்லி யிருக்கிறது?

விடை : உங. உத்தாலகர் சுவேதகேதுவுக்கு முன் பரோக்ஷ ஞானஞ் சொல்லிப் பின்பு ஒன்பதாந் தரம் பிரத்தியக்ஷ ஞானஞ் சொன்னாரென்று சாமவேதத்திலும், வருணன் பிருகுவுக்கு முன்னர்ப் பரோக்ஷ ஞானஞ் சொல்லிப் பின் ஐந்தாமுறையில் பிரத்தியக்ஷ ஞானஞ் சொன்னாரென்று எசுர்வேதத்திலும், தேவேந்திரன் முன் அவாந்தர வாக்கியத்தினாற் பிரஹ்மத்தைப் பரோக்ஷமாயறிந்து பின் அபரோக்ஷமா யறிந்தானென்று இருக்குவேதத்திலுஞ் சொல்லியிருக்கிறது. இப்படி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளும் வாக்கிய விருத்தியில் விவரித்திருக்கின்றார்.

வினா : உச. மஹா வாக்கிய விசாரத்தினால் அபரோக்ஷ ஞானம் வருமென்பதை வாக்கிய விருத்தியிலே யெப்படி வெளி செய்தார்.

விடை : உச. அகங்காரமுங் கூடஸ்தருந் தொம்பதத்திற் கர்த்தமென்றும் பரோக்ஷமாய் மாயா உபாதியை யுடைய ஜகத் காரண சைதன்னியமும் பிரமமுந் தற்பதத்திற்கு அர்த்தமென்றும் இரண்டும் விருத்தமாதலால் அவனே யிவன், இவனே யவனென்னும் வாக்கியத்திற்போலப் பாகத்தியாகலட்சணையினாலே கூடஸ்தரே பிரஹ்மம், பிரஹ்மமே கூடஸ்தரென் றறிந்த

வுடனே இதுவரைக்கும் நாம் பிரஹ்ம மல்லவென்றிருந்த புத்தியும், ஈசுவரசைதன்னியம் பரோக்ஷமென்றிருந்த புத்தியும் இருந்தவிடம் இன்னதென்று தெரியாமற்போம். ஆதலால் அபரோக்ஷ ஞானத்திற்கு மஹாவாக்கியமே காரணமென்று சொன்னார்.

வினா : உ௫. வாக்கியத்தினாற் றோன்றிய ஞானம் பரோக்ஷமாகுமே யல்லாமற் பிரத்தியக்ஷமாகுமா?

விடை : உ௫. வட்டிக் காசைப்பட்டு முதலும் இழந்தானென்னும் பழமொழிபோலப் பிரஹ்மமாக வேண்டுமென்றிருந்த சீவனுக்குச் சுதசித்தமாக விருந்த பிரத்தியக்ஷமும் போமென்பது நகைப்பிற்கிடனாம். நீயே தசமனென்ற சொல் அவனைப் பிரத்தியக்ஷமாய்க் காட்டவில்லையா?

வினா : உ௬. அந்தக்கரண உபாதியிருத்தலால் சீவனைப் பிரத்தியக்ஷமாய்க் காணலாம்; நிருபாதியா யிருக்கிற பிரஹ்மம் எப்படிப் பிரத்தியக்ஷமாகும்?

விடை : உ௬. இரும்பு பொன்னென்பதனால் விலங்கென்பது போகாததுபோல அந்தக் கரணக் கூட்டரவே சீவ உபாதியும் அதனைத் தவிர்வதே பிரஹ்ம உபாதியுமாம்.

வினா : உ௭. நானென்பது முற்றுந் தள்ளப்பட்ட பின் நான் பிரஹ்மமென்னும் ஞானம் எப்படி வரும்?

விடை : உ௭. நானென்பது முற்றுந் தள்ளப்படாமல் உபாதிமாத்திரந் தள்ளப்பட்டுச் சைதன்னியந் தள்ளப்படாமையினால் நான் பிரஹ்மமென்னும் அறிவு வரலாம்.

வினா : உ௮. சாக்ஷி சுயம்பிரகாசமானால் விருத்திக்கு விஷயமாகலாகாது, ஆகுமாயின் பிரஹ்மம் விருத்தியிற் சிதாபாசனானு மறியப்பட்டுச் சடமாகுமே?

விடை : உ௮. கடத்தைப் பார்க்க விளங்குங் கண்ணும் வேண்டும்; விளக்கைப் பார்க்கக் கண்மாத்திரம் போதும். அதுபோல அப்பிரகாசமான விஷயத்தை யறியுமிடத்து விஷயாஞ்ஞானத்தைப் போக்க விருத்தியும் அதனை யறியச் சிதாபாசனும் வேண்டும். சொப்பிரகாசமான பிரஹ்மத்தை யறியு

மிடத்து அஞ்ஞானத்தைப் போக்க விருத்தியே போதும், சிதா பாசன் வேண்டியதில்லை; சிதாபாஸன் இருந்தாலும் வெய்யி லில் விளக்குப்போலக் குன்றிப் பிரஹ்மத்தில் இலயமாய்ப் போவன். விருத்தி * வியாப்தி யுண்டு, சிதாபாசனது பல வியாப்தி யில்லையென்று வேதமுஞ் சொல்லுகிறது. இந்த அப ரோக்ஷஞானமே இதுவே நானென்னும் வேதத்திற்குஅர்த்தம்.

வினு: உகூ. ஸ்ரீ சங்கராசாரியர் பலகாலுஞ் சிரவணம் பண்ணச்சொல்லி விதித்திருத்தலாற் பிரத்தியக்ஷஞானந் திட மன்றோ?

விடை: உகூ. வேதபேத காமபேதங்களால் கர்மபேதம் வகுக்கப்பட்டதுபோல ஞானபேதம் வாராதென்பதை ஆறுலிங் கங்களாலுஞ் சகல வேதத்திற்கும் அர்த்தவிசாரம் பண்ணச் சொன்னார்; எல்லா வேதத்திலும் ஒருபடித்தாய்க்கண்ட இந்த ஞானத்திற்கு விபரீத பாவனை போவதற்கு மனனம் பண்ணச் சொன்னார்.

வினு: ௩0. விபரீதபாவனை யாது?

விடை: ௩0. தகப்பனிடத்திற் சத்துரு புத்தி பண்ணு வதுபோல, தேகமே நான், பிரபஞ்சம் சத்தியமென்னும் நிச் சயம் விபரீதபாவனை.

வினு: ௩க. இந்த விபரீதபாவனைக்குக் காரணம் யாது?

விடை: ௩க. வெகு ஜன்மமுதற் செய்துவந்த ஜன்மாந் தர வாசனையே.

வினு: ௩உ. இந்த விபரீத பாவனை எதனுற் போம்?

விடை: ௩உ. நானே சத்தியமாயிருக்கிற பிரஹ்மம், தேகா திப் பிரபஞ்சம் மித்தை யென்னும் தத்துவபாவனையாற் போம்.

வினு: ௩௩. தத்துவபாவனை பண்ணும் முறை யாது?

விடை: ௩௩. பிரஹ்மத்தைப் பலகாலும் ஏகாந்தத்திலிருந்து சிந்தனை செய்வதும், ஒரு முமுக்ஷுவரின் அவனுக்கு அதனையே

* வியாப்தி-விஷயத்தன்மை.

போதிப்பதும், சமானுப்பியாசிவரின் ஒருவருக்கொருவர் அதனையே போதித்துக்கொள்வதுமான இதனைப் பிரஹ்மாப்பியாசமென்று பெரியோர் சொல்லுவர்.

வினா: ௩௪. எந்நேரமும் இதேவேலையா யிருந்தால் நிருவாகம் எப்படி நடக்கும்?

விடை: ௩௪. தத்துவவிசாரம் பண்ணுபவனுடைய கர்ம முழுவதையும் ஈசுவரனே நிர்வகித்துக்கொள்வன்.

வினா: ௩௫. தத்துவபாவனைக்குக் காரணம் யாது?

விடை: ௩௫. ஏகாக்கிரசித்தமே.

வினா: ௩௬. அந்த ஏகாக்கிரம் எதனால் வரும்?

விடை: ௩௬. ஈசுர உபாசனையினால்.

வினா: ௩௭. மந்திர ஜபம்போலவும் மூர்த்தித் தியானம் போலவும் தத்துவபாவனை பண்ணுதற்கு நியமம் உண்டோ?

விடை: ௩௭. மந்திர ஜப முதலானவைகட்குத் திருஷ்ட பலமில்லாமையினால்நியமமும், நியமந்தப்பினற் பிரத்தியவாயமுமுண்டு. போசனம் பண்ணுவது பசியைப் போக்குவதுபோலத் தத்துவபாவனையும் விபரீதபாவனையைப் போக்கும். திருஷ்ட பலமாதலால் நியமம் வேண்டியதில்லை.

வினா: ௩௮. பிரஹ்மாப்பியாசம் பலப்படச் செய்வது பிரயாசையன்றோ?

விடை: ௩௮. சஞ்சலமனதிற்கு நியமம்பூண்ட ஜபமும், வேறொன்றைச் சற்று நினைத்தாலுங் கெட்டுப்போகும் மூர்த்தித்தியானமுமே பிரயாசையல்லாற் கூத்துப் பார்ப்பதுபோல வெகுவிதமா யெடுத்துக்காட்டும் உச்சாக கதைகளோடு கூடிய பிரஹ்மாப்பியாசம் பிரயாசையன்று, மனதிற்கு விநோதமே!

வினா: ௩௯. மனது சஞ்சலமென்றதற்குப் பிரமாணங்கள் யாவை?

விடை: ௩௯. தான் போனதே வழியாய்ச் சஞ்சலமே சுபாவமாயிருக்கும் மனதை நிறுத்துவது வாயுவை நிறுத்துவதற்கு

ச் சமானமாமென்னும் கீதாவசனமும், சமுத்திரத்தைக் குடித்தாலும் நெருப்பை விழுங்கினாலும் மேருவைப் பெயர்த்தாலும் மனதை நிறுத்தமுடியாதென்னும் வாசிஷ்டமும் பிரமாணங்களாம்.

வினா: ௪0. விக்ஷேபமுள்ள மனதிற்குச் சின்மாத்திரமே ஆத்மா, மற்றுள்ளவெல்லாம் மித்தையென்னும் நிதித்தியாசனம் எப்படிக் கூடும்?

விடை: ௪0. காவியம், தர்க்கம், செட்டு, வேளாண்மைகளில் விழுந்த மனதிற்குக் கூடாது.

வினா: ௪௧. அப்படியானால் போஜனாதி வியவகாரங்களும் விக்ஷேபமன்றோ?

விடை: ௪௧. சொற்பவிக்ஷேபமாகிய போஜனாதிகள் அநுசந்தானத்தைக் கெடுக்காமையினால் விக்ஷேபமன்று. அவையே பிரதானமா யிழுத்துக்கொண்டுசெல்லும் தர்க்கமுதலானவை தத்துவத்தைக் கெடுத்தலால் இவையே கனவிக்ஷேபம். ஆதலால் அந்நிய வித்தைக்கு இடங்கொடுக்கலாகாது.

வினா: ௪௨. இப்படி யெல்லா வித்தையையும் விட்டுவிட்டாற் சீவிப்பது எப்படி?

விடை: ௪௨. போசனத்தை விடச்சொன்னாற் சீவிக்கமுடியாதேயன்றி, அந்நியசாஸ்திரத்தை விடச்சொன்னால் எப்படிச் சீவிக்கிறதென்னும் துராக்கிரகத்தை விட்டுவிடுக.

வினா: ௪௩. ஞானியாயிருந்த ஜனகர் ராச்சியபாரம் பண்ணவில்லையா?

விடை: ௪௩. ஜனகர் திடஞானத்தினால் ராச்சியபாரம் பண்ணினார்; உனக்குந் திடஞானமுண்டானால் பிராரத்தவசத்தினால் ஏற்படும் தர்க்கபாட முதலானவைகளைச் செய்யலாம்.

வினா: ௪௪. இப்படிப் பிராரத்தமென்றே அநாசாரத்தைப் பண்ணலாமா?

விடை: சச. கர்மத்தை யொருவராலும் தடுக்க முடியாது.

வினு: சரு. ஆனல் ஞானிக்கும் மூடனுக்கும் உள்ள பேதம் யாது?

விடை: சரு. வழிப்போக்கர் இருவருக்கும் தங்குமூர் சமமானலும் அறிந்தவன் திடமாய்ப்போக அறியாதவன் ஏங்கிக்கொண்டு போவதுபோல, ஞானிக்கும்அஞ்ஞானிக்கும் பிராரத்தஞ் சரியானலும் ஞானி தான் அகர்த்தாவென்று திடமாயிருப்பன், அஞ்ஞானி யேங்கிச்சாவன். இதுதான் பேதம்.

வினு: சசு. ஆத்மாவை இதுவே நானென்று அபரோக்ஷமாயறியின், யாருக்குப் போகநிமித்தமா யெந்தப்போகத்தைக் குறித்துச் சரீரதாபப்படுவனென்னும் வாக்கியத்திற்கு அர்த்தம் யாது?

விடை: சசு. சாக்ஷாத்காரம் வந்தவனுக்கு விஷயமும் புசிப்பவனு மில்லை.

வினு: சஎ. பிராரத்தபோகம் புசிக்குங்காலத்து இந்த இருவகையு மில்லையென்ப தெப்படி?

விடை: சஎ. இந்திரசாலத்திற் கந்தர்வ நகரத்தைப் பார்க்கிறவன் அங்குள்ள எப்போகத்தையும் இச்சியாமற் சிரித்துவிட்டுப் போவதுபோலச் சாக்ஷாத்காரம் வந்தவனுக்குச் சகத்துப் பொய்யாய்போவதனல் விஷயமும் புசிப்பவனும் இல்லாமல் எண்ணெயற்ற விளக்குப்போல ஆசை சங்கற்பங்களெல்லாம் அணைந்துபோம்.

வினு: சஅ. பிராரத்த போகத்தைப் புசித்தால் ஹானி என்னை?

விடை: சஅ. ஹானியொன்றும் இல்லை. ஆனல் ஞானி தோஷ திருஷ்டியினலே திடப்படப் புசிக்கமாட்டான்.

வினு: சகூ. விஷயத்தில் எந்தெந்தத்தோஷங்கள் இருக்கின்றன?

விடை: சகூ. அர்த்தத்தைத் தேடுங்காலத்தும் இரக்ஷிக்குங்காலத்துந் துக்கமேயொழியச் சுகம் இல்லை. மலம் மூத்திரம் நரம்பு என்பு தசைகளினுல் நிருமிக்கப்பட்டுள்ள ஸ்திரீ பிண்டத்தில் நலமுடையது யாது? பசித்தாலும், ஒருவன் விஷத்தைத் தின்னுததுபோல் ஞானியும் இதனை விரும்பான். தோஷவிஷயம் பிராரத்தத்தினுற் புசிக்க நேர்ந்தாலுங் கிலேசத்துடன் புசிப்பானே யல்லாமற் சந்தோஷத்துடன் புசியான்.

வினு: ருo. புசிக்குங்கால் உண்டாகும் கிலேசம் யாது?

விடை: ருo. இன்னும் இந்தக்கர்மந் தொலையவில்லையே யென்னும் கிலேசம்.

வினு: ருக. உம்முடைய பிரஹ்மஞானமும் இப்படிக் கிலேசமாயிற்ருே?

விடை: ருக. இது சம்சார தாப விரத்தியே யல்லாமற் கிலேசமன்று.

வினு: ருஉ. இந்த விரத்தி எதனுல் வந்தது?

விடை: ருஉ. ஜகத்துப் பிராந்தியென்னும் திடஞானத்தினுல் வந்தது; அதனுல் ஞானி கிடைத்ததுகொண்டு திருப்தியடைவன். அஞ்ஞானி யெத்தனை போகங் கிடைத்தாலுந் திருப்தியடையான்.

வினு: ருரு. அஞ்ஞானிக்குப் போகமெல்லாம் புசித்த பின்னுயினும் திருப்தி வராதோ?

விடை: ருரு. மேன்மேலும் நெய்யை விடுவதனுல் அக்கினி யணையுமாயின் அஞ்ஞானிக்கும் போகத்தில் ஆசை யடங்கும். (அடங்காதென்பது கருத்து)

வினு: ருச. அவர்களுக்கு ஆசையடங்குவதெப்படி?

விடை: ருச. வைராக்கியத்தினுல் ஆசையடங்கும்.

வினு: ருடு. ஞானியுங் கர்ம வசத்தினுற் கிடைத்த போகம் புசிக்கும் வழியே யழுந்திப்போகானே?

விடை : ௫௫. தோல்வியடைந்த இராசன் ஒரு கிராமத்திஞல் சந்தோஷிப்பதுபோல ஞானியுங் கிடைத்ததுகொண்டு சந்தோஷிப்பன். அறிந்து திருடும் திருட்டு விநோதமாவது போல அந்தப்போகம் மேன்மேலுங் காம சங்கற்பத்தை யுண்டாக்கமாட்டாது.

வினு : ௫௬. இப்படிப்பட்ட விவேகம் மனதில் உறைந்திருந்தாற் பிராரத்த கர்மம் மேலெழுந்த ஆசையை யெப்படி யுண்டாக்கும்?

விடை : ௫௬. இச்சை அநிச்சை பரவிச்சை யென்று பிராரத்தம் மூன்றுவிதமா யிருத்தலின் இச்சையும் வரலாம்.

வினு : ௫௭. இது நமக்கு ஆகாததென்று தெரிந்தும் அதில் யாருக்காவது ஆசைவருமோ?

விடை : ௫௭. அபத்தியம் பண்ணுகிறவனுக்கும், திருடுகிறவனுக்கும், ராஜஸ்திரீயை இஷ்டம் பண்ணுகிறவனுக்கும் அவை தனக்காகாதனவென் றறிந்திருந்தும் அவற்றில் ஆசையேன்வந்தது? ஆகையினுலிதை ஈசுவரனுலுந் தடுக்கமுடியாது. ஞானம் வந்தாலும் அவனவன் பிரகிருதிபோகாதென்னும் கீதா வசனமே பிரமாணம்.

வினு : ௫௮. ஏழைகளுக்குப் பரிகரிக்க முடியாதாயினும் சாமர்த்தியமுள்ளோர் அக்கர்மத்தைத் தடுக்கலாகாதா?

விடை : ௫௮. அப்படியானல் நளன் ரகுநாதன் தர்மபுத்திரன் முதலானேர் துக்கிக்கக் காரணமில்லை. ஈசுரனும் பஞ்ச கிருத்தியத்தி லுழலக் காரணமில்லை. ஆதலால் ஈசுவரகற்பனையை ஒருவராலுந் தள்ளமுடியாது.

வினு : ௫௯. இச்சாப் பிராரத்த பலம் அறியப்பட்டது. இனி அநிச்சாப்பிராரத்தம் யாது? அதற்குப் பிரமாணம் யாது?

விடை : ௫௯. மனதில் நாம் செய்யலாகாதென்றிருக்கும் காரியத்தை வலிய நம்மைக்கொண்டு நிறைவேற்று விப்பவன் யாவன்? நாம் வேண்டுமென்னும் காரியத்தை விலக்குபவன்,

யாவுமென்றுகேட்ட அர்ச்சுனனுக்கு அவனவன் கர்மமே செய்விக்கிறதென்ற கிருஷ்ணபகவான் வாக்கியமே பிரமாணம்.

வினா: சுo. இனிப் பர இச்சாப் பிராரத்தம் யாது?

விடை: சுo. தனக்கு இச்சை யநிச்சைகள் இல்லாதிருந்தாலுந் தன்னைச் சார்ந்தவரை முன்னிட்டுவரும் சுகதுக்கங்களே பர இச்சாப் பிராரத்தம்.

வினா: சுக. அப்படியானால் எதனை யிச்சித்து என்ற வேதவாக்கியம் ஆசையை மறுக்கச் சொல்வது என்னை?

விடை: சுக. இந்தவேதம் இச்சையை விலக்கவில்லை. மற்றென்னெனின் வறுத்தவிதைபோல வாதிக்கிறது.

வினா: சுஉ. வாதிப்பது என்பது யாது?

விடை: சுஉ. வறுத்தவிதை முளையாவிட்டாலும் உணவுக்குதவுவதன்றி முளைத்தற்கு எதுவாகாததுபோல ஞானியின் ஆசையும் அகப்பட்ட போகத்தோடு திரும்புவதன்றி மேன்மேலும் வினையினால் காம சங்கற்பங்களை யுண்டுபண்ணுதலே வாதை.

வினா: சுஈ. ஞானிக்கு விஷயத்தில் சிரத்தை யெதனால் வரவில்லை?

விடை: சுஈ. விஷயஞ் சத்திய மென்னும் பிராந்தி யில்லாமையினால் சிரத்தை வரவில்லை.

வினா: சுச. விஷயப்பிராந்திக்கு இலக்ஷணம் யாது?

விடை: சுச. நமக்கிருக்கும் போகம் யாவும் நாளுக்குநாளுத்தரோத்தரமாகவேண்டும், என்றும் மாறாத ஐசுவரிய மிருக்கவேண்டும், இடையிலே விக்கினங்கள் வராதிருக்கவேண்டுமென்னும் வாஞ்சையே பிராந்தி.

வினா: சுரு. இஃது எதனாற் போம்?

விடை: சுரு. வருவ்வினை வராமல் இராது; வாராவினை வருந்தினாலும் வாராதென்னும் போதமே அந்தப் பிராந்தியை நீக்கும்.

வினு : சுசு. ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் பொதுவாயிருக்கும் விஷயம் ஒருவருக்குப் பிராந்தியையும் ஒருவருக்குப்போதத்தையும் தருவதென்னை?

விடை : சுசு. தனக்குப் பிராப்தி யில்லாததை யடையவேண்டுமென்று, சங்கற்பித்த பிராந்தனுக்குத் துக்கத்தைக் கொடுக்கும்; இது மாயாமயம், உள்ளவாறே முடியுமென்னும் ஞானிக்குச் சங்கற்பம் உண்டுபண்ணுமையால் எப்படித் துக்கத்தைக் கொடுக்கும்? (கொடுக்கமாட்டாதென்றபடி)

வினு : சுஎ. இச்சகத்தை மாயாமயமென்று பார்ப்பதெப்படி? இதில் ஆசக்தி எவ்வாறு போம்?

விடை : சுஎ. சொப்பனம்போலவும் இந்திரஜாலம் போலவும் இவ்வாறு வரும், இவ்வாறு போமென்று நிர்ணயப்படாமற்றோற்றி யழிந்து போவதனுல் மாயாமயமென்று பார்க்கவேண்டும்; அப்போது சொப்பனத்திற்குச் சமானமாம் சாக்கிரமென்னும் நிலைமை திடப்பட்டால், அதில் ஆசக்தி போம்.

வினு : சுஅ. இத்தத்துவ ஞானத்திற்கு ஆக்கிரகம் எதில்? பிராரத்தகர்மத்திற்கு ஆக்கிரம் எதில்?

விடை : சுஅ. ஞானத்திற்கு ஆக்கிரகம் இந்திரசாலம் போல ஜகத்தின் மித்தியாத் தன்மையை அனுசந்தானம்பண்ணுவதிலாம்; பிராரத்தத்திற்கு ஆக்கிரகஞ் சீவனுக்குச் சுகதுக்கங் கொடுப்பதிலாம்.

வினு : சுகூ. பிராரத்தகர்மம் ஞானத்தைக்கெடுக்காதோ?

விடை : சுகூ. பிராரத்தகர்மம் ஜகத்தைச் சத்தியமாகத் தோற்றுவித்துப் போகத்தைக் கொடுத்தால் அப்போது ஞானத்திற்குவிரோதமாமென்றறிக. ஜகத்துமித்தையென்னும்விவேகத்தைக் கெடுக்காமற் சொப்பன இந்திர சாலங்களைப்போலப் போகதரிசனங் கொடுத்தலாற் பிராரத்தம் ஞானத்தைக் கெடுக்காது.

வினு : எ0. ஞானம் பிராரத்தத்தைக் கெடுக்காதோ?

விடை : எ௦. ஞானம் வந்தவுடன் ஜகத்துத் துடைபட்டு ப்போமாயின் பிராரத்தத்தைக் கெடுக்கும்; அப்படிக் கெடாமல் மாயாமயமென்று தோற்றுதலால் ஞானத்திற்கும் பிராரத்தத்திற்கும் விரோதமில்லை.

வினு : எக. எல்லாம் ஆத்மாவாய்ப் போகும் அவஸ்தையில், எவன் எந்த இந்திரியத்தினல் எந்தவிஷயத்தை புசிக்கப் போகிருனென்னும் வேதம், ஞானம் வந்தவுடன் சகலமும் துடைபட்டுப் போமென்றல்லவோ சொல்லுகிறது? ஆதலால் ஞானிக்குப் பிராரத்தபோகம் எப்படிக் கூடும்?

விடை : எக. இந்தவேதஞ் சுழுத்தியையும் விதேக கைவல்லியத்தையுஞ் சொல்லுகின்றதேயன்றி, சீவன் முத்தியைச் சொல்லவில்லை யென்று வியாச சூத்திரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

வினு : எஉ. அச்சுருதிக்கு நான் சொன்னதே அர்த்தம்; வேறு விதமாய்ப் பொருந்தாது.

விடை : எஉ. அப்படியானுல், யாஞ்ஞவல்கியர் முதலான பூர்வாசாரியர்களுக்குத் துவித திருஷ்டியிருந்ததனுல் ஞானம் இல்லாதிருத்தல் வேண்டும்.

வினு : எரு. அவர்களுக்குத் துவிததிருஷ்டியில்லை என்போம்.

விடை : எரு. அப்போது அவர்கள் சிஷ்யனுக்கு ஞானோபதேசம் செய்யாதிருக்கவேண்டும்; அங்ஙனமில்லையென்பதற்கு அவர்களுபதேசித்தருளிய சாஸ்திரங்க ளிருக்கின்றன.

வினு : எச. அவர்களுக்குப் பிரபஞ்சந் தோற்ருத நிருவிகற்ப சமாதியில் ஞானமுண்டு.

விடை : எச. இந்தப் பக்ஷத்திற்குச் சுழுத்தியும் ஞானமாகவேண்டும்.

வினு : எடு. சுழுத்தியில் நான் பிரஹ்மமென்னும் ஞானமில்லையே?

விடை : எரு. ஆதலால் நான் பிரஹ்மமென்னும் சிவன் முத்தியேஞானம்; சகத்து மறைவது ஞானமன்று.

வினு : எசு. இந்த விரண்டுஞ் சேர்ந்தே ஞானமாம்.

விடை : எசு. துவிதந் தோற்ருதேதே ஞானமென்னும் உன்னுடைய பக்ஷம் கடங்களுக்குமுண்டு. கொசுகூப்பிடுவதுங் கேட்கப்படுதலால் நிருவிகற்ப ஞானமுங் கட ஞானத்திற்கு இணை யன்று.

வினு . எஎ. இதனுல் ஆத்மவிசாரமே ஞானம், துவைதம் மறைவது ஞான மன்றென வாகிறது.

விடை : எஎ. இந்தச் சித்தாந்தந் தெரிந்தபோது நீயே கிருதகிருத்தியன்.

வினு : எஅ. பொல்லாத மனதை நிறுத்தவேண்டியதில்லையோ ?

விடை : எஅ. நாடிய விஷயத்தை மாயாமயமென்று பார்ப்பதுதான் மனதை நிறுத்துவதாம்.

வினு : எகூ. எந்தப் போகத்தை யிச்சிக்கப்போகிருனென்ற சொல்லுக்கு அர்த்தந் தெரிந்தது. எவனது போகத்தின் பொருட்டென்ற சொல் எதைச் சொல்லுகிறது?

விடை : எகூ. புசிக்கிறவனே யில்லையென்று சொல்லுகிறது.

வினு : அ0. புசிக்கிறவன் எதனுல் இல்லை?

விடை : அ0. கூடஸ்தர் நிருவிகாரியாதலால் சுக துக்க போக விவகாரம் நமக்கில்லை. சிதாபாசன் ஆரோபித ஞகலின் அவனுஞ் சுக துக்கங்களைப் புசிப்பவனல்லன். அப்படியிருக்க, அதிஷ்டானத்தைவிட்டு ஆரோபம் இராமையினுல் இருவரையும் ஏகமாய்க் கண்டு தாதாத்மியத்தினுல் இவனே புசிப்பவனென்று உலகத்தோர் சொல்லுகிருர்களே யன்றி யோசிக்கிற் புசிக்கிறவனே யில்லை.

வினு ; அக. எப்படியாணுலும் ஆத்மாதானே புசிக்கிறவன்.

விடை : அக. ஆத்மா யாரென்று விசாரிக்குமிடத்துச் சகல வேதங்களும் இந்த இலௌகிகாத்மாமுதல் ஆநந்தமயகோச பரியந்தங் கழித்துவிட்டுக் கூடஸ்தரை யன்றோ ஆத்மாவென்று சொல்லுகின்றன.

வினு : அஉ. சிதாபாசன் இல்லாதவனுயின் அஞ்ஞான தசையில் அவன் எப்படிப் புசிப்பவனுவன்?

விடை : அஉ. கூடஸ்தருடைய சத்தையைத் தன்னிடத்திலுங் கொண்டு நமக்குப் போக முண்மையென்று கலங்கி, விஷயங்களை விரும்பினுன்.

வினு : அங. அப்படியானுல் இவ்விடத்தில் அநுஷ்டிக்க வேண்டிய அநுசந்தானம் யாது?

விடை : அங. இலௌகிகத்தில் புசிக்கிறவன் பிரியமாயுள்ள விஷயங்களினும் தன்னைப் பிரியமாய்க் காண்பதுபோல, விவேகியுங் கூடஸ்தருக் கன்னியமான எல்லாவற்றையும் அப்பிரிய மென்று தள்ளிக் கூடஸ்தரையே பிரியமாய்க் காணவேண்டும்.

வினு : அச. பிரியமாய்க் காண்பது எப்படி?

விடை : அச. பாமரனுயுள்ளவன் மாலை சந்தனம் வனிதை முதலான விஷயத்திலுண்டாகும் இச்சையையும், சாவதானமாய் வாதிக்கவேண்டுமென்பவன் காவிய நாடகங்களில் பண்ணும் நிரந்தர விசாரத்தையும், கர்மியுபாசகர் ஜபம் யாகம் உபாசனுதிகளில் பண்ணும் விசுவாசத்தையும், யோகியானவன் மனத்தை நிறுத்துதற்குப் படும் வருத்தத்தையுங் கூடஸ்தரிடத்தில் செய்யவேண்டும்.

வினு : அரு. இப்படிச் செய்வதனுல் வரும் பலன் யாது?

விடை : அரு. போகம், வித்தை, புண்ணியலோகம், அணிமாதி அஷ்டமாசித்திகள் முறையே அந்நால்வருக்கும் வருவதுபோலக் கூடஸ்தராயிருக்கும் தன்னை மூன்றவஸ்தையுங் கடந்தவராய் ஏகராய்ச் சச்சிதாநந்தராயுள்ள சதாசிவமாய்க்

கண்டவன் சொப்பனம்போலப் புண்ணிய பாவ கர்மத் தொடக்கற்று முத்தனுவன்.

வினு: அசு. இப்படிக் கண்டவனுக்குப் புசிப்பவன் இவன் என்னும் பகுப்பற்றதே?

விடை: அசு. ஞானியாயிருக்கும் சிதாபாசன் புசிப்பவனுவன்.

வினு: அஎ. இவன் சாக்ஷியைவிட்டு இராமையினுல் இவனைப்பற்றிப் போகங்கள் சாக்ஷி யிடத்திலும் ஆரோபிக்கப்படாவோ?

விடை: அஎ. சிதாபாசன் ஒரவஸ்தையில் கண்டது ஓர் அவஸ்தையில் காணுத மாயாமயத்திற்கு உட்பட்டவனுகலின், தன்னை யில்லாமற் போகிறவனுகக்கண்டு, ஏங்கிச் சாகக்கிடக்கிறவன் பெண்கொள்ள வாஞ்சியாததுபோலத் தனக்குட்பட்ட போகம் வேண்டான்; முன்போலத் தன்னைப் புசிப்பவனென்று சொல்லுதற்கு மூக்கறையன்போலக்குன்றிப் பிராரத்தபோகம் புசித்தலால் இதனை யெப்படிச் சாக்ஷியிடத்தில் ஆரோபிக்கக் கூடும்? ஆதலால், வேதமும்புசிக்கிறவன்இல்லையென்றுசொல்லுகின்றது.

வினு: அஅ. சரீராநுதாப மில்லையென்னும் வேதத்திற்கு அர்த்தம் யாது?

விடை: அஅ. ஞானிக்கு மூன்று சரீரத்திலும் அத்தியாசம் நீங்கினபடியினுல் மூன்று சரீரத்துச் சுரங்களு மிவனைத் தாபப்படுத்தா.

வினு: அகூ. மூன்று சரீரங்கள் எவை? அவற்றிலுள்ள சுரங்கள் எவை? அவை யிவனை யெப்படித் தாபப்படுத்தா?

விடை: அகூ. ஸ்தூல சூக்ஷ்ம காரணம் என்பன மூன்று சரீரங்கள்; அவற்றில் வாத பித்த சிலேஷ்ம முதலான வியாதியும், இடி சூடு முறிவு முதலான பீடையும் ஸ்தூல சரீரத்துச் சுரம்; காமம் குரோதம் லோபம் மோகம் மதம் லச்சை பய

முதலியனவும், சமை தமை சிரத்தை பத்தி முதலியனவுஞ் சூக்ஷ்மசரீரத்துச்சுரம்; பலபடக் காரிய சரீரத்தை யுண்டாக்கு வதே காரணசரீரத்துச்சுரம். நூலின்றிப்புடவையிராததுபோல வும், மயிரின்றிக் கம்பளியிராததுபோலவும், மண்ணின்றிக் கட மிராததுபோலவும், அவற்றிற்குச் சொன்ன சுரங்களை விட்டுச் சரீரங்களில்லை. இம்மூன்று சரீரங்களுக்குங்கூறியசுரமேசுபாவ சித்தமாவதுபோலச் சிதாபாசனுக்குப் பிரகாசமே சுபாவம் அல் லால் அவனுக்கு ஒரு சுரமுஞ் சுபாவமல்ல. இவ்வாறு சிதாபாச னுக்கே யில்லாத சுரஞ் சாக்ஷிக்குவரப் பிரசக்தியில்லை. ஆத லால், வேதமும் ஞானிக்குச் சரீராநுதாபம் இல்லையென்று சொல்லுகிறது.

வினா: கூ0. இங்ஙனம் இல்லாத சுரம் முன் எப்படித் தபிக்கச் செய்தது?

விடை: கூ0. அஞ்ஞானத்தினாற் புத்திரதாராதிகள் தபி ப்பதைத் தான் தபிப்பதாகக் காணும் மூடன்போலச் சிதாபாசன் சரீரத் திரயத்தையுஞ் சாக்ஷியையும் ஒன்றுபடுத்தித் தனது சொரூபமா யெண்ணிக்கொண்டு சரீரந் தபித்தலைத் தான் தபி ப்பதாகப் பிரமிப்பன்.

வினா: கூக. ஞானம் வந்தபின் தபியாமல் இருக்கவேண் டும்; மீண்டும் தபிப்பதென்னை?

விடை: கூக. விவேகத்தினாற் பிராந்தியைத் தள்ளித் தன் னைச் சாக்ஷியாக அறிந்தபின் முன்தாபம் போய்விட்டது. இந்த ப் பழுதைக்குப் பயந்தோடி ஏன் இடெப்பு முறித்துக்கொண் டோம் என்பதுபோல, இல்லாத சம்சாரத்தை யேன் ஆரோ பித்துக்கொண்டோம் என்னும் வெறுப்பைத் தாபமென்கிறாய்.

வினா: கூஉ. சாக்ஷி நாமென்று அறிந்தாற் போதாதோ? பலப்பட அநுசந்தானம் பண்ணுவதென்னை? பலப்படத் தேகம் நானல்லவென்று பாவிப்பதென்னை?

விடை: கூஉ. இல்லாத சம்சாரத்தை யும்மிடத்து ஆரோபித்தேன், அதனைப் பொறுத்துக்கொள்ளுக வென்று

சாக்ஷியைச் சரணடையவும், புரிந்த பாவம்போகப் பிராயச்சித்தம் பண்ணிக்கொள்வது போலச் சஞ்சித கர்மம் விட்டுப்போகவும் அநுசந்தானம் பண்ணவேண்டும். நீசனிடத்தில் அகப்பட்ட பிராமணன் வெகு பிராயச்சித்தத்தினால் பிராமணருடன் கூடினபின் மிலேச்சரைக் கண்டால் ஓடுவதுபோலத் தேகம் நானல்லவென்று அநுசந்தானம் பண்ணவேண்டும்.

வினா: கங. ஞானியானவன் முன்போலப் பிரபஞ்சவிவகாரம் பண்ணாமல் நாணுவானேன்?

விடை: கங. குய்யத்தில் குஷ்டம்பிடித்த வேசி அதனை அறிந்தவர்முன் நடிக்க நாணுவதுபோலச் சிதாபாசனுந் தன்னை மாயாமய மென்றறிந்த பின் தன்னைக் கர்த்தாவென்று சொல்ல நாணுவன்.

வினா: கச. ஞானம் வந்தபின் நாணமும் நடுக்கமும் வரலாமோ?

விடை: கச. வாலிபனுயுள்ளவன் ராச்சியத்திற்காக ராஜாவை யாசிரயம் பண்ணுவதுபோலப் பிரஹ்மத்தை யறிந்தவன் பிரஹ்மமே யாவனென்னும் வேதத்தைக் கேட்டுப் பிரஹ்மத்தைக் கெம்பீரமாக அநுசந்தானம் பண்ணுவனன்றிப் பீதியில்லை.

வினா: கரு. பிரஹ்மஞானம் சிதாபாசனைக் கொல்லவந்ததனால் எவனாவது தான் சாக மருந்து உண்பானோ?

விடை: கரு. தேவனாகலாமென்னும் சந்தோஷத்தினால் கங்காப்பிரவேசம் பண்ணுவதுபோலப் பிரஹ்மம் ஆகலாமென்னும் சந்தோஷத்தினால் ஞானத்தை யப்பியசிப்பன்.

வினா: கசு. கங்காப்பிரவேசம் ஆரம்பித்தவுடனே தேவனாவதுபோல ஞானிகள் உடனே பிரஹ்மம் ஆகவில்லையே?

விடை: கசு. ஆரம்பித்த கர்மம் முடிந்து சரீரம் நசிக்கும் பரியந்தம் மனிதனென்னும் பேர் நிற்பதுபோலப் பிராரத்த தேகம் விழும்பரியந்தமுஞ் சிதாபாசனென்னும் பேர் போகாது.

வினு: கஎ. பழுதையென் றறிந்தவுடனே பாம்பென்பது போகவில்லையா?

விடை: கஎ. பழுதையென் றறிந்தபின் சர்ப்பபீதி கிரமமாய்த் தணிவதுபோலவும், பத்தாமவனுக்கு இடித்துக்கொண்ட புண்வேதனை கிரமமாய்த் தணிவதுபோலவும் பிராரத்த கர்ம போகமும் புசித்தே கிரமமாய்த் தொலையவேண்டும்.

வினு: கஅ. ஞானம் வந்தும் பிராரத்ததுக்கம் இருந்தால் துக்க நிவிருத்தி யென்னும் ஆறும் அவஸ்தை யெப்படிக் கூடும்?

விடை: கஅ. பத்தாமவனைச் சாக்ஷாத்கண்ட சந்தோஷம் புண்வேதனையைத் தெரியவொட்டாததுபோல, தானே பிரஹ்மமென்று முத்தனுன சந்தோஷம் பிராரத்த துக்கத்தைத் தெரியவொட்டாது. ஆதலால் ஆறும் அவஸ்தை கூடும்.

வினு: கக. சிதாபாசனுடைய ஆறும் அவஸ்தையுந் தெரிந்தது; இனித் தடையற்ற ஆநந்தம் என்பது யாது?

விடை: கக. இகலோக பரலோகத்தைக் குறித்துச் செய்யவேண்டிய கர்ம மெல்லாம் செய்து முடிந்தமையினுலும், மோக்ஷமும் பிரஹ்மமும் நாமென்று அறியப்பட்டமையினுலும், மனதில் ஒருகுறையும் இல்லையென்று அறிவதே தடையற்ற ஆனந்தம்.

வினு: க00. காண்டத் திரவியத்திலுஞ் சொன்ன அநுஷ்டானங்களில் ஒன்றையும் செய்யாமல் இருக்க, எல்லாஞ்செய்து முடிந்தன வென்பது எப்படி?

விடை: க00. எல்லாந்தீர்ந்த தன்மையாகப் பேதமற்றது என்பதை ஞானியின் அநுசந்தானத்தினுல் அறியலாம்.

வினு: க0க. செய்யவேண்டியவை யறியவேண்டியவை யெல்லாம் செய்தும் அறிந்தும் ஒழிந்தன வென்னும் அநுசந்தானம் யாது?

விடை: க0க. நான் துக்கியென்றிருக்கும் அஞ்ஞானி பூமி தானம் புத்திரன் மித்திரன் களத்திரம் என்பவை வேண்டுமென்று இகலோக சம்சாரத்திலே யலையவேண்டும்; பரமாநந்த பூரணமாயிருக்கும் நாம் அந்த மாயாமயத்தை நாட வேண்டியதில்லை. பரலோகத்தை யடையவேண்டியவன் அதற் கேற்ற கர்மாநுஷ்டானம் பண்ணவேண்டும்; சர்வலோகமும் மாயாமயமென்று காணும் நமக்கு ஒரு கர்மமும் வேண்டிய தில்லை. பிரஹ்மலோகத்தை யடையவேண்டியவன் வேதசாஸ் திரத்தைக் கற்கவேண்டும்; நிரதிகாரியா யிருக்கும் நாம் கற்க வேண்டியதில்லை. தத்துவத்தை யறியவேண்டியவன் வேதாந்த சிரவணம் பண்ணவேண்டும்; அறிந்தவனுக்கு வேண்டியதில்லை. சந்தேக முள்ளவன் மனனம் பண்ணவேண்டும்; தேகம் நாம் என்றொருகாலும் எண்ணாத சந்தேகமற்ற பிரஹ்மமா யிருக் கும் நமக்கு வேண்டியதில்லை. விபரீதபாவனை யுள்ளவன் நிதித் தியாசனம் பண்ணவேண்டும்; தேகாதிகளின் விலக்ஷணமான நமக்குவேண்டியதில்லை. விக்ஷேபம் உள்ளவன் சமாதியிருக்க வேண்டும்; சின்மாத்திரமா யிருக்கிற நமக்கு வேண்டியதில்லை. விக்ஷேபமுஞ் சமாதியும் அந்தக்கரணத்திற்கேயாகலின் செய்ய வேண்டியவை யாவும் செய்து முடிந்தன.

வினா: க0உ. விவகாரம் இருக்கும்போதே உமக்கு விப ரீதம் இல்லையென்ப தெப்படி? நித்திரை பிக்ஷை முழுக்கு சௌசம் என்னும் நான்கும் அநுஷ்டிக்கக் கண்டோமே?

விடை: க0உ. விவகாரம் குலாலசக்கரம்போல வாசனை யினால் நடக்கின்றது; நமக்கு விபரீதபாவனை யில்லை. பிறன் நெருப்பென்பதனால் குன்றிமணிச்செடி வேகாததுபோல நீ நம் மைக் கர்த்தா வென்றதனால் நாம் நித்திரை முதலியவற்றைப் புரிந்தவனாகோம்.

வினா: க0ங. இப்படி வாசனையினால் வரும் விவகாரமும் போகவேண்டாமோ?

விடை : க0ரு. பிராரத்த கர்மந் தொலைந்தால் அன்றிப் போகாது.

வினு : க0சு. ஆனுல் உம்முடைய விவகாரத்திற்கு விதி யாது ?

விடை : க0சு. இலௌகிகமாயினும், வைதிகமாயினும், உத்தண்டமாயினும் பிராரத்தத்தின்படி நடப்பதே விதி.

வினு: க0ரு. இங்ஙனமாயின் உம்மிடத்திற் சகலருக்கும் அப்பிரமாண புத்திவரும். உம்மைப் பெரியவரென்று ஞானங் கேட்பவரொருவரும் இரார். உம்முடைய ஞானம் உமக்கே பிரயோசனமாம். பிறரை யீடேற்றமாட்டாதே ?

விடை : க0ரு. ஆனுல் யான் கிருதகிருத்தியனுயினும் லோகானுக்கிரகார்த்தமாய்த் தேவார்ச்சனை, சௌச முதலான வைகளைக் காயத்தினுலும், பிரணவ ஜபம், வேதாந்த பாடம் முதலானவைகளை வாக்கினுலும், மூர்த்தித்தியானம் பிரஹ்மத் தியானங்களை மனதினுலுஞ் செய்தும் செய்தவனு மல்லன், செய்யச் சொன்னவனு மல்லன் என்று நாமிருந்தால் கர்மிகளுக்கும் நமக்குஞ் சண்டையில்லை. நம்முடைய ஞானம் பலருக்கும் உபகாரமாம்.

வினு : க0சு. கர்மத்திற்கு நிர்ப்பந்தம் எதில் ? ஞானத்திற்கு நிர்ப்பந்தம் எதில் ?

விடை: க0சு. ஞானியினுற் பொய்யென்று தள்ளப்பட்ட திரிவித கரணத்தில் கர்மத்திற்கு நிர்ப்பந்தமே யன்றிச் சாக்ஷியினிடத்தில் நிர்ப்பந்தமில்லை; அந்தத் திரிவிதகரணத்தில் கர்மி கர்ம்மத்தைச் செய்க. நமக்கு ஹானியேது? ஞானத்திற்கு நாம் அசங்கனென்பதில் நிர்ப்பந்தம் அல்லாமல் திரிவிதகரணத்தில் நிர்ப்பந்தமில்லை. திரிவிதகரணத்திற்கும் கர்மத்தை விலக்க வேண்டியதில்லை. ஞானி தன்னைப் பிரஹ்மமென்று அறிந்ததனுல் கர்மிக்கு ஹானி என்னை ?

வினா: க0எ. இப்படி யெல்லாரும் அறியலாமே? ஆத்மாவைத் திரிவிதகரணத்தோடு கர்த்தாவென்னும் கர்மிகளும், ஞானம் வந்தவுடன் திரிவிதகரணத்திற்கும் ஒரு கர்மமும் வேண்டா மென்றிருக்கும் ஞானிகளும் ஒருவருக் கொருவர் விவாதஞ் செய்துகொள்வ தென்னே?

விடை: க0எ. அவர்கள் அஞ்ஞானத்தில் செவிடர் கதை கேட்டாற்போலச் சண்டைக்கு நிற்கிறார்கள்.

வினா: க0அ. ஞானம் வந்தவனுக்குப் பிறரைக் குறித்தாவது கர்மப் பிரவிருத்தி யுசிதமன்றே? நிவிருத்தியாகச் சன்மார்க்கத்திலே யிருக்கவேண்டாமோ?

விடை: க0அ. ஞானிக்குப் பிரவிருத்தியினாற் பிரயோசனம் இல்லாவிடின், நிவிருத்தியினாலும் பிரயோசனம் இல்லை.

வினா: க0கூ. நிவிருத்தி, ஞானத்திற்குச் சாதனம் அல்லவோ?

விடை: க0கூ. அறிந்தபின் சாதனம் வேண்டியதில்லை.

வினா: கக0. தோற்றும் சகத்தினால் மேலும் அஞ்ஞானப்பிராந்தி வாராதோ? சாதனத்தை யநுஷ்டித்தலால் தாழ்வில்லையே?

விடை: கக0. உயிரோடு இருக்கும் எலி, பூனையைக் கொல்லாததா யிருக்க, இறந்த எலி பூனையைக் கொல்லும் என்பதுபோலவும், பாசுபதத்தினால் கொல்லப்படாதவன் நாணற் கழியினால் கொல்லப்படுவன் என்பதுபோலவும், அநாதியில் அஞ்ஞான காரியங்க ளெல்லாங்கூடி யிருந்தகாலத்துக் கொல்லப்படாதபோதம், தானாகிய திடஞானத்தினாலே கொல்லப்பட்ட அஞ்ஞான காரியங்களால் திரும்பவும் பந்தப்படுத்தப்படும் என்பது உன்னுடைய புத்தித் தாழ்வே யன்றி வேறில்லை.

வினா: கக்க. அஞ்ஞான காரியங்கள் துடைபட்டுப் போனாலும் ஜகத்துத் தோற்றுகின்றமையாற் சொல்லலாமே?

விடை: ககக. தோற்றினல் என்ன? இத்தனையும் நாமல்லவோ கொன்ருேம் என்று படுகளம் பார்க்கும் போதராஜனுக்கு அதனல் திருப்தியே யொழிய அச்சமில்லை; இப்படிப்பட்ட போத சூரனுக்குத் தேகாதிகளிடத்து வரும் பிரவிருத்தியினுலும் நிவிருத்தியினுலும் பிரயோசனம் இல்லை.

வினு: ககஉ. பிரவிருத்தி கூடாது; நிவிருத்தி கூடாதென்பது எவனுக்கு?

விடை: ககஉ. சுவர்க்க மோக்ஷத்தைக் குறித்து எத்தனம் பண்ணும் அஞ்ஞானிக்காம்.

வினு: ககஙு. அப்படிப்பட்ட அஞ்ஞானிகளோடு ஞானி கூடியிருக்கும்போது செய்யும் காரியம் யாது?

விடை: ககஙு. குழந்தைகள் தகப்பனை யடித்தாலும் வைதாலும் மனதில் கிலேசம் இல்லாமற் சீராட்டுவதுபோல, அஞ்ஞானிகள் தூஷித்தாலும் பூஜித்தாலும் தான் பிரீதி செய்யாமல், அவர்களுக்குச் சம்மதமாகத் திரிவிதகரணத்தினுலுங் கர்மத்தை முடித்துக்கொண்டு அவர்களுக்கு ஞானம் ஏற்றுவிப்பதே செய்காரியம்.

வினு: ககச. ஞானிக்கு ஞானப்பியாசம் செய்வோர்களுடன் கூடியிருக்கும்போது செய்காரியம் யாது?

விடை: ககச. ஞானங்களைப் போதித்துக் கர்மாதிகளைத் தூஷித்துக் கர்மாதிகளைத் துறந்து காட்டவேண்டும்.

வினு: ககரு. ஞானி தனித்திருக்கும்போது செய்காரியம் யாது?

விடை: ககரு. தன்னுடைய கிருத கிருத்தியாநந்தத்தைக்கண்டு களித்து மகிழ்ந்து, பிரஹ்மமே நாமென்றறிய என்ன பாக்கியம் புரிந்தோமோ! நம்முடைய அஞ்ஞானம் எவ்வழி போயிற்ருே! நாம் செய்த அதிர்ஷ்ட எத்தனத்தினல் நமக்கு ஒரு சம்சாரமும் இல்லாமற் போயிற்றே! நமக்குப் பிரஹ்மாநந்த நிலை வெட்டவெளியாகத் தோற்றக்கிடைத்ததே! உலகத்தி

லே யெல்லாரையும் பிடித்த கர்த்தவ்வியங்களில் நமக்கொன்றும் வேண்டியதில்லாமற் போன பாக்கியமே பாக்கியம்! எல்லோரு மடையவேண்டுமென்னும் பிரஹ்மம் நாமானோமே! நமக்கித்தனை பாக்கியத்தையுங் கொண்டுவந்துவிட்ட சாஸ்திரமே சாஸ்திரம்! இந்தச்சாஸ்திரத்தை யநுபவத்திற்கு வரப் பயிற்றுவித்த குருவே குரு! எப்புண்ணியத்தினு லிப்படிப் பலித்ததோ! நம்முடைய புண்ணியத்திற்கும் நம்முடைய ஞானத்திற்கும் நம்முடைய ஆநந்தத்திற்கும் ஒப்புக் காணோமே என்று எந்நேரமும் தன் சுபாவாநந்தத்தில் இரமித்திருப்பதே செய்காரியம்.

இந்தத் திருப்திதீபிகையை அநுசந்தானஞ் செய்துவருபவன் பிரமாநந்தத்திலழுந்தி நித்தியதிருப்தனுயிருப்பன்.

இரண்டாவது திருப்திதீபம் முற்றிற்று.

ஆ. வினுவிடைகள் ககரு.

மூன்றுவது கூடஸ்ததீபம்.

வித்தியாரண்ணியஸ்வாமிகள் வேதாந்தார்த்தம் விரிவாய் விசாரிக்கமாட்டாதவர்களுக்குக் கூடஸ்த தீபிகையினுல் துவம்பதார்த்தத்தை விளக்குகின்றூர்.

வினு : க. துவம்பதத்திற்கு வாச்சியார்த்தம் யாது? லக்ஷியார்த்தம் யாது? இதற்குத் திருஷ்டாந்தம் யாது?

விடை : க. துவம்பதத்திற்கு வாச்சியார்த்தம் சிதாபாசன், லக்ஷியார்த்தம் கூடஸ்தர். கண்ணுடியிற் பிரதிவிம்பித்த வெய்யிலும், சுபாவவெய்யிலும் ஒருமைப்பாடாய் ஒருசுவரை விளக்குவதுபோலக் கூடஸ்தருஞ் சிதாபாசனும் ஒருமைப்பாடாய் ஒரு தேகத்தை யறிகிறூர்கள் என்பது திருஷ்டாந்தம்.

வினா: உ. இவர்களிருவரும் எதனால் ஒருமைப்பாடாய்த் தோற்றுகிறார்கள்? இவர்களைப் பகுத்தறியும் வழி யாது?

விடை: உ. அவிவேகத்தினா லொருமையாகத் தோற்றுகின்றார்கள். ஒரவஸ்தையில், ஏகதேசமாகத் தோற்றி மறையும் சிதாபாசனையும் நித்தியப்பிரகாசமாயிருக்கும் கூடஸ்தரையும் ஏகதேசத்தில் உபாதியினால் அலைகின்ற வெய்யிலையும் அகண்ட வெய்யிலையும்போலக் குறிப்பினா லறிக.

வினா: ௩. சரீரத்திற்குப் புறம்பே விஷயஞானம் வரும்போது கூடஸ்தரையுஞ் சிதாபாசனையும் பகுத்தறியும் வழி யாது?

விடை: ௩. இது கடமென்னும் ஞானம் வருவது சிதாபாசனுக்கும், கடத்தை யான் அறிந்தேனென்னும் விருத்தி ஞானம் வருவது கூடஸ்தருக்கு முண்டாதலால் கடமென் றறிந்தவுடன் அணைந்தவன் சிதாபாசன்; அதனைக்கண்டவன் கூடஸ்தனாவன்.

வினா: ௪. கடஞானம் வருகிறதற்கு முன்னும் பின்னும் கூடஸ்தரிருத்தற் கடையாளம் யாது?

விடை: ௪. கடஞானம் வருவதற்குமுன் அக்கடம் அறியப்படாததாகவும் பின் அறியப்பட்டதாகவுங் காணும் தன்னநுபவமே அடையாளம்.

வினா: ரு. கடம் ஒருகாலத்தி லறியப்பட்டதாகவும் ஒருகாலத்தி லறியப்படாததாகவுஞ் சாக்ஷியினிடத்தி லிருவகையும் ஏன் தோற்றுகின்றன?

விடை: ரு. எக்காலத்தினும் எங்குமிருக்கின்ற சுபாவசைதன்னியத்தி னிடத்திலே கற்பிக்கப்பட்ட கடம் அஞ்ஞானத்துடனே கூடியிருந்தபோதறியப்படாததாகவும் ஞானத்தோடு கூடியபோது அறியப்பட்டதாகவும் தோற்றியது.

வினா: சு. ஞானம் யாது? அஞ்ஞானம் யாது?

விடை: சு. லோகாந்த குந்தம்போலச் சிதாபாசாந்தபுத்தி விருத்தியே ஞானம், தோற்றரவற்றதே அஞ்ஞானம்.

வினா: எ. விருத்திக்குமுன் சிதாபாச னில்லாமையினால் அறியப்படாத கடத்தைச் சாக்ஷிதான் அறியவேண்டும், விருத்திக்குப் பின்னறியப்பட்டது கடமென்பதனைச் சிதாபாசன் அறியலாம். ஆகலின் சாக்ஷி யறிவரென்பது வேண்டியதில்லையோ?

விடை: எ. கடமென் றறிந்தவுடன் சிதாபாசன் விருத்தியில் நஷ்டமாய்ப்போனமையினாலும், அவ்வவசரத்திற் கூடஸ்தரைத்தவிர வேறு சைதன்னியம் இல்லாமையினாலும், விருத்திக்குமுன் அறியப்படாததை யறிந்திருந்த கூடஸ்தரே விருத்திக்குப்பின் அறியப்பட்டதென்பதையுந் தோற்றுவிப்பரென்பதிற் சந்தேகம் இல்லை. ஆதலால் இரண்டுகாலத்திலுங் கடத்தை யறிபவர் கூடஸ்தரே.

வினா: அ. கடஞானம் வந்தவுடன் சிதாபாசன் நஷ்டமாய்ப்போயினும் அவனோடு நஷ்டமாகாமலிருக்கும் விருத்தியினாற் கடம் அறியப்பட்டதென்பது தோற்றலாம்; சாக்ஷியினாலென்பது வேண்டியதில்லையே?

விடை: அ. சிதாபாசனில்லாத விருத்தி பிரகாசத் திரவியமானாலும் வெள்ளை மண்போலச் சடமாகலின் அறியப்பட்டதைத் தோற்றுவிக்கமாட்டாது, சாக்ஷியே தோற்றுவிக்கும்.

வினா: கூ. சாக்ஷியினிடத்திற் கற்பிக்கப்பட்ட கடம் அஞ்ஞானத்துடன் கூடினாலும் விருத்தியுடன் கூடினாலும் அறியப்பட்டதெனலாகாமையின் அறியப்பட்டதென்னும்பேர் எதனால் வந்தது?

விடை: கூ. சிதாபாசன் பிரதிபிம்பித்ததினாலேயே கடம் அறியப்பட்டதாயிற்று.

வினா: க0. சைதன்னியப்போலியே அறியப்பட்டதற்கு மூலமாயின் முன் சாக்ஷி சைதன்னியத்துடன் கூடினதினாலேயே அறியப்பட்டதாகச் சொல்லலாகாதோ?

விடை: க0. விருத்திக்குப்பின் பிரதிபிம்பித்த சைதன்னியத்திற்கே பிரயோசனமாகவேண்டுமே. முன்னிருந்த கூடஸ்தருக்குப் பிரயோசனமென்று சொல்லலாகாது.

வினு : கக. அறியப்படாததைப் பிறப்பித்தற்பொருட்டு அஞ்ஞான மிருப்பதுபோல அறியப்பட்டதைப் பிறப்பித்தற் பொருட்டுப் புத்தி போதுமே; சிதாபாசனுல் என்ன பிரயோசனம் ?

விடை : கக. சிதாபாசனில்லாத விருத்தி வெள்ளை மண் போலச் சடமாதலால் அறியப்பட்டதைப் பிறப்பித்தற்குக் காரணமாகாது.

வினு : க௨. ஆனுல் சித்தாந்தந்தான் யாது?

விடை : க௨. கடத்திலே சிதாபாச ரூப பலனுல் அறியப் பட்டதென்னும் ஞானம் பிரசித்தமாயுளது.

வினு : க௩. பிரஹ்ம சைதன்னிய ரூபமாகவே பலமிருத்தலால் சிதாபாசனைக் கற்பிப்பது தகுதியா ?

விடை: க௩. பிரஹ்ம சைதன்னியம் பிரமாணத்தின் பிரவிருத்திக்கு முன்னிருத்தலாலும், பலமோ பிரமாணத்தின் பிரவிருத்திக்குப் பின்னுண்டாதலாலும் * பிரஹ்ம சைதன்னியம் † பலமன்று.

வினு : க௪. அப்படியானுற் சாக்ஷிக்கும் சிதாபாசனுக்கும் பேதம் யாது ?

விடை : க௪. கடமாத்திரத்தைக் காண்பவன் சிதாபாசன்; சிதாபாசன், விருத்தி, கடம் என்னும் மூன்றையுங் காண்பவர் கூடஸ்தர்.

வினு : க௫. அப்படியானுல் எல்லாச் சாஸ்திர கர்த்தாக்களும் விஷயஞானத்தில் இரண்டு சைதன்னியத்தையும் என் பகுத் தறியவில்லை?

---

* கூடஸ்த பிரஹ்மங்கட்குப்பேத மில்லாமை பற்றி மூல சுலோகத்தில் கடத்தில் பிரஹ்மசைதன்னியம் முன்னும் பின்னும் உள்ளது என்று கூடஸ்தரை விவகரித்தனர்.

† பலம் - கடமென்னும் ஸ்பூர்த்தி.

விடை : கரு. கூடஸ்தரென்று சொல்லாமல் * அநுவியவசாயஞானமென்று பெயரிட்டுப் பகுத்தறிவர்.

வினா : கூகூ. தேகத்திற்குப் புறம்பே ஆபாசனையும் கூடஸ்தரையும் பிரித்தறிந்ததுபோலத் தேகத்திற்குள்ளும், இவர்களிருவரையும் பகுத்தறியும் வழி யாது ?

விடை : கசு. வெளியில் ஈதென்னும் விருத்தியினையும் கடபடாதி விஷயங்களையும் அவற்றின் அந்வய வியதிரேகங்களையும் சாட்சி யென்றறிவதுபோலத் தேகத்திற்குள்ளும் அகமென்னும் விருத்தியினையும் காமக்குரோதாதி அதன் விஷயங்களையும் அவற்றின் அந்வய வியதிரேகங்களையும் அறிபவர் சாக்ஷியென் றறியவேண்டும்.

வினா : கஎ. உள்ளே சிதாபாசத் தோற்றமெப்படி? சாக்ஷித்தோற்றமெப்படி ?

விடை : கஎ. காய்ச்சின விரும்பிலிருக்கும் அக்கினி அந்த இரும்பைமாத்திரந் தோற்றுவிப்பதே யல்லாமல் மற்றொன்றையுந் தோற்றுவியாததுபோலக் காமக்குரோதாதி அகவிருத்தியிற் கலந்திருக்கும் சிதாபாசனுந் தான்மாத்திரந் தோற்றுவதே யல்லாமல் அந்நியமாயிருப்பவற்றைத் தோற்றுவியான். சாக்கிர சொப்பனத்தில் விருத்திகளையும் விருத்திகளினிடைத் தண்டியையும், சுழுத்தி, மூர்ச்சை, சமாதிகளி லிவைகளில்லாததையுந் தோற்றுவிக்கும் நிர்விகார சைதன்னியமே கூடஸ்தர்.

வினா : கஅ. வெளியில் விருத்தியில் அறியப்பட்டதையும் அறியப்படாததையுங் காட்டும் வாயிலாகக் கூடஸ்தரைக் காட்டியதுபோல் உள்ளும் விருத்தியிற் காட்டாமல் வேறொரு வழியாகக் காட்டுவதென்னை ?

விடை : கஅ. உள்ளில் விஷயமான விருத்தியானது கடம்போல ஞானம் அஞ்ஞானம் இரண்டோடு கூடாததினால் அவ்வாறு காட்டவேண்டியதில்லை.

---

* அநுவியவசாய ஞானம் - இரண்டாவது ஞானம்.

வினா: கக. விருத்தியில் அஞ்ஞானவியாப்தி ஞானவியாப்தி யிரண்டும் ஏனில்லை ?

விடை: கக. விருத்தியானது கடம்போலத் தனக்கு அந்நியமாகாமையினால் ஒருகாலத்தில் ஞானவியாப்தி வந்ததெனலாகாது; அன்னிய பதார்த்தத்தில் அஞ்ஞானத்தைப் போக்குதலால் இந்த விருத்தியில் அஞ்ஞான வியாப்தி வாராது.

வினா: உ0. இப்படி உள்ளிலும் புறம்பிலும் நானென்று தோற்றும் சைதன்னியம் இருவகையென்று சாதித்ததற்குப் பிரயோசனம் யாது ?

விடை: உ0. சைதன்னிய மிரண்டனுள் கற்பிதமாயுள்ளவன், ஜநந மரண சம்சாரியென்பதும் கூடஸ்தராய்ச் சுபாவமாயுள்ள தனக்கு ஒருகாலத்திலுஞ் சம்சாரமில்லையென்பதும் பிரயோசனமாம்.

வினா: உக. புத்தியில் வளைபட்ட கூடஸ்த சைதன்னியம் சம்சாரியாகுக; சிதாபாசன் வேண்டியதில்லையே ?

விடை: உக. அசங்க சைதன்னியத்திற் கோருபாதியில் வளைப்பட்டதினால் சம்சாரம் வருமாயின், குடங் குதிர்களில் வளைபட்ட சைதன்னியத்திற்குச் சம்சாரம் வரல்வேண்டும்.

வினா: உஉ. கடம்போல அந்தக்கரணம் மலினம் அன்றி; சொச்சத்திரவியத்தில வளைபட்டாற் சம்சாரம் வரும்.

விடை: உஉ. வெண்கல மரக்காலா லளந்ததனால் ஒன்று இரண்டும், ஒன்று மூன்றும் காணாததுபோலச் சொச்சத்தினால் அதிசய மில்லை.

வினா: உஙு. மரமரக்காலும் வெண்கல மரக்காலுஞ் சரியானாலும் வெண்கலத்தில் பிரதிபிம்பங் கண்டதுபோலக் கடத்தினும் புத்தியில் பிரதிவிம்பம் அதிசயமன்றோ ?

விடை: உஙு. அப்படியானால் அந்தப் பிரதிவிம்பமே சிதாபாசன்; அவனுக்கே சம்சாரம்; ஆத்மாவிற் கில்லை.

வினு: உச. உபாதியைத்தவிர ஆபாசனுக்கு வேறு சொருபமில்லாமையினு லந்தக்கரணத்திற்கே சம்சாரம் இருக்கட்டும், சிதாபாசனுக்குச் சம்சாரம் வேண்டாமே ?

விடை: உச. அப்படியானுற் சரீரத்தைத்தவிர அந்தக்கரணம் புறம்பாகக் காணப்படாமையினுற் சரீரத்திற்கே சம்சாரமாகவேண்டும்.

வினு: உரு. சரீரம் மரித்தாலும் புத்தி மரியாதென்னும் சாஸ்திரத்தினுல் சரீரத்தைத்தவிர அந்தக்கரணம் வேருதல் வேண்டுமே ?

விடை: உரு. அப்படியானுற் புத்தியைவிடச் சிதாபாசனும் வேறுண்டென்று பிரவேச உபநிஷத்தில் சொல்லுதலால் சிதாபாசனுக்கே சம்சாரம், அந்தக்கரணத்திற்கு வேண்டியதில்லை.

வினு: உசு. பிரவேச உபநிஷத்தில் புத்தியோடு கூடினவனுக்குத்தான் சரீரப்பிரவேசஞ் சொல்லுகிறது; புத்திக்கப்பாற் பட்டவனுக்குச் சொல்லவில்லையே ?

விடை: உசு. சடந் தேகமென்னும் வாக்கியம், நாமில்லாவிட்டாற் சரீரங்களும் இந்திரியங்களும் ஜீவிக்கமாட்டாவென்றும், ஆத்மா பிரவேசித்தாரென்பதனுல் அந்தக்கரணத்திற்கு அந்நியமா யுள்ளவனுக்கே பிரவேசமுஞ்சொல்லுகிறது.

வினு: உஎ. அந்தக்கரணத்திற் கப்பாற்பட்டவன் அசங்கனல்லவோ? அவனுக்கு எப்படிப் பிரவேசங் கூடும் ?

விடை: உஎ. இவருக்குப் பிரபஞ்ச சிருஷ்டி யெப்படிக் கூடும் ?

வினு: உஅ. அசங்கனுக்குப் பிரபஞ்ச சிருஷ்டி யில்லையே; மாயாகற்பிதனுக் கல்லவோ சிருஷ்டி?

விடை: உஅ. பிரவேசமும் அவித்தையா கற்பிதனுக்கே யல்லாமல் அசங்கனுக் கில்லை.

வினு : உகூ. சிருஷ்டித்தவரும் பிரவேசித்தவருங் கற்பித மென்பதற்குப் பிரமாணம் யாது ?

விடை : உகூ. மாயை யவித்தை யென்னும் இரண்டுஞ் சீவேசுவரரெனப்படும் ஆபாசரைக் கற்பித்தவென்னும் வேதமும், இவர்களை யுற்று விசாரித்தால் இல்லாமல் நஷ்டமாய்ப் போகும் அநுபவமுமே பிரமாணம்.

வினு : ௩0. இப்படிச் சீவேசுரர் மாயாகற்பிதரென்றும், இவர்கட்கு அப்பாற்பட்டவ ராத்மாவென்றும் வேதத்தில் பகுத்துச் சொல்லுகின்றனவோ ?

விடை : ௩0. சீவேசுரர் பூதபௌதிகப் பிரகிருதிகளோடோ கூடத்தோற்றிக் கூட வழிவார்களென்றும், அப்பாற் பட்டிருக்கிற கூடஸ்தர் அவிநாசி யென்றும் மயித்திரிக்கு யாஞ்ஞவல்கியர் சொன்னுர்.

வினு : ௩க. இது சரீரமரிக்குஞ் சீவன் மரியானென்னும் வேதத்திற்கு விரோதமல்லவோ ?

விடை : ௩க. இந்தவேதம் பூதபௌதிக மோக்ஷத்தைச் சொல்லுவதன்று. ஞானவஸ்தையில் உலோகாந்தர கமனத்தைச் சொல்லுவதாம். ஆகையால், ஆத்மாவிற் கன்னியமான யாவும் அநித்தியமாம்.

வினு : ௩உ. சீவன் அநித்தியமானுல் நித்தியமா யிருக்கிற பிரஹ்மத்தோடு அகம்பிரஹ்ம மென்னும் சமானுதிகரண மெப்படிக் கூடும் ?

விடை : ௩உ. முக்கியசமானுதிகரணங் கூடாவிட்டாலுந் தாணு புருஷ ஞானம்போல வாதசமானுதிகரணங் கூடும்.

வினு : ௩௩. அப்படி யானுல் விவரணுசாரியர் வாத சமானுதிகரணத்தைக் கண்டித்ததென்னை ?

விடை : ௩௩. நானென்னும் சத்தத்திற்குக் கூடஸ்தரை யர்த்தமாகக்கொண்டு கண்டித்தார்.

வினு : ௬௪. கூடஸ்தரைத் தாஞகக் கண்டாற் தத்பதத்திற்குந் தொம்பதத்திற்கும் அர்த்தம் யாது ?

விடை : ௬௪. தேகேந்திரியாதிகளையுடைய ஜீவப்பிராந்திக் கதிஷ்டானப் பிரத்தியக்ஷமும், ஜகசரீரம் படைத்த ஈசுவரப்பிராந்திக் கதிஷ்டானப் பிரத்தியக்ஷமும் அர்த்தமாம்.

வினு : ௬௫. தற்பதத்திலுந் தொம்பதத்திலும் ஒரு பிரஹ்மத்தைத்தானே யேகதேசமாகச் சொன்னுல் இரண்டு பதங்களுக்கும் அர்த்தபேத முண்டோ ?

விடை : ௬௫. ஆரோபமான சரீரத்தையும் ஜகத்தையுமுன்னிட்டுப் பேதமாம். அதிஷ்டான சைதன்னிய மொன்றேயொழிய விரண்டில்லை.

வினு : ௬௬. பிரத்தியக்ஷமாய் நிர்ணயப்பட்டிருக்கிற ஜீவேசுவரர்களைப் பிராந்தியென்னலாமா ?

விடை : ௬௬. சைதன்னியம்போல ஏகலக்ஷணமாய் நிர்ணயமாகாமையினுலும், சித்தாகவுஞ் சடமாகவும் நித்தியமாகவும் அநித்தியமாகவும் பின்னியிருத்தலாலும் பிராந்தியென்பதிற் பிழை யில்லை.

வினு : ௬௭. பிரபஞ்சத்தில் ஒருதன்மையாய்த் தோற்றுகிற பிராந்தனுக்கும் விவேகிக்குந் தாரதம்மியம் யாது ?

விடை : ௬௭. புத்தியாவது யாது? சிதாபாசனுகின்றவன் யார்? ஆத்மாவாவது யார்? ஜகத்தாவது எப்படித் தோற்றுமென்னும் கலக்கமுடையவனே பிராந்தன்; இவனுக்கே சம்சாரம். இவற்றை அவ்வவற்றின் சுபாவத்துடன் பகுத்தறிந்து, தன்னைச் சச்சிதாநந்தமென்று நிச்சயிப்பவனே முத்தனென்று வேதாந்தஞ் சொல்லுகின்றது.

வினு : ௬௮. தான் எப்போதுஞ் சச்சிதானந்தமா யிருத்தற்கு அடையாளம் யாது ?

விடை : ருஅ. மாயாவிருத்திகள் மனோவிருத்திகள் தோன்றிநின் றழிவதற்குச் சாக்ஷியாயிருக்கும் ஆத்மா சத்தென்பது கூடும்; எல்லாவற்றையும் அறிவதனால் சித்தென்பதுங் கூடும்; பஞ்சகோசங்களைக் கைவிட்டாலுந் தான் கைவிடப்படாத வஸ்துவாதலால் ஆநந்த மென்பதுங் கூடும். ஆதலால் இவரே பரமசிவனென்னும் புராண வசனமே பிரமாணம்.

வினா : ருகூ. இந்தக் கூடஸ்தருக்கு அந்நியமாயிருக்கும் சீவேசுவரர்கள் மாயாகற்பிதமான பூத பௌதிகங்கள்போல ஜடமாகாது சைதன்னியமாயிருக்கின்றனர். இவர்களை மாயா கற்பிதரென்று சொல்லலாமா?

விடை : ருகூ. சகலவித பாண்டங்களும் மண்ணில் பிறந்தாலுங் கண்ணாடிப் பாத்திரங்கள் நிர்மலமாயிருப்பதுபோல் மாயாகற்பிதங்களுக்குள் சீவேசுரர்கள் சொச்சத் திரவியர்கள்.

வினா : சய. காசகும்பங்கள் பிரகாசமானாலுஞ் சடமாயிருப்பதுபோலச் சீவேசுவரர்களும் ஜடமாயிருக்கக் காணவில்லையே?

விடை : சய. அசனத்திற் பிறந்த சரீர இந்திரியாதிகளுக்குள்ளே மனது போதரூபமா யிருப்பதுபோல, மாயா கற்பிதங்களுக்குள் சீவேசுரர்களும் போதரூபமா யிருப்பர்.

வினா : சக. மாயை சடத்தைக் கற்பிக்குமேயல்லாமற் சைதன்னியத்தையுங் கற்பிக்குமோ?

விடை : சக. ஒரு சீவனிடத்தி லிருக்கும் நித்திரா மோகம் அநேகஞ் சேதனாசேதனங்களைக் கற்பிக்கக் கண்டது போலச் சீவேசுவரர்களை மஹாமாயை கற்பிக்கு மென்பதில் ஆச்சரியம் யாது?

வினா : சஉ. கிஞ்சிஞ்ஞத்துவ முதலான சீவகுணங்களை மாயை கற்பிக்குமன்றி, சர்வஞ்ஞத்துவம் சர்வேசுரத்துவம் பஞ்சகிருத்தியத்துவ முதலிய கல்யாண குணங்களை மாயை கற்பிக்குமோ?

விடை : சஉ. பிள்ளையைப் பெற்றவன் அதற்குப் பேரிடு வதுபோல ஈசுரனைக் கற்பித்த மாயைக்கு, அவரவர்களுக் கேற்ற தொழிற் கற்பிப்பதில் பாரம் யாது மில்லை.

வினா : சங. இத்தனை வல்லபமா யிருக்கும் மாயைக்கு ஒரு கூடஸ்தரைக் கற்பிக்கச் சத்தியில்லையோ ?

விடை : சங. ஜீவேசுரர்கள் கற்பிதரென்பதற்கு வேத ப்பிரமாணம் இருப்பதுபோல் கூடஸ்தர் மாயாகற்பிதரென்ப தற்கு ஒரு வேதப்பிரமாணமும் இல்லை. இவரே உண்மைப் பொருள், ஆதிவஸ்து வென்று சகல வேதங்களுங் கொண் டாடுகின்றன. ஆதலால் உன்னுடைய சங்கைக் கிடமில்லை.

வினா : சச. இப்படி மாயாகற்பிதமான ஜீவேசுரர்களால் என்ன காரிய முடியும்?

விடை : சச. மாயையை விரியப் பார்க்கும் பார்வை முதல் சிருஷ்டிப் பிரவேசாந்தபரியந்தம் ஈசுர கிருத்தியம், சாக் கிர சொப்பன சுழுத்தி முத்தி பரியந்தமான சம்சாரம் யாவும் ஜீவகிருத்தியம்.

வினா : சரு. கூடஸ்தருக்குக் கிருத்தியம் யாது ?

விடை : சரு. அவர் அசங்கர், அவரிடத்தில் ஒரு கிரு த்தியமும் இல்லை.

வினா : சசு. இப்படிப் பகுத்தறிந்தவன் எப்படி யிருப் பான் ?

விடை : சசு. பத்தன், முத்தன், பந்தம், மோக்ஷம், உற் பத்தி, நாசம் சகலமும் மாயாகற்பிதம், தனக்குச் சுபாவமாக வொன்று மில்லையென்று கலக்கமறத் தெளிந்திருப்பன்.

வினா : சஎ. இப்படி யொன்று மில்லாவிட்டாற் சீவே சுவர ஜகத்து மரியாதை யெல்லாம் வேதத்திற் சொல்லியிருப்ப தென்னை ?

விடை : சஎ. அதிசூக்ஷ்மமாயிருக்கும் ஆத்மாவைக் காட் டும் பொருட்டுத் அலாருந்ததி நியாயமாகச் சொல்லுகின்றது.

வினா: சஅ. இப்படி யறிந்த விவேகி பிராரத்தத் தோற்ற த்தை யெப்படிக் காண்பன்?

விடை: சஅ. சாஸ்திர மறியாதவன் கலங்குவதுபோல க் கலங்காமல், மாயையாகிய மேகம் பிரபஞ்சமாகிய மழையை வேண்டியபடி பெய்தாலுஞ் சிதாகாசமா யிருக்கும் நமக்கு ஹானி யேது, லாப மேதென்று கவலை கெட்டிருப்பன்.

இந்தக் கூடஸ்த தீபிகையை நித்தியம் அநுசந்தானம் பண்ணினவன் தானே கூடஸ்தரூபமாய் விளங்குவன் என்பது திண்ணம்.

மூன்றாவது கூடஸ்த தீபம் முற்றிற்று.

ஆ௨ வினாவிடைகள் சஅ.

நான்காவது தியானதீபம்.

வினா: க. சாதன சதுஷ்டயமுள்ள அதிகாரிக்குச் சிர வண முதலிய அநுஷ்டான ஞானத்தினால் வரும் வாக்கியார்த்த ஞானத்தையும், ஜீவன் முத்தி நிலையையும், கீழ்க் கிரந்தத்தில் சொல்லப்பட்டும் பிரஞ்ஞாமந்த முதலிய பிரதிபந்தங்களால் முன்சொன்னநிலை திடப்படாதவர்களுக்கு மோக்ஷார்த்தமாய்ச் செய்யவேண்டிய அநுஷ்டானம் யாது?

விடை: க. பிரஹ்மோபாசனையே பண்ணவேண்டியது.

வினா: உ. சகுணோபாசனைபோல இதற்குக் கிரியையுண்டோ?

விடை: உ. இந்தத் தியான தீபிகையில் சொன்னபடி பிரஹ்மத்தைத் தியானம்பண்ணுவதேயல்லாமல் வேறு கிரியை யில்லை.

வினா : ரு. இதற்குப் பிரமாணம் யாது?

விடை : ரு. தாபநீயமென்னும் உபநிஷத்தே பிரமாணம்.

வினா : சா. தானாயிருக்கும் வஸ்துவை அன்னியமா யிருக்கும் வஸ்துவைப்போல உபாசிக்க லாமோ?

விடை : சா. சம்வாதிப் பிரமைபோலக் கண்டுங் காணுமலிருந்தமையினால் உபாசனை செய்யலாம்.

வினா : ௬. சம்வாதிப் பிரமை யாது? விசம்வாதிப் பிரமை யாது?

விடை : ௬. மணிப் பிரபையைக் கண்டு மணியென்று நாடுதல் சம்வாதிப் பிரமை, தீபப் பிரபையைக் கண்டு மணியென்று நாடுதல் விசம்வாதிப் பிரமை.

வினா : சு. பிராந்தியாய் நாடினவனுக்குப் பலன் கொடுக்கமாட்டாதே?

விடை : சு. விசம்வாதிப்பிரமை பலன் கொடாது, சம்வாதிப் பிரமை நாடின பொருளைக் கொடுக்கும். ஆகையினாற் பிரஹ்மோபாசனையுஞ் சம்வாதிப்பிரமைபோல முத்தியாகிய பலனைக் கொடுக்கும்.

வினா : எ. இந்தப் பிரஹ்மத்துவ உபாசனைக்கு அதிகாரி யாவன்?

விடை : எ. பரோக்ஷ ஞானியே அதிகாரி.

வினா : அ. உபாசனை பண்ணுங் கிரமம் எப்படி?

விடை : அ. அகண்டாகாசபோதம் தானென்பதே கிரமம்.

வினா : கூ. இந்த வுபாசனைக்குத் திருஷ்டாந்தம் யாது?

விடை : கூ. கண்ணாரக் காணவிட்டாலுஞ் சாஸ்திரஞ் சொன்னபடி பாவிக்கும் மூர்த்தித் தியானமே திருஷ்டாந்தம்.

வினா : க0. பரோக்ஷ ஞானத்திற்கு லக்ஷணம் யாது?

விடை: க0. பிரஹ்மம் தானென்றறியாமற் பிரமமொன்றுண்டென்று நிச்சயித்ததே பரோக்ஷ ஞானம்.

வினா: கக. பரோக்ஷ ஞானஞ் சந்தேகமாகலின் எப்படிப் பயன் தரும்?

விடை: கக. மூர்த்தித்தியான உபாசனைபோலப் பரோக்ஷ ஞானத்தில் ஒருவருக்குஞ் சந்தேகம் இல்லை. ஆதலால் சம்வாதிப் பிரமைபோலப் பலன் கொடுக்கும்.

வினா: கஉ. பிரஹ்மத்தைத் தானாகச் சொல்லும் வேதாந்தத்தைப் படித்தும், இவனுக்கு அந்தஞானம் பரோக்ஷமாதற்குக் காரணம் யாது?

விடை: கஉ. தேகமே தானென்னும் விபரீதபாவனை பிரஹ்மத்தைத் தானாகத் தோற்றவிடாது.

வினா: கங. பரோக்ஷமா யிருக்கும் அத்வைத புத்தியைப் பிரத்தியக்ஷமா யிருக்கும் துவைத புத்தி ஏன் கெடுக்காது?

விடை: கங. பிரத்தியக்ஷமாயிருக்கும் சிலாபுத்தி பரோக்ஷமா யிருக்கும் ஈசுர புத்தியைத் தள்ளாததுபோல, பிரத்தியக்ஷமாயிருக்கும் துவைத புத்தியும், பரோக்ஷமாயிருக்கும் அத்வைத புத்தியைக் கெடுக்கமாட்டாது.

வினா: கச. சிரத்தையில்லாதவனுக்குச் சிலையில் ஈசுவர புத்தி வரக் காணோமே?

விடை: கச. சிரத்தை யுள்ளவனே யதிகாரி, சிரத்தையில்லாதவனைச் சாஸ்திரத்தி லெடுத்துக் காட்டவேண்டியதில்லை.

வினா: கரு. வேதாந்தம் படித்தா லன்றிப் பரோக்ஷ ஞானம் வாராதோ?

விடை: கரு. மூர்த்தி யுபதேசம்போலப் பிரஹ்மத்தை யுபதேசம் பெற்று அறியலாம்.

வினா: கசு. சாஸ்திர விசாரம் பண்ணாமற் பிரஹ்மத்தை யுபதேசமாகக் கேட்டறிவ தெப்படி?

விடை : கசு. கர்மசூத்திரத்தைப் படிக்காமல் கர்மாநுஷ்டானஞ் சித்திப்பது போலவும், ஆகமபுராணங்களைப் படிக்காமல் உபாசனையை யநுஷ்டிப்பதுபோலவும், சாஸ்திர விசாரம் பண்ணச் சத்தியில்லாதவன் மஹாத்மாக்களிடத்தில் பிரஹ்மம் இத்தன்மையதென்று கேட்டு உபாசிக்கலாம்.

வினா : கஎ. சாக்ஷாத்காரம் உபதேசத்தினால் வாராதோ?

விடை : கஎ. விசாரமில்லாதவனுக்குச் சாக்ஷாத்காரம் வராது?

வினா : கஅ. பரோக்ஷஞானத்திற்குப் பிரதிபந்தம் யாது?

விடை : கஅ. சிரத்தையில்லாமையே பரோக்ஷ ஞானத்திற்குப் பிரதிபந்தம்.

வினா : கக. அபரோக்ஷ ஞானத்திற்குப் பிரதிபந்தம் யாது?

விடை : கக. விசாரமில்லாத தோஷமே.

வினா : உ0. சாஸ்திர விசாரம் பண்ணினாலுஞ் சிலருக்குச் சாக்ஷாத்காரம் ஏன் வரவில்லை?

விடை : உ0. விபரீதபாவனையினால் சாஸ்திரம் படித்தும் சாக்ஷாத்காரம் வராமலிருக்கும்.

வினா : உக. சாஸ்திரம் படித்தும் சாக்ஷாத்காரம் வராதவனுக்குச் செய்யத்தக்க காரியம் யாது?

விடை : உக. விசார பலமான சாக்ஷாத்காரம் வருமளவுஞ் சாஸ்திரத்தைத் திரும்பத்திரும்ப விசாரிக்க, பயிர் செயல் வகையினால் கர்ப்ப நாளில் பரிபக்குவமாவதுபோல ஞானமுந் தீர்க்க கால விசாரத்தினால் வரும்.

வினா : உஉ. மரணபரியந்தம் விசாரம் பண்ணின வாமதேவர், சடபரதர் என்னும் இருவருக்கும் அந்தஜன்மத்திலே ஏன் ஞானம் உதயமாகவில்லை?

விடை : உஉ. பிரதிபந்தத்தினால்.

வினா : ௨௩. பிரதிபந்தம் யாது ? அஃதெத்தனை விதமாயிருக்கும் ?

விடை : ௨௩. பூதப் பிரதிபந்தம், பௌஷியப் பிரதிபந்தம், வர்த்தமானப் பிரதிபந்தம் என்று மூன்று விதமாயிருக்கும் ; இதிற் பூதப் பிரதிபந்தம் கைவிட்ட எருமையிற் பற்றுச் சந்நியாசியிடத்திற் கண்ட கதை. * பௌஷியத் பிரதிபந்தமாவது சங்கற்பத்துடன் கூடியிருந்து வேதாந்த விசாரம் பண்ணின வாமதேவருக் கொரு ஜனனமும், சடபரதருக்கு மூன்று ஜனனமுமாகக் காணப்பட்டது. வர்த்தமானப் பிரதிபந்தமாவது விஷயாசக்தி, பிரஞ்ஞாமந்தம், குதர்க்கம், விபரீத பாவனை, துராக்ராகந்தை யென்பனவாம்.

வினா : ௨௪. இந்தப்பிரதிபந்தத்தை நீக்குமுபாயம் யாது?

விடை : ௨௪. பூதப் பிரதிபந்தம் அவனவன் புத்தியை யநுசரித்துப் போதிக்கத்தீரும்; பௌஷியத் பிரதிபந்தம் ஜநநமெடுத்துத் தீரும் ; வர்த்தமானப் பிரதிபந்தம் விஷயாசக்தி சாதன சதுஷ்டயத்தினாற் றீரும்; பிரஞ்ஞாமந்தம் பலகாலுஞ் சிரவணம் பண்ணத் தீரும்; குதர்க்கம் மனனத்தினாற் றீரும் ; விபரீத பாவனை நிதித்தியாசனத்தினாற் றீரும்; துராக்ராகந்தை சமாதியினாற் றீரும்.

வினா : ௨௫. வேதாந்த விசாரம் பண்ணியும் பௌஷியத் பிரதிபந்தத்தினால் ஜன்மம் வருமென்றால், விசார ஞானமும் வியர்த்தமாமோ ? பிரதிபந்தத்தினாற் சன்மம் வருமென்பதற்குப் பிரமாணம் யாது ?

விடை : ௨௫. விசாரத்தினா லுண்டாகிய ஞானம் பிரதிபந்தந் தொலைந்தவுடன் மோக்ஷத்தைக் கொடுக்கு மாகலின் விசாரம் ஒருகாலும் பாழாய்ப் போகாது; யோகப் பிரஷ்ட

---

* பௌஷியத் பிரதிபந்தம் ஜன்மாந்திரத்திற்கு ஏதுவான பிராரத்தசேஷம். இதை வாமதேவர் சடபரதரிடத்திற் காண்க.

னும் இரண்டொரு ஜன்மத்தில் கிருதார்த்த னுவானென்னும் கீதாவசனமே பிரமாணமாம்.

வினா: உ௬. பிரதிபந்த தீரத்தக்கதாக உபாசிக்கச் சொன்னது சகுணமோ? நிர்க்குணமோ?

விடை: உ௬. நிர்க்குணம்.

வினா: உஎ. சகுணமானல் உபாசிக்கலாம், நிர்க்குணத்தை யெப்படித் தியானம் பண்ணலாம்?

விடை: உஎ. கேட்டவண்ணந் தியானிப்பது இரண்டிற்குஞ் சரி.

வினா: உஅ. வாக்குக்கும் மனதுக்கு மெட்டாத நிர்க்குணத்தை யெப்படித் தியானம் பண்ணலாம்?

விடை: உஅ. வாக்குக்கும் மனதுக்கும் எட்டுவதைக் கேட்டுச் சாக்ஷாத்காரம் பண்ணுவதுபோல இதனையுங் கேட்டுச் சிந்திக்கலாம்.

வினா: உக. அந்நியமா யுபாசிக்கப்பட்டவை யாவும் பிரஹ்மமல்ல, பிரஹ்மந் தானேயென்றறியவேண்டுமென்று ஒரு வேதஞ் சொன்னமையினுற் பிரஹ்மோபாசனை நிஷித்தமாமே?

விடை: உக. அறியப்பட்டதற்கும் அறியப்படாததற்கும் அந்நியமாயிருக்கும் பிரஹ்ம மென்று ஒரு வேதத்தில் ஞானத்தை நிஷேதிக்கின்றது.

வினா: ௩0. பிரஹ்மோபாசனையில் உமக்கித்தனை பத்தி என்ன?

விடை: ௩0. உனக்கு இத்தனை துவேஷந்தான் என்னை?

வினா: ௩க. நிர்க்குணத்தை யுபாசித்தற்குப் பிரமாணம் யாது? விதியாது?

விடை: ௩க. தாபநீயம், சைப்பியம், காடகம், மாண்டூக்கியம் என்னும் உபநிஷத்துகள் நான்கும் பிரமாணங்களாம். பஞ்சீகரண மஹாவாக்கியமே அநுஷ்டானவிதி.

வினா: கூஉ. பஞ்சீகரணம் ஞானசாதனமல்லவோ? அதனை எல்லோரும் ஏன் அநுஷ்டிக்க வில்லை?

விடை: கூஉ. ஞானசாதன மென்பது நமக்குஞ் சம்மதம். அநுஷ்டியாதவன் றானே கெட்டான். அதனால் பிரஹ்மோபாசனைக்குத் தூஷண மில்லை.

வினா: கூகூ. எல்லோரும் அநுஷ்டியாத வுபாசனையை நீர் ஏன் சொல்ல வந்தீர்?

விடை: கூகூ. ஒருவகை மூடன் இதனிலும் அதிகமென்று வசியமந்திரத்தைச் சபிக்கக் கடவன்; இதனிலும் அதிகமூடன் கிருஷியாதியைப் பண்ணக் கடவன்; அந்த மூடரைக் குறித்துச்சொல்லவில்லை. முமுக்ஷுக்களின்பொருட்டு நிர்க்குண உபாசனை சொன்னோம்.

வினா: கூச. இப்படி யுபாசிக்கப்படுவது நிர்க்குணமானால் இந்த வஸ்துவிற்கு ஆநந்தாதி குணங்களும், அதூலாதி குணங்களு முண்டென்று சொல்லுவது கூடாதே?

விடை: கூச. சுருதி சம்மதமாக இந்த லக்ஷண சூத்திரம் சொன்ன வியாசரைக் கேள்.

வினா: கூரு. சச்சிதாநந்தமே நானென்பது உபாசனையானால் ஞானத்திற்கும், தியானத்திற்கும் பேதம் யாது?

விடை: கூரு. வஸ்து தந்திரம் ஞானமும், கர்த்திரு தந்திரம் உபாசனையுமாம்.

வினா: கூசு. வஸ்து தந்திரமாயிருக்கும் ஞானம் எதனால் வரும்?

விடை: கூசு. அக்கினியை அக்கினி யென்பதுபோலச் சுபாவத்தைச் சொல்லுவது வஸ்து தந்திர ஞானம்; அது விசாரத்தினால் வரும்.

வினா: கூஎ. இந்த ஞானம் வந்தால் என்ன செய்யும்?

விடை: கூஎ. சகல சம்சாரத்தையும் சுடும்.

வினு: ஙஅ. அந்த ஞானத்தை மறந்தால் ஹானி யாது?

விடை: ஙஅ. மறந்தாலுஞ் சம்சாரத்தைக் கொடுக்காது.

வினு: ஙகூ. அந்த ஞான முள்ளவன் எப்படி யிருப்பன்?

விடை: ஙகூ. சீவன்முத்தனுய்த் திருப்தியடைந்து பிராரத்த க்ஷயத்தைப் பார்த்திருப்பன்.

வினு: ச0. கர்த்திரு தந்திர மென்னும் உபாசனை எதனுல் வரும்?

விடை: ச0. உபசாரமாக ஸ்திரீயை அக்கினியென்பது போலக் கர்த்திருதந்திரமாயிருக்கும் உபாசனை குருபதேசத்தினுல் வரும்.

வினு: சக. அந்த உபாசனை வந்தால் என்ன செய்யும்?

விடை: சக. தியானித்தபோது நாம் பிரஹ்ம மாவோமென்னும் புத்தியைக் கொடுக்கும்.

வினு: சஉ. அந்த உபாசனையை மறந்தாலென்னசெய்யும்?

விடை: சஉ. விக்ஷேபத்தின் கையில் காட்டிக் கொடுத்துவிடும்.

வினு: சங. அந்த உபாசனுஞான முள்ளவன் எப்படியிருக்க வேண்டும்?

விடை: சங. நித்திரை வருவளவும் மரணம் வருமளவும் தியானம் விடாமற் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும்.

வினு: சச. இந்த உபாசனை முதிர்ந்ததற்குப் பிரத்தியக்ஷம் யாது?

விடை: சச. பிக்ஷை யெடுப்பவன் சொப்பனத்திலும் பிக்ஷை யெடுக்கக் காண்பது போலவும், வேத மோதுவோன் வேத மோதக் காண்பது போலவும் இவ்வுபாசகன் தினந்தோறுஞ் சொப்பனத்திலுந் தியானம் பண்ணக் கண்டால் உபாசனை முடிவு பெறும்.

வினு: சரு. ஞானம் வஸ்து தந்திர மென்பதில் யுத்தி யாது?

விடை: சரு. கூடஸ்த் சைதன்னியத்தைவேதஞ் சொன்னபடி யிருக்கிறதா, இல்லையா வென்று லக்ஷணவிருத்தியினுல் ஒருவாறு சோதித்துப் பார்த்துக் கொள்ளுவதே யல்லாமல் தான் வேண்டியபடி சிந்திக்கப்படாமையே யுத்தி.

வினு: சசு. தியானம் கர்த்ரு தந்திரமென்பதில் யுத்தி யாது?

விடை: சசு. தான் வேண்டியபடி தியானிக்கவும், தியானிக்காம லிருக்கவும், மாறுபாடாய்த் தியானிக்கவும் கூடியதாயிருப்பதே யுத்தி. ஆதலால், எந்நேரமுந் தியானஞ் சாவதானமாகப் பண்ணவேண்டும்.

வினு: சஎ. எந்நேரமுந் தியானத்திலே மனதாயிருப்பவனுக்குச் செய்காரியம் எப்படி நடக்கும்?

விடை: சஎ. பரபுருஷனைத் தழுவிய பெண் எந்நேரமும் அவ்விடத்திலேயே ஆரூடமனதாகவிருந்தாலும், மேலெழுந்தபடியாகச் செய்காரியஞ் செய்தொப்புவிப்பதுபோலச் செய்வன்.

வினு: சஅ. சாக்ஷாத்காரஞானிக்குச் செய்காரியம் எப்படி நடக்கும்?

விடை: சஅ. கூத்தாடி நடிப்பதுபோலச் சீவன் முத்தனுஞ் செய்காரியம் ஒன்றும் தப்பாமற் செய்வன்.

வினு: சகூ. உபாசனை லோகவிவகாரத்திற்கு விரோதமென்பது எதனுல்?

விடை: சகூ. மனதில் தியானமுந் தேகேந்திரியாதிகளில் செய்தொழிலுமாகவிருத்தலால் விவகாரம் விரோதமாம்.

வினு: ருo. ஞானத்திற்கு விவகாரம் விரோதமில்லையென்பது எதனுல்?

விடை: ருO. ஆத்மாமாத்திரஞ் சின்மாத்திரம், மற்றுள்ள யாவும் மாயாமயமென்னும் ஞானத்திற்கு விவகாரசாதனமான திரிவிதகரணத்தில் ஒன்றும் வேண்டாமையினால் விவகார விரோதமில்லை.

வினா: ருக. சாக்ஷாத்காரம் உள்ளவனுக்கு லக்ஷணம் யாது?

விடை: ருக. கடத்தைப் பார்ப்பவன் புத்தியைத் தண்டியாததுபோலத் தத்துவத்தை உள்ளபடி கண்டு களித்துக் கவலைகெட்டிருப்பன்.

வினா: ருஉ. தியானம்பண்ணுபவனுக்கு லக்ஷணம் யாது?

விடை: ருஉ. பிரபஞ்சத்தை நினைத்தாற் றியானங் கலைந்து கெட்டுப்போமென்னும் விவேகத்துடன் புத்தியை மறுத்துத் தண்டித்துக்கொண்டிருப்பன்.

வினா: ருங. ஒருகாலறியப்பட்ட கடத்தை வேண்டியபோதறிவதற்கும், சிந்திப்பதற்கும், இவ்வாறு இருக்குமென்று சொல்லுவதற்கும் முயற்சி செய்யவேண்டியதில்லையே; இவ்வாறு பிரஹ்மஞானிக்குப் பொருந்துமோ?

விடை: ருங. அப்பிரகாசமாயிருக்கும் கடமே ஒருகாற் கண்டது உடனே யிப்படித் தெரியுமாயின் சுயம்பிரகாச சைதன்னியம் பிரகாசித்தற்குக் கேட்கவேண்டுமோ?

வினா: ருச. நான் பிரஹ்மமென்னும் விருத்தி ஞானம் க்ஷணத்தில் நஷ்டமாய்ப் போமோ?

விடை: ருச. அது கடஞானத்திலுஞ் சரியா மன்றோ?

வினா: ருரு. இப்படித் தத்துவஞானிக் கொருசிந்தனையுமில்லாவிட்டால் எந்நேரமும் மனது வெளியில் நாடுமே?

விடை: ருரு. கற்பித வஸ்துவில் பிரவர்த்தித்ததினால் ஹானி யாது?

வினா: ருசு. அப்படியானால் உம்முடைய சித்தாந்தம் மரியாதை கடந்ததாகுமே?

விடை: ருசு. விதிநிஷேத சாஸ்திர மரியாதை தத்துவ ஞானியின்பொருட்டுச் சொன்னதன்று.

வினா: ருஎ. விதி நிஷேத சாஸ்திரம் யாரைக்குறித்து உண்டாயிற்று?

விடை: ருஎ. வர்ணாச்சிரமம் வயது அவஸ்தை யென்னும் அபிமான முடையவன்பொருட் டுண்டாயிற்று.

வினா: ருஅ. ஞானிக்கு வர்ணாச்சிரமாதிகள் வேண்டிய தில்லையோ?

விடை: ருஅ. வர்ணாச்சிரமாதிகள் மாயாகற்பித உபாதி மாத்திரத்தில் காணப்படுமேயல்லாமல் ஆத்மாவினிடத்தில் இல்லை.

வினா: ருகூ. முன் அஞ்ஞானவஸ்தையில் அநுசரித்த விதிகளைமற்றோரவஸ்தையிற் கைவிட்டாற்றோஷமில்லையோ?

விடை: ருகூ. கர்மிகளுக்குப் பால்யாவஸ்தையில் விதி நிஷேதம்வேண்டிய தில்லாததுபோலஞானவஸ்தைக்கும்வேண்டிய தில்லை.

வினா: சுo. குழந்தை ஒன்றுமறியாத அஞ்ஞானியல்லவோ? ஞானியும் அப்படித்தானே?

விடை: சுo. ஒன்று மறியாதவனுக்கும் எல்லாமறிந்து சர்வேசுவரனாயிருக்கும் ஞானிக்கும் விதிநிஷேதபேதம் வேண்டிய தில்லை.

வினா: சுக. அப்படியானால் விதிநிஷேத பேதம் யாருக்குண்டு?

விடை: சுக. சொற்பமறிந்தும் அறியாமலுமாக விருக்கும் நடுநாடனுக்குண்டு.

வினா: ருஉ.ஞானியாயிருப்பவன் ஜகதீசுவரனானாற் சாபாநுக்கிரகங்கள் பண்ணவேண்டுமே?

விடை : சுஉ. சாபாநுக்கிரக சாமர்த்தியம் தபோபலமே யல்லாமல் ஞானபல மன்று.

வினு : சுரு. தபோ மூலமாகப் பிரஹ்மத்தை யறியவேண்டுமென்று தைத்திரிய உபநிஷத்தில் சொல்லப்பட்டிருத்தலால் தபோபலமல்லவோ ஞானம் ?

விடை : சுரு. ஞானகாரணமான தபசு சாபாநுக்கிரகத்திற்குக் காரணமன்று.

வினு : சுச. பூர்வாசாரிகளாயிருக்கும் வியாசர் முதலானவர்களிடத்து இருவகையுங் காணப்பட்டிருக்கிறதே; ஞானமுள்ளவர்களுக்கெல்லாம் அப்படியிருக்கவேண்டாமோ ?

விடை : சுச. மந்திரவாதசித்தியும் ஞானமும் ஒருவரிடத்தில் இருக்கக் கண்டதுபோலவும், சோதிஷமும் ஞானமும் ஒருவரிடத்தில் இருக்கக்கண்டதுபோலவும், ரசவாதமும் ஞானமும் ஒருவரிடத்தில் இருக்கக்கண்டதுபோலவும், சாபாநுக்கிரக சாமர்த்தியமும் ஞானமும் வியாசாதிகளிடத்தில் காணப்பட்டன. இந்தச் சாபாநுக்கிரக சாமர்த்தியமெல்லாம் ஞானமல்ல, ஞானமாத்திரம் அப்பியசித்தவனிடத்தில் ஜீவன்முத்தியநுபவமாத்திரமிருக்கும்.

வினு : சுரு. சாபாநுக்கிரக சாமர்த்தியமில்லாதிருந்தால் இவனென்ன ஞானியென் றெல்லாரும் நிந்திப்பார்களே ?

விடை : சுரு. விதி நிஷேத சாஸ்திரத்தைக் கைவிட்ட சந்நியாசிகளை யெல்லோரும் பூஜிப்பதேயல்லாமல் நிந்திக்கக் காணேமே.

வினு : சுசு. போகலம்படராயிருக்கும் தூர்த்தர்களெல்லாம் நிந்திப்பார்களே ?

விடை : சுசு. இந்தப் பிரகாரத்தில் வர்ணாச்சிரமமுடையோர் தேகாபிமானிகள் ஞானியை நிந்திக்கட்டும்; மாடுகள், புலிகள் ஞானியைப் பாயட்டும்; அதனாலே ஞானிக்கு ஹானி

யேது? ஆதலால் இவ்வாறு வேண்டியவண்ண மிருக்கலாமெ ன்பதனுல் ஞானிக்கு இராச்சியபாரம்பண்ண இச்சையுண்டா யினும் பண்ணலாம்.

வினு: சுஎ. மாயா கற்பிதமாயிருக்கும் ஜகத்து மித்தை யென்னும் புத்தி வந்தபின் இராச்சியபாரம்பண்ண இச்சைவந் தால் ஞானம் அப்பிரயோசனமாகுமே?

விடை: சுஎ. மித்தியாபுத்தியினு லாசையற்றுப்போனுல் கர்மம், உபாசனே, தியானம், இராச்சியம் முதலியவற்றைப் பிராரத்தத்தின்படி ஞானி பண்ணிவருவன்.

வினு: சுஅ. தியானியும் இப்படி வேண்டியவண்ண மிரு க்கலாகாதோ?

விடை: சுஅ. மூர்த்தித் தியானம்போல் தியானத்தினுல் நான் பிரஹ்மமென்னும் நிலே தியானம் விட்டால் இல்லாமற் போதலால் நிரந்தரஞ் சாவதானமாய்த் தியானம்பண்ணிக்கொ ண்டிருக்கவேண்டும். ஞானியைப்போல வேண்டியவண்ணம் இருக்கக் கூடாது.

வினு: சுகூ. ஞானிக்கு ஞானத்தை மறந்திருக்கும் வேளே யில் பிரஹ்மத்துவ மில்லாமை சரியல்லவோ?

விடை: சுகூ. பிராமணனுக்கு நான் பிராமணனென்பது நினேயாவிட்டாலுஞ் சுபாவசித்தமா யிருப்பதுபோல லக்ஷணு விருத்தியினுல் ஆத்மாவைச் சோதித்திருக்கும் ஞானிக்கு நான் பிரமமென்பது மறந்திருந்தாலுஞ் சுபாவசித்தமே யல்லாமல், தியானம் பண்ணுபவனேப்போல மறந்து கெட்டோமென்னும் பீதி யில்லே.

வினு: எ0. இவ்வாறு உபாசகனுக்கும் நான் பிரம மென்பது மறந்திருந்தாலுஞ் சுபாவ சித்தமாயிருக்கும் பிரமத் துவம் உண்டோ? இல்லேயோ?

விடை: எ0. இந்த உபாசகனுக்குமாத்திர மன்று, பாம ரர் மிருகங்கள்முதலியவற்றிற்கெல்லாம் பிர்ஹ்மத்துவஞ்சுபாவ சித்தந்தானே.

வினா: எக. பாமரர், மிருகங்கள் முதலான வைகளுக்கும் நான் பிரஹ்மமென்னும் அறிவில்லாமையினால் சுபாவசித்தமா யிருக்கும் பிரஹ்மத்துவத்தினால் பிரயோஜனம் யாது?

விடை: எக. அப்படி யறிவில்லாமை இவ்வுபாசனுக்குஞ் சமானமாகலின், சுபாவசித்தப் பிரஹ்மத்துவத்தினாற் பிரயோஜன மின்மை இவனுக்குஞ் சரிதான்.

வினா: எஉ. ஆனால் பிரஹ்மத் தியானமும் இப்படிப் பிரயோஜனமற்றதோ?

விடை: எஉ. பட்டினியே கிடப்பவன் பிக்ஷை யெடுத்தாவது புசிப்பது தாழ்வில்லை யென்றாற்போல வீண்வியாபாரங்களில் கிடந்து விக்ஷேபப்படுவதிலும் பிரஹ்மத்தியானம் அதிகம்.

வினா: எங. எந்தெந்தச் சாதனங்களைப்பார்க்கிலும் பிரஹ்மத்தியானம் அதிகம்.

விடை: எங. பாமர வியாபாரத்தைப் பார்க்கிலுங் கர்மாநுஷ்டானம் அதிகம், அதைப்பார்க்கிலும் சகுணோபாசனை யதிகம், அதைப்பார்க்கிலும் நிர்க்குணத் தியானம் அதிகம்.

வினா: எச. இவையாவும் ஒன்றற்கொன்று தாரதம்மியமா யிருப்பதென்?

விடை: எச. இராஜாவைக் கிட்டக்கிட்டப் பௌஷதிகமும், பிரயாசை கொஞ்சமும் ஆவதுபோல, பிரஹ்மத்தைக் கிட்டக்கிட்ட ஆதிக்கம் அதிகமாம்.

வினா: எரு. பிரஹ்மத்தியானத்திற்கு மேல் ஞானக்கிரமம் எப்படி யடையப்படும்?

விடை: எரு. சம்வாதிப்பிராந்தி முடிந்தவிடத்தில் ரத்தினத்தைக் கொடுப்பதுபோல, நிர்க்குணத்தியானம் முதிர்ந்தவிடத்தில் பிரஹ்மஞானசமாதியாவதேயல்லாமல் வேறு சாதனமில்லை. ஆகையால், அறிந்தவர்கள் அறியாதவர்களெல்லோருக்கும் குறுக்குவழியாக மோக்ஷத்தைக் கொடுத்தலால் நிர்க்குணத் தியானத்தைச் சொல்லவந்தோம். சித்தநிரோதமே சமாதியென்றும்,

அதுவே சாத்தியமென்றும் அமிர்தபிந்து உபநிஷத்துச் சொல்லு கின்றது.

வினு : எசு. இது ஒன்று மறியாதவனுக்குத் தியானத்தினு லெப்படிச் சித்திக்கும் ?

விடை : எசு. தியானமாத்திரத்தினுல் நான் பிரஹ்மமென் னும் புத்தி திடப்பட்டவுடன் நிர்விகாரத்தின் லக்ஷணமும் புத்தி யிலெளிதா யேறும். இது காரியத்தினுற் சமாதியென்று சொல்ல ப்படும். ஆதலால், சகல சாதனங்களினும் பிரஹ்மத் தியானம் அதிகமாம்.

வினு : எஎ. இப்படி மூர்த்தித்தியான தீர்த்தாடன ஜபங்க ளும் மோக்ஷ சாதனங்க ளாகாவோ ?

விடை : எஎ. பிரஹ்மத்தியானத்தை யுபேக்ஷித்து மூர்த்தி த்தியான தீர்த்தாடன ஜபங்களைச்செய்வது, உள்ளங்கையிலிரு க்கும் பால் திரளையை யெறிந்துவிட்டு, எட்டாத முழங்கையை நக்குவதற்குச் சமானமாதலால், பிரஹ்மத் தியானத்திற்குச் சரி யான சாதனம் ஒன்றுமில்லை.

வினு : எஅ. இந்தக்கிரமம் சாக்ஷாத்கார விசாரத்தைவிட்டு த் தியானம் பண்ணுபவனுக்கும் ஆகாதோ ?

விடை : எஅ. நீ சொன்னது உண்மைதான். இந்த *யோக மானது † சாக்ஷாத்கார விசாராநுசந்தானம் பண்ணமாட்டா தவனுக்கு விதிக்கப்பட்டது.

வினு: எகூ. சாக்ஷாத்கார விசாரம்போல யோகம் சாக்ஷாத் காரத்திற்கு நெருங்கின பூமி யென்பது எதனுல் ?

விடை : எகூ. யோகத்தினுல் விக்ஷேபமுழுவதும் துடை பட்டுச் சித்தநிரோதம் வரும்; அந்தச் சித்தத்தில் சாக்ஷாத்கார விசாரம் எளிதாக ஏறும் ; ஆதலால் யோகம் முக்கியமாம்.

வினு : அ0. அப்படியானுல் சாங்கியத்திற்கும் யோகத் திற்கும் விரோதம் யாது ?

---

* யோகம் - உபாசனை.

† சாக்ஷாத்காரம் - அபரோக்ஷஞானம்.

விடை : அ0. சிதாபாசனையும், ஆத்மாவையும் பகுத்துக் காண்பதும் ஒருமையாய்க் காண்பதுமே விரோதம்.

வினா : அக. யோகம் சாங்கியம் என்னும் இரண்டும் தத்துவ ஞான வாயிலாக மோட்சத்திற்குச் சாதனமா மென்பதில் பிரமாணம் யாது ?

விடை : அ௨. சாங்கியர்களால் எப்பதம் அடையப்படுகிறதோ, அப்பதமே யோகிகளாலும் அடையப்படுகிறது. இப்படி எந்தப் புருஷன் சாங்கிய யோகங்கள் இரண்டிற்கும் பலன் ஒன்றென்று பார்க்கிறானோ அவன் சாஸ்திரார்த்தத்தை நன்றாகப்பார்த்தவனாவனென்னும் கீதாவாக்கியமும், சாங்கியமும் யோகமும் தத்துவ ஞானத்திற்குக் காரணமாமென்னுங் கீதை மூலமான சுருதியும் பிரமாணங்களாம்.

வினா: அ௩. சாங்கியயோகம் இரண்டையும் தத்துவஞான வாயிலாக மோக்ஷசாதனமென்று ஒப்பினால் சாங்கியயோக சாஸ்திரங்களிற் சொல்லிய தத்துவங்களையும் அங்கீகரிக்க வேண்டுமே ?

விடை : அ௪. சாங்கியயோக சாஸ்திரங்களில் சுருதி விருத்தமான அம்சங்கள் எவையோ, அவை * ஆபாசங்களாதலால் அங்கீகரிக்கத்தக்கவை யன்று.

வினா: அ௫. பிரஹ்மத்தியானத்தினால் சாக்ஷாத்கார விசாரமல்லாமலும் மோக்ஷமுண்டென்பதற்கு யுத்தியாது? பிரமாணம் யாது ?

---

* ஆபாசம் வாதிக்கப்படுவது. அது கேவலம் பிரகிருதியே ஜகத்திற்குக் காரணம், ஈசுரன் அல்லன். அந்தப் பிரகிருதி நித்தியம், ஆத்மா நாநா என்னும் இவ்வளவம்சம் சாங்கிய சாஸ்திரத்தில் சுருதி விருத்தம்.

ஈசுவரன் தடஸ்தன், பிரதானம் நித்தியம், சீவர்கள் வாஸ்தவமானவர், நாநாவுமாவர் என்னும் இவ்வளவம்சம் யோக சாஸ்திரத்தில் சுருதிவிருத்தம்.

விடை : அஈ. குளவியை நினைத்தபுழு குளவியாவதுபோல வென்பது யுத்தி; மரணகாலத்தில் எதை நினைத்தானோ அவன் அதுவாய்ப் போவனென்னும் கீதாவசனம் பிரமாணம்.

வினா : அஅ. தியானந் திடப்பட்டன்றோ சரீரபதனகாலத்தில் உதவவேண்டும்? மத்தியில் சரீரம் விழுந்தால் கதி யாது?

விடை : அஅ. பிரஹ்ம லோகத்திற்குப் போய்ப் பிரஹ்மாவினால் தத்துவ ஞானத்தைப் பெற்று மோக்ஷத்தை யடைவனென்று தாபநீய உபநிஷத்துச் சொல்லுகிறது; இதைத்தவிர மோக்ஷத்திற்கு வழியில்லையென்று எசுர்வேதத்திற் சொல்லுகிறது. நாசிகேதுவிற்கும் இயமன் இதுவே வழியாகச் சொன்னார். சத்திய காமருக்கும் † பிப்பலாதர் இப்படியே சொன்னார். கிருஷ்ணனும் ஆத்மகீதையிலே பூமிக்குள்ளே யிருக்கும் புதையலை யெடுப்பதற்கு வெட்டியெடுத்தலையன்றி வேறுவழி யில்லாததுபோலப் பிரஹ்மத்தை யடைகிறதற்குத் தியானஞ் செய்தலையன்றி வேறு வழியில்லையென்றும், தேகமாகின்ற கல்லைப் புத்தியாகிய குந்தாலியாலே பெயர்த்துத்தள்ளி நாம் பிரஹ்மமென்னும் தியானத்தினாற் பிரஹ்மமாகியபுதையலை யடையலாமென்றுஞ் சொன்னார். ஆகையாற் பிரஹ்மத்தியானத்திற்குச் சமமான சாதன மொன்று மில்லை.

வினா : அ௯. சாக்ஷாத்கரித் தறியவேண்டிய பிரஹ்மத்தையப்படியடையாமல் தியானத்தினால் எப்படி யடையலாம்?

விடை : அ௯. அநுபவ மில்லாவிட்டாலும் அசத்தா யிருக்கும் வஸ்துவையுந் தியானத்தினா லடையவதாயிருக்க, விசாரித்தால் தானாய் உண்மைப்பொருளாயிருக்கும் பிரஹ்மத்தை நாம் பிரஹ்மமென்னும் தியானத்தினால் அடையலாமோவென்றொருவரையுங் கேட்க வேண்டியதில்லை. பூதமாயிருக்கிற காசியையுபாசிப்பதனாற் றாரகப்பிரஹ்மஞ் சித்திப்பது போலவும், சம்வாதிப் பிராந்தியினால் பிரவர்த்திக்க ரத்தினம் அகப்படுவதுபோலவும், தேகாபிமானத்தை விட்டுத் தியானத்தினால் அத்வைதமா யிருக்

† பிப்பலாதர் - ஒரு முனிவர்.

கும் ஆத்மாவே தானென்று தியானிப்பவன் இவ்விடத்திலேயே மோக்ஷத்தை யடைவனென்று வேதமுஞ் சொல்லுகிறது.

இந்தத் தியான தீபிகையை, அநுசந்தானம் பண்ணி வருபவன் பிரஹ்மத்தியானத்தை யடைந்து மோட்சத்தையடைவன்.

நான்காவது தியானதீபம் முற்றிற்று.

ஆக வினாவிடைகள் அ௫.

ஐந்தாவது நாடகதீபம்.

வித்தியாரண்ணிய ஸ்வாமிகள் வேதாந்தார்த்தம் விரிவில் பார்க்கமாட்டாதவருக்கு ஆத்மஞானம் வரும் வழியை நாடக தீபிகையில் சங்கிரகித்துச் சொல்லுகின்றார்.

வினா: க. ஆத்மா வென்பது யாது?

விடை: க. மாயாசத்திக் காதாரமா யிருக்கின்ற அத்வைதாநந்த சைதன்னியமே ஆத்மாவாம்.

வினா: உ. இவருக்குச் சிருஷ்டி யெதனால் வந்தது?

விடை: உ. நிர்விகார சைதன்னியமா யிருக்கும் இவருக்குத் தம்முடைய மாயா உபாதியினால் வந்தது.

வினா: ௩. சீவன் யாவன்?

விடை: ௩. உபாதிகளில் பிரதிபிம்பித்துச் சரீரங்களிலே பிரவேசித்து விவரிக்கும் சிதாபாசன் சீவனாவன்.

வினா: ௪. சம்சாரபந்தம் யாது?

விடை: ௪. சிதாபாசத் தோற்றரவான துவைதமே பந்தம்.

வினா: ௫. பந்தநீக்கமாகிய முத்தி யாது?

விடை: ௫. விசாரத்தினால் மாயை நஷ்டமானபின் சித்திக்கும் அத்வைதமே முத்தி.

வினா: ௬. முத்திக்குச் சாதனம் யாது?

விடை: ௬. விசாரத்தினாற் பிறந்த ஞானமே முத்திக்குச் சாதனம்.

வினு : எ. இந்த விசாரம் எதனுல் வரும்?

விடை : எ. அநந்த பிறவிகளில் ஈசுவரனை யுபாசித்தவர்களுக்கு வேதாந்த விசாரணையால் வரும்.

வினு : அ. குருவை வழிபட்டு விசாரம் பண்ணுபவன் யாவன்?

விடை : அ. தேகாபிமானியா யுள்ள சைதன்னியமே விசாரகர்த்தா.

வினு : கூ. குரு முன்னிலையாய் ஞானங் கொடுப்பவர் யாவர்?

விடை : கூ. ஜகதீசுவரனே குருமூர்த்தமாக வந்து ஞானங் கொடுப்பார்.

வினு : க0. அந்த ஈசுரன் எதனைச் செய்தால் ஞானங் கொடுப்பார்?

விடை : க0. நிஷ்காம அநுஷ்டான பத்தியினுல் ஞானங் கொடுப்பார்.

வினு : கக. ஈசுவரன் யாவர்?

விடை : கக. சாத்விக உபாதியில் பிரதிபிம்பித்துத் திரிமூர்த்தி ரூபமாய்த் தோற்றிய சைதன்னியமே ஈசுரன்.

வினு : க௨. ஒரு சைதன்னியத்திற்கு இருவகைத் தாரதம்மியம் எதனுல் வந்தது?

விடை : க௨. மாயை யவித்தை யென்னும் உபாதியினுல் வந்தது.

வினு : கங. இவர் மாயையினுற் சிருஷ்டி பண்ணும் கிரமம் யாது?

விடை : கங. சாத்விக உபாதியினுல் ஈசுரனையும், இராசத உபாதியினுற் சீவர்களையும், தாமத உபாதியினுல் மனம் முதலான பூதபௌதிகப் பிரபஞ்சத்தையுஞ் சிருஷ்டித்தார்.

வினு : கச. சிருஷ்டிக்குச் சாதன பரம்பரை யாது?

விடை: கச. நான் எனது என்னும் விருத்தியே சாதனம்.

வினா: கரு. எத்தனை வகுப்பில் சிருஷ்டி யடங்கியது?

விடை: கரு. நானென்னும் விருத்தியிலும், இதுவென்னும் விருத்தியிலும் கர்த்தாவும் விஷயமுமாயுள்ள சிருஷ்டி யடங்கியது.

வினா: கசு. இந்த வகுப்பெல்லாவற்றையும் தோற்று விப்பவர் யாவர்?

விடை: கசு. இத்தனையுந் தோற்றுவிப்பவர் ஆத்மாவே.

வினா: கஎ. நானென்னும் விருத்தி கர்த்தா வொருவனைக் கற்பித்த தென்னை?

விடை: கஎ. நானென்னும் விருத்தி ஏகாகாரமானபடியினால் கர்த்தா வொருவனைக் கற்பித்தது.

வினா: கஅ. இதுவென்னும் விருத்தி சத்தாதிகள் ஐந்தையுங் கற்பித்த தென்னை?

விடை: கஅ. இதுவென்னும் விருத்தி இந்திரிய பேதங்களினால் ஐந்தாகாரமாய்ப் பிரிந்தபடியினாற் பஞ்ச விஷயங்களையுங் கற்பித்தது.

வினா: கக. கர்த்தா ஒருவரென்பதற்கும் விருத்தி இரண்டென்பதற்கும் விருத்தி கற்பிதமாமென்பதற்கும் பிரமாணம் உண்டா?

விடை: கக. நாடகசாலையின் விளக்கானது ராஜா, பரிசாரகர், ஆடுகின்றவள், தாள மத்தளக்காரர் என்பவர்களைத் தாரதம்மிய மறத் தோற்றுவித்து, அவர்கள் இல்லாத வேளையிலும் தானாக விளங்குவதுபோல, கர்த்தா முதலியவை யுள்ள காலத்து அவற்றையும், அவை இல்லாதகாலத்து அவற்றின் இன்மையையும் காணுகின்ற சாக்ஷியே தானென்னும் அநுபவமே பிரமாணம்.

வினு: உ0. நாடகசாலேயின் விளக்கு ராஜா முதலான திருஷ்டாந்தத்தைச் சரீரத்தில் ஈது இன்னதென்று பகுத்துக் காண்பதெப்படி?

விடை: உ0. அகங்காரமே பிரபு, விஷயங்களே பரிசாரகர், புத்தியே கூத்தாடி, இந்திரியங்களே தாளமத்தளக்காரர், இவ்வெல்லாவற்றையுந் தோற்றுவிக்கும் சாக்ஷியே தீபம்.

வினு: உக. அசைவற்றிருக்கும் சாக்ஷிக்குத் தீப திருஷ்டாந்தம் பொருந்துமா?

விடை: உக. அசையாமல் நாட்டிவைத்த பகல்வர்த்தி இருந்த இருப்பிலேயே நாற்புறமுந் தோற்றுவிப்பதுபோல அகண்ட பரிபூரணமாய் அசைவற்றிருக்கும் ஆத்மாவே உள்ளும் புறம்புந் தோற்றுவிப்பர்.

வினு: உஉ. உள்ளென்பது எதைக்குறித்து? வெளியென்பது எதைக்குறித்து?

விடை: உஉ. உட்புறமென்பது சரீரத்தைக் குறித்தல்லாமற் சாட்சியைக் குறித்தன்று.

வினு: உங. உள்ளே யிருப்பவனெவன்? வெளியே யிருப்பவை யெவை?

விடை: உங. நானென்னும் அகங்காரி உள்ளே யிருப்பவன், வெளியே யிருப்பவை விஷயங்கள்.

வினு: உச. உள்ளும் புறம்புஞ் சஞ்சரிப்பது யாது?

விடை: உச. உள்ளும் புறம்புஞ் சஞ்சரித்துக் கூத்தாடுவது புத்தி.

வினு: உரு. உள்ளும் புறம்பும் அசையாமலிருப்பவர் யார்?

விடை: உரு. உள்ளும் புறம்பும் அசையாமனின்று தோற்றுவிப்பவர் சாக்ஷி.

வினு: உசு. உள்ளும் புறம்புஞ் சஞ்சரிப்பதே புத்தியானல்அப்படியொருவருஞ்சொல்லக்காணேமே.நான்போனேன், வந்தேனென்று சொல்லுகிறுர்கள். இதில் காரணம் யாது?

விடை: உகூ. பலகணி வழியாயுள்ளே விழுந்த வெய்யி லில் கை யசைவதை வெய்யி லசைவ தென்பதுபோல உள்ளே யிருக்கும் புத்தியும் இந்திரியத் துவாரத்தின் வழியே வெளியில் புறப்பட்டலைந்த தன்னுடைய அலைச்சலைத் தன்னைத் தோற்று வித்த சாக்ஷியின்பேரில் ஆரோபிக்கிற தாகலின் ஆத்மாவுக்கு அலைச்சலில்லை.

வினா: உஎ. இப்போது இன்ன இன்னதத்துவம் இன்ன இன்ன விடத்தில் இருக்கிறதென்று பகுத்துக் காட்டியதுபோல சாக்ஷி யிருக்கும் இடத்தையும் பகுத்துக் காட்டவேண்டும்.

விடை: உஎ. புத்தி முதலியவை யொழிந்த அவஸ்தை யில் சாக்ஷி யிருக்கும் இடத்தைக் காண்க.

வினா: உஅ. அப்போ தெனக்கொரு தேசமுங் காணப் படவில்லை; சாக்ஷி யிருக்கும் இடம் யாது?

விடை: உஅ. நிலத்தில் இருக்கின்றார், நீரில் இருக்கின் றார் என்பதுபோலப் புத்தி முதலானவை யொழிந்த காலத்தில் காணப்படாததனால் ஒரு தேசத்தையும் பற்றியிருப்பவரல்லர். சகல ஜக கற்பனைக்கும் அதிஷ்டானமா யிருத்தலால் சர்வ பரி பூரணராவர்.

வினா: உகூ. சகல ஜக கற்பனைகளையுங் கற்பிப்பது யாது?

விடை: உகூ. சொப்பனத்தில் உட்பிரபஞ்சத்தையும், சாக் கிரத்தில் வெளிப் பிரபஞ்சத்தையுங் கற்பித்தது புத்தி.

வினா: ௩0. சாக்ஷி யெப்படிக் காண்கின்றார்?

விடை: ௩0. இவ்வனைத்தையும் அறிவாயிருந்து அறி கின்றார்.

வினா: ௩க. அவரை நாம் அறிவதெப்படி?

விடை: ௩க. அவர் உன்னால் அறியப்படுபவ ரல்லர்; நீ தானாகவே மிஞ்சும் வஸ்துவாவர்.

வினா: ௩உ. இப்படிப்பட்ட அறிவு வருவதற்கு உபாயம் யாது?

விடை : கூஉ. குருமுகமாய் வேதாந்த விசாரம் பண்ணுவதே யுபாயம்.

வினு : கூகூ. தானுயிருக்கும் அறிவை யறியவொட்டாத பிரதிபந்தம் யாது?

விடை : கூகூ. தேகாதிகளே நாம், பிரபஞ்சமே சத்திய மென்னும் இருவகையும் பிரதிபந்தம்.

வினு : கூச. இந்தப் பிரதிபந்தத்தைத் தள்ளுவது எப்படி?

விடை : கூச. இந்தப் புத்தியைத் தள்ளும் யுக்தியையும் புத்தி கற்பித்த பிரபஞ்சத்தையுங் காணும் அறிவாயிருப்பதே தள்ளுவதாம்.

இந்த நாடக தீபிகையை யநுசந்தானம் செய்யச் சாக்ஷியே தானுக விளங்கும்.

ஐந்தாவது நாடகதீபம் முற்றிற்று.

ஆக வினுவிடைகள் கூச.

ஆருவது தத்துவவிவேகம்.

குருஸ்துதி.

வித்தியாரண்ணியஸ்வாமிகள், லோகாநுக்கிரகார்த்தமாக வேதாந்த சித்தாந்தமாகிய தத்துவ விவேகத்தை வெளியிட ஆதியில் சிஷ்டாசாரமாய்க் குருவின் நமஸ்காரம் செய்கின்ருர் :—

அநேகவித லக்ஷண விஸ்தாரத்துடன் கூடியிராநின்ற மஹா மாயாமோஹத்தை எந்நேரமும் எடுத்து விழுங்குவதே வேலையாயுள்ள ஸ்ரீ சங்கராசாரிய குருமூர்த்திகளின் பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம்.

அந்தக் குருமூர்த்திகளின் பாதாரவிந்த சேவையினுல் நிர்மலமான அந்தக்கர முடையவர்களுக்குப் பரமாத்மாவை யெளிதாய்க் கண்டறியுமாறு தத்துவ விவேகம் சொல்லப்படுகின்றது.

வினு: ௧. தத்துவம் யாது? அதத்துவம் யாது? விவேகம் யாது?

விடை: ௧. தத்துவமாவது பரமாத்மா, அதத்துவமாவது மாயாதற்காரியம், இதனைப் பகுத்தறிவதே விவேகம்.

வினு: ௨. பகுத்தறிவதெப்படி?

விடை: ௨. அறிவாயிருப்பது இது, அறியப்படுவது இது வென்று காண்பதே பகுத்தறிதலாம்.

வினு: ௩. அறிவு எத்தனை விதமாயிருக்கும்?

விடை: ௩. அறிவாயிருக்கிற ஆத்மா ஒன்றேயாம்.

வினு: ௪. அறியப்படுவது எத்தனை விதமாயிருக்கும்?

விடை: ௪. அறியப்படுவது ஸ்திரமென்றும், அஸ்திர மென்றும், மூலாஞ்ஞான இருளென்றும் திரிவிதமாயிருக்கும்.

வினு: ௫. அறிவு ஒன்றென்பதையும், அறியப்படுவது மூன்றென்பதையுந் தெரிவதெப்படி?

விடை: ௫. விஷயங்கள் சாக்கிரத்தில் ஸ்திரமும், சொப் பனத்தில் அஸ்திரமும், சுழுத்தியில் அந்தகாரமுமாக மூன்று விதமாக இருக்கும். இவைகளைத் தினந்தோறும், மாதந்தோறும், வருஷந்தோறும், கற்பந்தோறும் அறிந்துகொண் டிருக்கும் அறிவு அந்த விஷயங்களைப்போல வொருகாலத்துந் தோன்றி யழியாமையினல் ஆத்மா ஒன்றேயொழிய இரண்டில்லை.

வினு: ௬. இவற்றில் ஆநந்தமாய் நாடவேண்டிய பொருள் யாது? தள்ளவேண்டியபொருள் யாது?

விடை: ௬. மூன்றவஸ்தையிலுங் காணப்பட்ட பொருள் கள்யாவுந் தனக் கன்னியமானபடியினல் தள்ளவேண்டியது; அறிவாயிருக்கிற தான் கைவிடப் படாததாகவின் ஆநந்தமாக நாடவேண்டியதாம்.

வினு: ௭. இப்படி அறிவாயிருக்கிற பொருள் எக்காலத் திலுந் தானகவே யிருக்குமானல், அஞ்ஞானகாலத்தில் அறியப் படாம லிருப்பது என்னை?

விடை : எ. சகபாடிகளுடன்கூடி ஓதுகின்ற தன் பிள்ளையின்குரல் தெரியாததுபோல, அநாதிசித்த அஞ்ஞானத்துடன் கூடிக்கலந்து தோற்றுதலால் தோற்றாமலிருந்தது.

வினா : அ. அநாதி சித்த அஞ்ஞானம் யாது ?

விடை : அ. அக்கினியிற் சூடுபோலவும், சலத்திற் சைத்தியம்போலவும் பிரஹ்மத்தில் சீவன், சகத்து, ஈசுரனை உண்டாக்கும் மூலப்பிரகிருதியே அநாதி சித்த அஞ்ஞானம்.

வினா : கூ. இந்த அஞ்ஞானம் எதிலுண்டாயிற்று ?

விடை: கூ. இரச்சுவில் சர்ப்பந் தோன்றினாற்போல, பிரஹ்மத்தில் உண்டாயிற்று.

வினா : க0. இதற்கு லக்ஷணம் யாது ?

விடை : க0. சத்துமன்று, அசத்துமன்று, ஒன்றுமன்று, பலவுமன்று, சாவயவமுமன்று, நிரவயவமுமன்று, சாவயவ நிரவயவமுமன்று, பிரமாணமாகியு மிருக்கும், அப்பிரமாணமாகியு மிருக்கும், விசாரித்துப் பார்க்குமிடத்தில், லக்ஷண சூன்யமாய்ப்போமென்று வேதஞ் சொல்லுவதுவே லக்ஷணம்.

வினா : கக. இப்படி யுண்டாகிய பிரகிருதி என்ன செய்யும் ?

விடை : கக. தன்னுடைய முக்குணத்தினால் சீவன், ஜகத்து, ஈசுரனை உண்டாக்கும்.

வினா : க௨. இவை எதனாற் போம் ?

விடை : க௨. பிரஹ்மம் நாமென்னும் அத்வைத ஞானத்தினாற் போம்.

வினா : க௩. மூலப்பிரகிருதி முக்குணத்தினால் சீவன், சகத்து, ஈசுரனை யுண்டாக்கினவிதம் எப்படி ?

விடை : க௩. மூலப் பிரகிருதியின் சாத்வீக குணமான சுத்த மாயையினிடத்தில் பிரதிபிம்பித்தவன் ஈசுவரன், பஞ்ச கிருத்தியபரரா யிருக்கும் இந்த அந்தரியாமியை யுண்டாக்கும் மாயையே அவருக்குக் காரண சரீரம், ராஜத குணமென்னும்

அசுத்த மாயையான அவித்தையில் பிரதிபிம்பித்த சைதன்னியம் சீவன். இந்தப் பிராஞ்ஞனுக்குக் காரணசரீரமான அவித்தை தாரதம்மியமாய் வெகுவிதமாயிருத்தலின் சிதாபாசர்களும் அநந்தம். தாமதகுணப் பிரகிருதியிலிருந்தும் இந்தச் சீவர்களுக்கு போக்கியபோக விதிகளை யுண்டாக்க ஈசுராக்கினையினால் ஆகாசம் வாயு அக்கினி அப்பு பிருதிவி என்னப்பட்ட முக்குணத்துடன் கூடிச் சூக்ஷ்மபூதம் ஐந்தும் உண்டாயின. இந்தப் பூதங்களின் சாத்வீகாம்சத்தில் பூதத்திற் கோரொருமாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இது சஞ்சல வியாபாரத்தினால் மனமென்றும், நிச்சய வியாபாரத்தினாற் புத்தியென்றும் இரண்டு விதமாக விருக்கும். மற்றும் சாத்வீகாம்சத்தில், பூதத்திற்கு ஒரொரு மாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோத்திராதி ஞானேந்திரியம். பூதங்களின் ராஜசாம்சத்தில் பூதத்திற் கோரொருமாத்திரை யெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது வியானாதி பஞ்சவாயுக்கள். மற்றும் ராஜசாம்சத்தில் பூதத்திற் கோரொருமாத்திரை யெடுத்துத் தனித்தனியே வைத்தது வாக்காதி கர்மேந்திரியம். ஆக இந்தப் பதினேழு தத்துவமும் இலிங்க சரீரமென்றும், சூக்ஷ்ம சரீரமென்றும், போகசாதன மென்றுஞ் சொல்லப்படும். இந்தச் சூக்ஷ்ம சரீரத்துடன் கூடின அவித்தையாப் பிரதிபிம்பருக்குப் பிராஞ்ஞரென்னும் பெயர் மாறித் தைஜசர் என்னும் பெயர் உண்டாயிற்று. சகல சீவர்களுடைய சூக்ஷ்ம சரீரமும் சூக்ஷ்ம பூதமுங் கூடின சமஷ்டி புத்தியினால் இரண்ய கர்ப்பமென்றும், ஈசுர சூக்ஷ்ம சரீரமென்றுஞ் சொல்லப்படும். இந்தச் சூக்ஷ்ம சரீரத்துடன் கூடின மாயாப் பிரதிபிம்பருக்கு அந்தரியாமி யென்னும் பெயர் மாறிச் சூத்திராத்மா வென்னும் பெயர் வந்தது. எங்குந் தாதாத்மியமா யிருந்தபடியினால் இவரைச் சமஷ்டி யென்பர்; அவனவன் சரீரத்தில் மாத்திரந் தாதாத்மியமாக விருந்தபடியினாற் சீவர்களை வியஷ்டியென்பர். சீவர்களுக்குப் போகமும் போகத்துக்கு இடமான ஸ்தூல சரீரமும் உண்டாக்கும் பொருட்டுத் தாமத குணமாயிருக்கும் ஆகாசாதிகளைப் பஞ்

சீகரணம் பண்ணினார். அதெங்ஙன மெனின் பஞ்சபூதம் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டாக்கி முதற்பாதி ஐந்தையும் ஒவ்வொன்றை நந்நான்காக்கிப் பூதங்களின் இரண்டாம் பாதி ஐந்தில் தன்னம்சத்துடன் சேர்க்காமல் மற்ற நாலுபூதங்களுடனும் சேர்ப்பது பஞ்சீகரணம். இப்படிப் பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூல பஞ்சபூதங்களில் அண்டங்களும், புவனங்களும், நால்வகை ஸ்தூல சரீரங்களும், போக முதலான வஸ்துக்களும் உண்டாயின. இந்த ஸ்தூல பூத பௌதிகங்கள் எல்லாம் ஒரு மைப்பாடாய் ஈசுவர ஸ்தூல சரீரமென்றும் விராட்டென்றுஞ் சொல்லப்படும்; இதனுடன் கூடின ஈசுவரனுக்குச் சூத்திராத்மா வென்னும் பெயர் மாறி வைசுவா நரனென்னும் பெயர் வந்தது. தைஜசர்கள் எல்லாம் ஸ்தூல சரீரங்களுடன் கூடி விசுவர்களாய்த் தேவதைகள் என்றும், மாநுடர்கள் என்றும், திரியக்கென்றும் பெயரை யுடையவ ரானார்கள். ஈசுவர வாக்கியமான கர்மம், பக்தி ஞானம் என்னும் காண்டத்திரயாநுஷ்டானம் பண்ணி அந்தர்முகர் ஆகாமல் பகிர்முகர் ஆனார்கள். எல்லோரும் இப்படி ராகத்துவேஷபரராய்ப் பண்ணின கர்மத்தின் வசத்தினால் ஜன்ம பந்தங்களில் ஆற்றிற் சுழிவழியே சுற்றும் புழுப்போலச் சுழலுகிறார்கள். தயாளுவாய் இருப்பவன் அந்தப் புழுக்களைக் கரையேற்ற அவை மரத்தினிழலில் இருந்து சுகமடைவதுபோல, சத்கர்ம பரிபாகத்தினாற் குருரூபமாக வந்த ஈசுவரனுடைய ஞானோபதேசத்தினால் அபூர்வமாக ஒருவன், பஞ்சகோச விவேகத்தைப் பண்ணி முத்தியும் அடைவான்.

வினா : கச. பஞ்சகோசங்கள் எவை?

விடை : கச. ஸ்தூல சரீரமே அன்னமயகோசமும், கர்மேந்திரியமும், பிராணவாயுங் கூடிப் பிராணமயகோசமும், மனமும் ஞானேந்திரியமுங் கூடி மனோமயகோசமும், புத்தியும் ஞானேந்திரியமுங் கூடி விஞ்ஞானமயகோசமுமாம். இந்தக் கோசத்திரயமே சூக்ஷ்ம சரீரமென்றுஞ் சொல்லப்படும். காரணசரீரமே ஆநந்தமயகோசமாம்.

வினு: கரு. இந்தப் பஞ்சகோசங்களுடன் ஆத்மாவுக்குத் தாதாத்மியம் எப்படி யுளது?

விடை: கரு. நீலாதி வஸ்துக்களுடன் கூடி அந்தந்த வண்ணமாய்த் தோற்றும் படிகம்போல, ஆத்மாவாக விருக்கின்ற தானும் பஞ்சகோசங்களுடன் கூடி அவையே தானுகத் தோற்று வது தாதாத்மியமாம்.

வினு: கசு. இந்தப் பஞ்சகோசங்களைத் தானல்லவென்று தள்ளும் விவேகம் யாது?

விடை: கசு. அந்வயவெதிரேகமே அவற்றைத் தள்ளும் விவேகமாம்.

வினு: கஎ. அந்வயம் யாது? வெதிரேகம் யாது? விவேக த்தினுல் பஞ்சகோசத்தைத் தள்ளி யப்பாற்பட்டிருக்கும் பிரஹ்மமே நாமென்றறியுந்தன்மை யாது?

விடை: கஎ. தானுக வழங்கும் ஸ்தூலசரீரந் தோற்ருத சொப்பனுவஸ்தையில் தான் தோற்றுவதே அந்வயம். தான் தோற்றினுந் தூலசரீரந் தோற்ருததே வெதிரேகம். சூக்ஷ்மசரீரந் தோற்ருத சுழுத்தியவஸ்தையில் தான் தோற்றுவதே அந்வயம். தான் தோற்றினும் இலிங்கசரீரந் தோற்ருததே வெதிரேகம். இந்தச் சூக்ஷ்மசரீரந் தள்ளப்படவே மூன்றுகோசமுந் தள்ளப்பட்டன. சுழுத்திதோற்ருத சமாதியில் தான் தோற்றுவதே அந்வயம், தான் தோற்றினுஞ் சுழுத்தி தோற்ருததே வெதிரேகம். முஞ்சிப்புல்லில் பக்கத்து மட்டைகளைத் தள்ளித் தள்ளி நடுவில் ஆணி யெடுப்பதுபோல அந்வய வெதிரேக யுத்தியினுல் தானுய் விளங்கும் பஞ்சகோசங்களைத்தள்ளி அப்பாற்பட்டிருக்கும் பிரஹ்மமே நாமென்று நிச்சயிக்கும் புத்தி யுள்ளவர்களே பேரறிவாளர்.

வினு: கஅ. சீவனுக்கும் பரமாத்மாவிற்கும் இவ்வாறு ஏகத்துவஞ் சாதித்ததற்குப் பிரமாணம் யாது?

விடை: கஅ. சாமவேத மஹாவாக்கியமே பிரமாணம்.

வினு: கக. அந்த மஹாவாக்கியத்திற் கர்த்தம் யாது?

விடை : கக. முன் சுயம்பாகியா யிருந்தவனுக்குக் காலாந்ரதத்தில் துரைத்தனம் வந்து தண்டிகையில் வரக்கண்ட போது அவனென்னும் சொல்லில் சட்டுவமுதலான வுபாதிலக்ஷணத்தையும், இவனென்னும் சொல்லில் தண்டிகைமுதலான வுபாதிலக்ஷணத்தையும் விட்டு, இரண்டு சொல்லிற்குஞ் சரீரமாத்திரத்தை அர்த்தமாகக்கொண்டு இவனேஅவன், அவனே இவனென்று ஒருவனைப் புரையறக் காட்டுவதுபோல, சகத்திற்கு உபாதானகாரணமான பிரஹ்மம், மாயாசபளிதமான ஈசுரன், தாமதபரிணாமமான அவரது சரீரம் என்னும் இம்மூன்றையுங் காட்டும் தற்பதம்; மலினசத்துவ அவித்தையா பிரதிபிம்பன், அவனது சரீர உபாதி, இவற்றிற்கு அதிஷ்டான கூடஸ்தர் என்னும் மூன்றையுங்காட்டுந் துவம்பதம். இவர்க ளிருவரையும் ஒன்றென்றும் மஹாவாக்கியம் இரண்டிடத்துமுள்ள வுபாதியையும் உபாதியுடன் கூடின சைதன்னியத்தையும் விட்டு அகண்டமாயுள்ள சச்சிதாநந்தம் ஒன்றையே புரையறக்காட்டும். இவ்வர்த்தம் பாகத்தியாக லக்ஷணையான விட்டு விடாதலக்ஷணையினுற் பெறப்படுகின்றது.

வினு: உ0. இத்தன்மையான ஞானம் வருதற்பொருட்டுக் குருசந்நிதானத்தில் செய்காரியம் யாது ?

விடை : உ0. சிரவணுதிகளே செய்காரியம்.

வினு: உக. சிரவணுதி செய்காரியம் எத்தனை விதம்? அவற்றிற்கு லக்ஷணம் யாது ?

விடை : உக. சிரவணுதி நாலுவிதம், அதெங்ஙனமெனிற் சகல வேதங்கட்கும் ஆறு லிங்கத்தினு லர்த்தவிசாரம் பண்ணிப் பிரஹ்மத்தில் தாற்பரியமெனக் காண்பதே சிரவணம், அந்த யுத்தியினுல் அநவரதஞ் சிந்திப்பதே மனனம், இப்படி யிருவகையினுலுந் தெளிந்த பொருளில் மனம் ஏகாக்கிரமாவதே நிதித்தியாசனம். தியானம் பண்ணுபவனையும், தியானத்தையும் இழந்து தியானிக்கப்படும் வஸ்து மாத்திரமாயிருக்கும் சித்தமே சமாதி.

வினா : ௨௨. இத்தன்மையான சமாதிக்குப் பலன் யாது ?

விடை : ௨௨. அநாதிகால சஞ்சிதகர்மநாசமும், தன்னை நிர்மலம்பண்ணும் தர்மமும், வாசனக்ஷயமும், அபரோக்ஷ ஞானமுந் தனக்குப் பிரயோசனம்.

வினா : ௨௩. இந்த அதீத சுகசமாதியில் இருப்பவன் அப்படியே யிராமல் பிரபஞ்சத்திலே விழிப்பதென்னை?

விடை : ௨௩. பிராரத்தசேஷத்தினால்.

இப்படித் தத்துவவிவேகத்தைப் பலப்பட விசாரம்பண்ணி மனதைச் சமாதியில் லயம்பண்ணிச் சகலசம்சாரத்தையும் விட்டுப் பரப்பிரஹ்ம மாகலாமென்று தத்துவவிவேகஞ் சொல்லுகிறது.

ஆறவது தத்துவவிவேகம் முற்றிற்று.

ஆக வினவிடைகள் - ௨௩.

ஏழாவது பஞ்சபூத விவேகம்.

சிருஷ்டிக்குமுன் சத்தாகவே இத்தனையு மிருந்ததென்னும் சாமவேதார்த்தத்தைப் பஞ்சபூத விவேகத்தினால் வெளிப்படுத்துகின்றார்.

வினா : க. சத்தென்று சொல்லப்பட்டது யாது? இத்தனையுமென்று சொல்லப்பட்டது யாது ?

விடை : க. சத்தென்று சொல்லப்பட்டது அத்வைதப் பிரஹ்மம், இத்தனையு மென்று சொல்லப்பட்டது பஞ்ச பூதமும், அவற்றின் குணங்கள் ஐந்தும், அவற்றை யறியும் இந்திரியங்கள் ஐந்தும், அவற்றிற்குச் சகாயமாயிருக்கும் இந்திரியங்கள் ஐந்தும், அந்தக்கரணமொன்றும், நானென்னும் ஒருவனுமாம்.

வினா : ௨. இந்தப் பூதம் ஐந்தனுள் ஒவ்வொரு பூதத்திற்கும் எத்தனை யெத்தனை குணங்கள் உண்டு.

விடை : உ. ஆகாசத்திற்குக் குணம் ஒன்றும், வாயுவிற்குக் குணம் இரண்டும், அக்கினிக்குக் குணம் மூன்றும், அப்புவிற்குக் குணம் நான்கும், பிருதிவிக்குக் குணம் ஐந்துமாம்.

வினா : ௩. இந்தப் பூதங்களில் இந்தக் குணங்களைப் பகுத்துக் காண்பதெப்படி?

விடை : ௩. பிரதித் தொனியொன்றே ஆகாசத்தின் குணம்; சீறு சீறென்னும் சத்தமும், சீதோஷ்ண கடினங்கட்கு விலட்சணமான பரிசமும் வாயுவின் குணம்; புகுபுகென்றொலிக்கும் சத்தமும், உஷ்ணபரிசமும், பிரகாசமென்னும் ரூபமும் அக்கினியின் குணம்; குளுகுளுவென்னும் சத்தமும், சயித்திய பரிசமும், சுக்கிலரூபமும், மதுர ரசமும் அப்புவின் குணம்; கடகடவென்னுஞ் சத்தமும், கடின பரிசமும், பஞ்சவர்ண ரூபமும், அறுசுவை ரசமும், நற்கந்த துர்க்கந்தமும் பிருதிவியின் குணம்.

வினா : ௪. இதற்குப் பிரமாணம் யாது ?

விடை : ௪. சுரோத்திராதி ஞானேந்திரியங்களால் அநுபவிப்பதே பிரமாணம்.

வினா : ரு. இந்திரியங்களுக்கிப்படி வெளிநாட்டமாத்திரமோ ? உண்ணாட்டமும் உண்டோ ?

விடை : ரு. செவியை அங்குலியினால் மூடின் உள்ளிரைச்சல் கேட்கப் படுதலாலும், குடிக்கையிற் புசிக்கையிற் சீதோஷ்ணபரிசம் அறியப்படுதலாலும், கண்ணை மூடினவிடத்து உள்ளிருளாகிய ரூபந்தோற்றுதலாலும், வாந்தி பண்ணும்போது ரசங்களை அறிதலாலும், எப்பம் விடும்போது நற்கந்த துர்க்கந்தங்களை யறிதலாலும் உண்ணாட்டமும் உண்டு.

வினா : சு. இதற்குச் சகாயமான விந்திரியம் யாது ? அதற்குத் தொழில் யாது ?

விடை : சு. வாக்காதி சகாயவிந்திரியம்; வசனாதி தொழில்

வினு : எ. அந்தரிந்திரியமான மனதும் அதன்ருெழிலும், எவை?

விடை : எ. பத்திந்திரியங்கட்கு மிராஜாவாய், இந்திரியத்தின் வழியே குணதோஷம் விசாரிப்பதாய் இருதயகமலத்தின் நடுவே யிருப்பது மனது. வைராக்கியம் சமை முதலான சாத்வீகப் பிரவிருத்தியும், காமக்குரோத முதலான ராஜதப் பிரவிருத்தியும், சோம்பல் நித்திரை முதலான தாமதப் பிரவிருத்தியும் இதன் தொழில்கள்.

வினு : அ. இந்த மூன்றுவகைப் பிரவிருத்திக்கும் பலன் யாது?

விடை : அ. சாத்வீகத்தில் புண்ணியம் உண்டாம், ராசதத்தில் பாவம் உண்டாம், தாமதத்தில் இருவகையுமற்று வீண்காலம் போம்.

வினு கூ. இப்படிப் பதிஞெரு இந்திரியத்திஞலும் யுத்தியிஞலும் சாஸ்திரத்திஞலும் அறியப்படுகிற சகலசகத்தும்சத்தேயென்பது கூடுமோ?

விடை : கூ. விஜாதீயம், ஸஜாதீயம், சுவகத மென்னும் மூன்று பேதமும் அற்றது சத்தேயாம்.

வினு : க0. விஜாதீய ஸஜாதீய ஸ்வகதபேதங்கள் எவை?

விடை : க0. மரத்திற்குக் கல் விஜாதீயம்; வேறு மரம் ஸஜாதீயம்; இலை பூ காய் ஸ்வகதம். இப்படிச் சத்திற்குச் சகத்து விஜாதீயமென்ன லாகாது; அசத்தில்லாமையினுல். சத்திற்குச் சகத்து ஸஜாதீயமென்னலாகாது; வேறு சத்தில்லாமையினுல். ஸ்வகதபேத மென்னலாகாது; நிரவயவமா யிருத்தலால். இவ்வையெல்லாம் சத்தே.

வினு : கக. அது கூடாது, எல்லாம் அசத்தாகவே முன்னிருந்தது.

விடை : கக. சூரியன் அந்தகாரத்துடனே கூடியும் இரான்; அவன் அந்தக்காரமும் அல்லனென்பதுபோல், சகத்து

முன் அசத்தா யிருந்ததானுற் சத்துடன் கூடியும் இராது; சத்தாகவு மாட்டாது.

வினு: கஉ. சத்தைத் தவிர வொன்று மில்லாவிட்டாற் சிருஷ்டிக்கு முன்னெல்லாஞ் சத்தா யிருந்ததென்று வேத வாக்கியஞ் சொல்லுவதென்னே ?

விடை: கஉ. காலவாசனையுடன் கூடியிருக்கும் சிஷ்யனைக் குறித்துச் சொன்னதே யல்லாமல் உண்மையல்ல. ஆகையினுற் சங்கையும், உத்தரமும், துவைதத்திலன்றி அத்வைதத்தில் இல்லை.

வினு: கங. அறியாமையினுற் சங்கித்தேன்; உண்மை யாது ?

விடை: கங. அசையாமல் கெம்பீரமாய்ப் பிரபையும் அல்லாமல் அந்தகாரமும் அல்லாமல் அவாங்மானச கோசரமாயிருக்கும் பிரஹ்மமே சத்தாம்.

வினு: கச. பிருதிவி முதலியன பரமாணுவாய்ப் போனமையினுல் இல்லையென்பது சம்மதித்தேன்; பிரளயத்தில் ஆகாசமும் இல்லாமற் போமென்பது கூடாது.

விடை: கச. அத்தியந்தம் நிர்ச்சகத்தாயிருக்கிற ஆகாசம் உன் புத்தியில் பட்டதுபோல நிராகாசமா யிருக்கும் சத்து எங்கள் புத்தியில் படும்.

வினு: கரு. சத்தாயிருக்கும் சுத்த சைதன்னியத்தை எப்போது அநுபவித்தீர்?

விடை: கரு. நிர்ச்சிந்தனையா யிருக்கிற வேளையில் அநுபவித்தோம்.

வினு: கசு. அப்போது சத்தென்னும் புத்தியும் இல்லையே ?

விடை: கசு. அது நமக்குச் சம்மதந்தான். நிர்ப்புத்தியாயிருக்கிற அவஸ்தைக்குச் சாக்ஷிமாத்திரமாக விருந்தோமென்னும் அநுபவமே போதும். ஆகையினுல் மனோவிவகாரமற்ற

வெளியில் சாக்ஷியாத்திரமாக விருப்பதுபோல மாயா விருத்திக்கு முன்னும் சத்திருக்கு மென்றறிக.

வினு: ௧எ. இந்த மாயைக்கு லக்ஷணம் யாது?

விடை: ௧எ. சத்து மல்லாமல், அசத்துமல்லாமல், உற்றுப்பார்த்தால் இல்லாமற் போவதே லக்ஷணம்.

வினு: ௧அ. சத்தைவிட மாயாசத்தி யில்லாவிடின் அசத்தென்னும் லக்ஷணம் இருக்கட்டுமே?

விடை: ௧அ. அசத்து மாயா காரியமல்லாமற் சொரூபமல்ல. ஆதலால், கடசத்தி மண்ணிலிருக்கினும், ஏகதேசமாக விருப்பதுபோல மாயாசத்தியும் பிரஹ்மத்தினிடத்தில் ஏகதேசமாக விருக்கும்.

வினு: ௧௯. பிரஹ்மத்திலுள்ள மாயை என்ன செய்யும்?

விடை: ௧௯. சுவரைப்பற்றி யுள்ள வர்ணம் சுவரில் பலவித சித்திரங்களைக் கற்பிப்பதுபோலப் பிரஹ்மத்தைப் பற்றியுள்ள மாயையும் நிருவிகாரத்தில் விகாரத்தைக் கற்பிக்கும்.

வினு: ௨0. மாயையினுற் கற்பிக்கப்பட்ட விகாரங்கள் எவை?

விடை: ௨0. முந்திய விகாரம் ஆகாசம்; அதற்கு லக்ஷணம் அவகாசம்.

வினு: ௨௧. சத்திற்குச் சுபாவம் எத்தனை? ஆகாசத்திற்குச்சுபாவம் எத்தனை?

விடை: ௨௧. உண்டென்பது மாத்திரமே சத்தின் சுபாவம். உண்டென்பதுவும், சத்தமு மாகாசத்தின் சுபாவம். சத்திலே சத்தமில்லை. சத்துஞ் சத்தமு மாகாசத்தின் சுபாவம்.

வினு: ௨௨. சத்தே ஆகாசமானுல், சத்தின்குண மாகாசமென்று சொல்லவேண்டுமே யல்லாமல், ஆகாசத்தின் குணம் சத்தென்று வாதிகள் சொல்லுவதென்னை?

விடை : உஉ. பிரஹ்மத்தினிடத்தில் ஆகாசத்தைக் கற்பித்த மாயை குண குணிகளேயுந் தாறுமாருகத் திருப்பிவைத்தது. அப்படிப் பிரமிப்பிப்பது மாயைக்குச் சுபாவம்.

வினு : உ௩. இது தெளியும் வழி யாது?

விடை : உ௩. வேதாந்த விசாரம் பண்ணினுல், சத்தினிடத்தில் ஆகாசங் கற்பிதமாதலாற் சத்துப் பிரதானமாகவும், ஆகாசம் அப்பிரதானமாகவும் அறியப்படும்.

வினு : உ௪. சத்தினும் புறம்பாயுள்ள ஆகாசத்தை யசத்தென்றறிவது எப்படி?

வினு: உ௪. ஆகாச முண்டென்னு மிடத்தில், உண்டென்னும் சொல்லினுலும், விவேகித்துப் பார்த்தால் காட்டப்பட்ட பொருளேத் தவிர ஆகாசம் இல்லாமையினுலும் ஆகாசம் அசத்தே யென்றறிக.

வினு : உ௫. விசாரம் யாது?

விடை : உ௫. சத்தென்னுஞ் சத்தமும் ஆகாசமென்னுஞ் சத்தமும் பரியாயமல்ல. வாயுவாதிகளில் சத்தானது கலந்திருக்கிறது; ஆகாசம் அப்படிக் கலந்திருக்கவில்லே. ஆதலால் ஆகாசம் மித்தை யென்பதே விசாரம்.

வினு : உ௬. ஆகாசந் தோற்றுதலால் இல்லேயென்பது எப்படி?

விடை : உ௬. எவை சத்துக்கு வேருக அசத்தாகவிருந்து தோற்றுகின்றனவோ அவை யாவும் சொப்பன கஜ முதலியவற்றைப்போல மித்தையாம்.

வினு : உ௭. இப்படி ஆகாசத்தில் சத்தையும், சத்தத்தையும் பிரித்துக் காணுங்கால் ஆகாசம் மித்தை யாவதென்னே?

விடை : உ௭. கற்பிதமான மாயாகாரிய மாகலின் காரணம்போல மித்தையாக வகுப்பற்றது.

வினா: உஅ. பொய்யாயுள்ள ஆகாசமும், மெய்யா யுள்ள சத்தும் ஏகமாகப் பொருந்தி எல்லோருக்குந் தோற்றுதலாற் பிரித்துக் காணும் வழி யாது?

விடை: உஅ. ஜாதிவியக்திகள் போலவும், குணத்திரவியங்கள் போலவும், உடலும் உயிரும்போலவும் சத்தும் ஆகாசமும் வேறென்றறி.

வினா: உகூ. இப்படி யறிந்தாலும் சத்தும் ஆகாசமும் வேறென்று அறியப்படாதது ஏதனால்?

விடை: உகூ. பூர்வம் புத்தி யேகாக்கிர மாகாமையினாலும், சந்தேகத்தினாலும் ஏறவில்லை. சாவதானமாய்ப் பிரமாண மூலமாய் விசாரித்தால் ஏறும்.

வினா: ௩0. விசாரித்தவனுக்குப் புத்தியில் எப்படி யிருக்கும்?

விடை: ௩0. சத்தாயிருக்கும் வஸ்து அகண்டமென்றும், ஆகாசம் பரிச்சின்ன மாகலின் மித்தையென்றும் புத்தியில் திடப்பட்டிருக்கும்.

வினா: ௩க. இப்படி யறிந்தவன் உலகத்தாருடன் எப்படிப் பேசுவான்?

விடை: ௩க. சத்தையே ஆகாசமென்று பேசுகிறவனையும் ஆகாசஞ் சின்மாத்திரமென்று பேசாதவனையுங் கண்டவுடன் ஆச்சரியப்படுவன்?

வினா: ௩உ. இப்படி ஆகாசம் மித்தையென்றும், சின்மாத்திரமே சத்தியமென்றும் பிரித்தறிந்தபின் செய்காரியம் யாது?

விடை: ௩உ. இந்த ஞானத்தின்படி வாயு முதலான பூதங்களினும், சத்து பரிபூரணமாதலால் எங்கும் காணப்படுமென்றும், ஆகாசாதிகள் பரிச்சின்ன மாகலின் எங்கும் காணப்படவில்லை யென்றும், பூதங்களெல்லா மித்தையென்றுந் திடப்படுத்த வேண்டும்.

வினா: கூகூ. பூதங்கள் பரிச்சின்னமா? எப்படிக் காணப் படுகின்றன? பூதங்கட்குச் சுபாவகுணம் யாது? அன்னிய குணம் யாது?

விடை: கூகூ. சத்தில் ஏகதேச கற்பிதம் மாயை, மாயையில் ஏகதேசகற்பிதம் ஆகாசம், ஆகாசத்தினிடத்தில் ஏகதேச கற்பிதம் வாயு. வாயு வுண்டென்பது சத்தின் அம்சம், சத்தை விட்டுப்பார்த்தால் வாயு காணுமற் போவது மாயையின் அம்சம், சத்தம் ஆகாசத்தின் அம்சம் ஆக இம்மூன்றும் வாயுவிற்குக் காரண குணம், சுபாவகுணம் பரிசம். இத்தனையுஞ் சத்தைப் பகுத்தாற் காணுமற்போவதனுல் வாயு மித்தை.

வினா: கூச. இப்படி வாயு மித்தையென்று அறிந்தபின் செய்காரியம் யாது?

விடை: கூச. வாயுவிற் பத்தி லொன்ருய்க் கற்பிக்கப் பட்ட அக்கினியும் மித்தை யென்றே காணவேண்டும். அக்கினி யுண்டென்பது சத்தின் அம்சம், சத்தைவிட்டுப்பார்த்தால் இல்லாமற் போவது மாயையின் அம்சம், சத்தம் ஆகாசத்தின் அம்சம், பரிசம் வாயுவின் அம்சம். ஆகக் காரண குணம் நான்கு. சுபாவ குணம் ரூபம். இத்தனையுஞ் சத்தைத் தவிர வேறல்ல வென்று காணும் வாசனை பண்ணவேண்டும்.

வினா: கூரு. இப்படி யக்கினியு மித்தையென்று அறிந்த பின் செய்காரியம் யாது?

விடை: கூரு. அக்கினியிற் பத்திலொன்று கற்பிதம் அப்பு. அப்புவிற்கு ரசத்துடன் ஆறு குண முண்டு, அப்புவிற் பத்திலொன்று கற்பிதம் பிருதிவி, பிருதிவிக்குக் கந்தத்துடன் ஏழு குண முண்டு, பிருதிவியிற் பத்திலொன்று கற்பிதம் பிரஹ்மாண்டம். பிரஹ்மாண்டத்திற் கற்பிதம் புவனங்கள். புவனங்களிற் கற்பிதம் சரீரங்கள். இவ்வாறு அறிந்து சத்தைவிட்டுப் பார்த்தால் இவ்வெல்லாவற்றிற்கும் சொரூப மில்லாமையினுற் சின்மாத்திரமாமென்று காண்பதே செய்காரியம்.

வினா: கூசு. இப்படித் துவைதம் யாவும் மாயா கற்பிதமென்றனுதரவு பண்ணினுற் ஸ்ரேஷமில்லையோ?

விடை : ௬௬. சகத் பேதத்தை நித்திய மென்று நிச்சய புத்திபண்ணி, அத்வைதத்தை யனுதரவுபண்ணின சாங்கியன், கணுதன், பௌத்தன் முதலாயினோருக்குப் பிரத்தியவாய மில்லையெனில், மாயாகற்பிதமா யிருக்கும் துவைதத்தை யனுதரவு பண்ணியிருக்கும் நமக்குப் பிரத்தியவாயம் லேசமுமில்லை.

வினு : ௬௭. இப்படித் துவைதத்தை யனுதரவு பண்ணினுற் பிரயோசனம் யாது ?

விடை : ௬௭. துவைதத்தை அனுதர்வுபண்ணினு லத்வைதத்தில் பத்தி திட்ப்பட்டுச் சீவன்முத்தனுகலாம்.

வினு : ௬௮. இப்படிச் சத்தையும், அசத்தையும் பகுத்தறிந்தால் சீவன்முத்தி யெப்போது வரும் ?

விடை : ௬௮. திடப்பட வறிந்த வன்றே முத்தியாம்.

வினு : ௬௯. பிராணன் விடும்போ தந்தநிலை வரவேண்டாமோ ?

விடை : ௬௯. தினந்தோறும் கற்றபோதம் சொப்பனசுழுத்தி யவஸ்தைகளில் மறந்திருந்தாலும் சாக்கிரோதயத்தில் தானுக முன்னிற்பதுபோலப் பிராணன் போகும் மூர்ச்சையில் மறந்திருந்தாலும் ஞானம் போகாது.

வினு : ௭0. கற்றபோதம் மற்றெதனுற் போம்.

விடை : ௭0. வேதாந்தத்திற்கு மேற்பட்ட பிரமாண மொன்றுண்டானு லதனுற் போகுமேயல்லாற் சுழுத்திமூர்ச்சைகளில் போகாது. ஆதலா லத்வைத ஞானத்திற் கெதனுலும் வாதையில்லை.

ஆனுல் இந்தப்பஞ்சபூத விவேகத்தை விசாரம் பண்ணிச் சகல பிரபஞ்சத்தையுஞ் சின்மாத்திரமாய்க் கண்டு அத்வைத நிலைபெற்றவனே சீவன்முத்தன். இந்தப் பிரஹ்மாகார நிலை பெற்றவனை யெம்மோகமும் கிட்டா தென்று பகவானும் கீதையில் சொல்லி யிருக்கிறுர்.

ஏழாவது பஞ்சபூதவிவேகம் முற்றிற்று.
ஆக வினுவிடைகள் ௭0.

எட்டாவது பஞ்சகோச விவேகம்.

ஸ்ரீ வித்தியாரண்ணிய ஸ்வாமிகள், ஏழைகளிடத்திற் கிருபையினால் பஞ்சகோசவிவேகத்தினு லெளிதாய்ப் பிரஹ்மத்தை யறிவிக்கின்றார்:—

வினா: க. தைத்திரீய மென்னும் உபநிஷத்தில் குகைக்குள்ளிருக்கும் பிரஹ்மத்தை யறிந்தால் முத்தி யுண்டென்று சொன்னதற் கர்த்தம் யாது?

விடை: க. தேகத்திற்குட்பட்டது பிராணன்; பிராணனுக்குட்பட்டது மனம்; மனத்திற் குட்பட்டது விஞ்ஞானம்; விஞ்ஞானத்திற் குட்பட்டது ஆநந்தம். இவ்வைந்தும் குகை. இவற்றிற் கன்னியமா யிருப்பது ஆத்மா.

வினா: உ. இவ்வைந்தையுமே யாத்மாவென்று சகல வாதிகளும் இலௌகிகருஞ் சொல்லுதலால், இவற்றைத் தள்ளுவதெப்படி.

விடை: உ. பிதா புசித்த அன்னவீரியத்தினா லுண்டாகுதலாலும், அன்னத்தினால் விருத்தியாகுதலாலும் அன்னமயமான சரீரத்தைத் தானென்னலாகாது. தேகத்திற்குள் ளிருக்கின்ற விந்திரியங்களை யேவுகின்றவனாய்ப் பலதாரதம்மியத்தினாற் பிரிசியமாயிருக்கும் பிராணமயனையுந் தானென்னலாகாது. தேகத்திலே நானென்னும் புத்தியையும் வீடு மாடுகளில் எனதென்னும் மபிமானத்தையும் பண்ணிக்கொண்டு காமக்குரோத முதலான வவஸ்தைகளி லுழலக்கண்ட மனோமயனையுந் தானென்னலாகாது; காய்ச்சின விரும்பி னுண்டைபோலச் சாக்கிரத்தில் நகசிகைபரியந்தங் கலந்துநின்று சுழுத்தியி லணைந்துபோகும் விஞ்ஞானமயனையுந் தானென்னலாகாது, புண்ணிய போகத்திலுஞ் சுழுத்தியிலும் அந்தர்முகமா யாநந்தப்பிரதிவிம்பத்துடன் கூடிக் கணப்போதில் நஷ்டமாய்ப்போகின்ற வாநந்தமயனையுந் தானென்னலாகாது.

வினா : ரு. இப்படி யிவ்வைந்தும் ஆத்மாவல்ல வெனின் இவற்றிற் கன்னியமாக ஆத்மா வேறு காணப்படவில்லையே?

விடை : ரு. பஞ்சகோசங்களையும் அவற்றிற்குச்சொன்ன லக்ஷணத்துடன்தோற்றுவித்து அப்பா லினியொன்றுங்காணே மென் றிருக்கும் பிம்ப சைதன்னியமே ஆத்மா.

வினா : ச. இந்தப் பஞ்சகோசங்களை ஆத்மா காணின் ஆத்மாவைக் காண்பவரார்?

விடை : ச, சுதசித்த சைதன்னியமா யிருக்கும் ஆத்மா சடங்களையெல்லா மறிபவர். தாம் சடமாகாமையினால் எத னாலு மறியப்படார்.

வினா : ரு. அறிவா யிருந்தும் எதனாலு மறியப்படாத போது ஆத்மா அறிவென்ப தெப்படி?

விடை : ரு. வெல்லத்திற்குத் தன்னுடைய ரசந் தன்னா லநுபவிக்கப்படா திருந்தாலும் அன்னியமாயிருக்கிற இந்திரிய ங்களினா லநுபவிக்கப்படுவதனால், மதுரஞ் சுபாவமென்றது போலச் சகலத்தையு மறிகின்ற ஆத்மாவிற்குத் தான் அறி வென்பதற்குச் சந்தேகமில்லை.

வினா : சு. அறியப்பட்டது பிரஹ்மமோ? அறியப்படாதது பிரஹ்மமோ?

விடை : சு. இந்த விருவகையுமல்ல, இதற்கப்பாற்பட் டது பிரஹ்மம்,

வினா : எ. இப்படியிருந்தா லவரை யறிவதெப்படி?

விடை : எ. எனக்கு நாக்குண்டோ இல்லையோ வென் னும் சொற்போல அறிவாயிருந்தும், அறிவெப்படி யிருக்குமெ ன்று கேட்ட வுனக்கு லச்சையில்லையா?

வினா : அ: அஞ்ஞானியா யிருக்கிறவனுக்குப் பிரஹ்ம நிச் சயம் வருவதெப்படி?

விடை : அ. அறிவினாற் காண்பிக்கப்பட்டவை யாவும் சட மாய்ப் போனாலும் நித்தியபோதமாயிருக்கும் அறிவே பிரஹ்ம மென்று காணவேண்டும்.

வினு: கூ. இந்த அறிவாயிருக்கும் ஆத்மாவே பிரஹ்ம மானுல் சச்சிதாநந்த மென்னும் லக்ஷணத்தில் சித்தில்லாத லக்ஷணத்தை யேன் சொல்லவில்லை ?

விடை: கூ. இப்படியறிவாயிருக்கிறதான் எப்போது மூண்டென்றிருத்தலானும், ஒருகாலத்திலுமில்லை யென்ருகாமையினுலும் ஆத்மா சத்தென்பதுகூடும்; மாயாகற்பிதமாயுள்ள கால தேச வஸ்துக்களை யாத்மா கடந்தபொரு ளானபடியினு லிம்மூன்றினுலும் வாதையற்றது ஆநந்தமென்பது கூடும்.

வினு: கO. இவ்வாத்மா எத்தன்மையர் ?

விடை: கO. இந்திரியங்கட்கு விஷய மாகாமையினுல் இத்தன்மையரென்று சொல்லலாகாது; தானுக விருத்தலால் அத்தன்மையரென்று பரோக்ஷமாகவுஞ் சொல்லலாகாது. இப்படி யிருதன்மையாகவும் சொல்லப்படாதவரே ஆத்மா.

வினு: கக. இப்படி நிர்ணயமானுல் இவன் சீவன், இவன் ஈசுரனென்றும், இரண்டற்கும் மஹாவாக்கியத்தினுல் ஐக்கியம் வந்தால் மோக்ஷமாமென்றுஞ் சொன்ன வேதவாக்கிய மெப்படிக்கூடும்?

விடை: கக. ஒரு புருஷனுக்குப் புத்திர பௌத்திராதிகளைக் குறித்துத் 'தகப்பன் பாட்டனென்று வந்த இரண்டு நாமமும், அந்த வுபாதிக ளில்லாவிட்டா லில்லாமற்போவதுபோல மாயை யவித்தையென்னப்பட்ட இரண்டுபாதிகளாலும் ஈசுவரனென்றும்,சீவனென்றுஞ் சொல்லப்பட்டது.ஒரு பிரஹ்மத்தைத்தானே உபாதி மித்தையென் றறிந்தவுடன் சீவனுமல்ல, ஈசுரனுமல்ல, நாம் பிரஹ்மமே யென்றல் பொருந்தும்.

வினு: கஉ. இத்தன்மைய ஞானத்திற்குப் பலன் யாது ?

விடை: கஉ. இப்படி யாத்மாவே பிரஹ்மமென்று பஞ்சகோச விவேகத்தினுற் பகுத்தறிகிறவன் தானுகவிருக்கும் பிரஹ்மத்திற்குச் சம்சாரமில்லை யென்றும் வேதவாக்கியத்தின்படி முத்

தனுய்ப் பிரஹ்மமாகவே யிருப்பன். இவனைக் காலத்திரயுத்தி லும் சம்சாரந் தொடராது. இதுவே பலன்.

எட்டாவது பஞ்சகோசவிவேகம் முற்றிற்று.

ஆக வினுவிடைகள் ௧உ.

ஒன்பதாவது துவைதவிவேகம்.

ஸ்ரீ வித்தியாரண்ணிய ஸ்வாமிகள் லோகாநுக்கிரக நிமித்தமாய்த் துவைதவிவேகம் சொல்லுகின்றார்:—

வினு: ௧. துவைத மெத்தனைவிதமா யிருக்கும்?

விடை: ௧. ஈசுரனுற் சிருஷ்டிக்கப்பட்ட துவைதமென்றும், ஜீவனுற்சிருஷ்டிக்கப்பட்ட துவைதமென்றும் இரண்டுவிதமாக விருக்கும். இதனிற் பஞ்சீகரணம் பண்ணின ஸ்தூலபூதபௌதிகபரியந்த முண்டான தத்துவமெல்லாம் ஈசுவரசிருஷ்டியென்று சொல்லப்படும்; அதற்கு மேற்பட்ட சாக்கிரமுதல் ஜீவன் முத்திபரியந்த முள்ள அவஸ்தைகளின் கற்பனையும், அந்தந்த அவஸ்தையில் உள்ள ஜாதிவர்ணுச்சிரம லௌகிக முறைமை முதலான சகல கற்பனைகளும் ஜீவசிருஷ்டி யென்று சொல்லப்படும்.

இவைகளும் ஈசுவர கற்பனையாலும் பிதாவினு லுண்டாக்கப்பட்ட பெண், அன்னியனுய் வந்த போக பர்த்தாவுக்குப் போககற்பனைக் கிடமானுற்போல நல்லது பொல்லாததென்று போககற்பனைக்கே யிடமாயின. ஆகையா லிவையெல்லாம் ஜீவசிருஷ்டியென்று சொல்லப்படும்.

வினு: உ. ஈசுரகாரியமும் ஜீவனுடைய போகமும் ஈசுரசிருஷ்டியென்றும், சொல்வதெப்படி?

விடை: உ. ஈசுரனுற் சிருஷ்டிக்கப்பட்ட மண், பொன், பெண் முதலானவைகளினுல் இதுவெனக் ககப்பட்டதென்று ஒருவன் சந்தோஷிக்கிருன். இதுவெனக் ககப்படாமற் போயிற்

றென்று ஒருவன் கிலேசிக்கிறுன். விரத்திவந்தவன் உபேக்ஷை யாயிருக்கிறுன். இப்படிப்பிரியம் அப்பிரியம், உபேக்ஷையென்று மண் முதலானவைகளில் காணப்படுகிற மூன்றுகாரங்களும் அற்றுத் தன் சுபாவத்திலிருந்ததே ஈசுவரசிருஷ்டி. மாதா சகோதரி பாரியென்று வெகுவிதாகாரமாகத் தோற்றும் ஒரு பிண்டமே ஈசுவரசிருஷ்டி. அதைக்குறித் துண்டான அநேகாகாரங்களும் அந்த வாகாரத்திற்கேற்ப அவனவன் மனதில் சங்கற்பித்த சமுசாரமுஞ் சீவசிருஷ்டியென் றறிக.

வினு : ரு. பிராந்தியினுலுஞ் சொப்பனத்தினுலும் மனோராச்சியமாகக் கற்பிக்கப்பட்ட அந்தக்கரண கற்பனை யெல்லாம் சீவசிருஷ்டியாகும். சாக்கிரத்தில் பிரமாணத்தினுற் பிரமாதாவினுல் அறியப்பட்ட பிரமேயங்களெல்லாஞ் சீவசிருஷ்டியென்பது கூடாது.

விடை : ரு. உலகத்திலே சகலபதார்த்தங்களையுந் தோற்றுவிக்கும் வெய்யில் அந்தப் பதார்த்தத்தின் பேரில் விழுந்து அவைகளை யாவரித்து அந்தப்பதார்த்தத்தை யடைந்து அவற்றைத் தோற்றுவிப்பதுபோல, சாக்கிரத்தில் *பிரமாதாவிடத்தினின்று முண்டான பிரமாணம் பிரமேயங்களை யடைந்து அவற்றினுகாரமாய் அவற்றி னஞ்ஞானத்தைத்தள்ளி அவற்றைத் தோற்றுவித்தலா லிப்படிச் சங்கற்பிக்கப்பட்ட சித்தவிருத்திப் பிரபஞ்சமெல்லாம் சீவசிருஷ்டியே யல்லாமல் ஈசுவரசிருஷ்டி யென்று சொல்லலாகாது. இது சித்தாந்தமாயின் பார்க்கின்ற விஷயங்க ளெல்லாம் ஈசுவர சிருஷ்டியும் சீவசிருஷ்டியுமாகக் கூடி இரண்டிரண்டாக விருக்கும். அதில் ஈசுவர சிருஷ்டியான விஷயம், சிதாபாசனுலறியப்படும். சீவசிருஷ்டியான விஷயம், சாக்ஷிஞானத்தினுற் பிரகாசிக்கப்படும். இப்படி ஈசுவர சிருஷ்டியும், சீவசிருஷ்டியும், பிரிபட்டுத் தோற்றினவுடனே சீவசிருஷ்டியைத் துடைத்தடக்கவேண்டும். அதுவே மனோநாசமென்

* பிரமாதா என்றது - அந்தக்கரணம். பிரமாணம் என்றது - அந்தக்கரணத்தின்விருத்தி. பிரமேயம் என்றது - கடாதி.

றும், வாசனக்ஷயமென்றும், சீவன் முத்தி வருகிறதற்குச் சாதன மாகச் சொல்லப்படும்.

வினா : ௮. ஈசுரசிருஷ்டி சீவன்முத்தி வந்தாலும் நாசப் படாமலிருப்பதுபோலச் சீவ சிருஷ்டியுமிருப்பதனாற் சாக்ஷியா யிருக்கும் நமக்கு ஹானி யாது ?

விடை :௮. சுகதுக்காதிசம்சாரம் யாவும் சீவசிருஷ்டி மூல மேயல்லாமல் ஈசுவரசிருஷ்டியினாற் சம்சாரம் அற்பமும் வருவ தில்லை. இந்தவர்த்தத்தில் சம்சயமுண்டானால் அந்வயவெதிரேக யுத்தியினால் விளங்கச் செய்விக்கிறோம். அஃதெங்ஙனமெனின் ஈசுவரசிருஷ்டி யுளதானால் சம்சாரமுண்டு. ஈசுவரசிருஷ்டியில் லையாயின்சம்சாரமில்லையென்பன அந்வய வெதிரேகயுத்தி. இர ண்டும் ஒத்துவரவேண்டும். ஒத்துவராமல்எங்கேதடைபட்டதெ னின் சமாதிசுழுத்தி முதலான வேளையில் ஈசுவர சிருஷ்டியிருந் தும்,ஒருவருக்கும்சுகதுக்காதிசம்சாரமில்லை. ஆகையால் அந்வய யுத்தி தட்டுப்பட்டது. பிரளயத்தில் ஈசுவரசிருஷ்டி யடங்கலும் வெதிரேகித்துப் போயிருக்கையிலும் ஒருவருக்கும் சீவன்முத்தி வாராமையினால் வெதிரேக யுத்தி தட்டுப்பட்டது. ஆகையால் ஈசுவரசிருஷ்டி சம்சாரத்திற்கு மூலமென்னலாகாது. சீவசிருஷ் டியே சம்சாரத்திற்கு மூலமென்பது அந்வயம். சீவசிருஷ்டி யொழிந்த விடத்தில் சம்சாரமில்லை யென்பது வெதிரேகம். இந்த விரண்டும் ஒத்துவந்ததே பிரமாணம். அஃதெங்ஙனமெ னின்,ஈசுவரசிருஷ்டியான வெளிப்பிரபஞ்ச மொழிந்திருக்கை யிலும் சொப்பனத்தில் சீவசிருஷ்டி அந்வயித்ததனால் சுகதுக் காதி சம்சாரமும் அவ்விடத்தில் அந்வயிக்கக்கண்டோம், சமாதி சுழுத்தி முதலான வேளையில் ஈசுவரசிருஷ்டியான பிரபஞ்சமி ருக்கச் சீவசிருஷ்டியான வந்தக்கரண கற்பனை வெதிரேகித்தத னால் சுகதுக்காதி சம்சாரமும் வெதிரேகித்துக் காணப்பட்டது. ஆதலால் சீவசிருஷ்டியே சகலசம்சாரத்திற்கும் மூலமாம்.

வினா : ௯. இரண்டு சிருஷ்டியுங்கூடி விளங்கும் சாக்கி ராவஸ்தையில் சீவசிருஷ்டி யொழிந்தவனே சீவன் முத்தன் என்பதற்கு வேறு யுத்தி யாது?

விடை : ௫. தன்கண்ணிற் காணுமற் றூரதேசத்தில் நெடுங் காலம் தன் பிள்ளை யிறந்துபோயிருக்க, நம்முடைய பிள்ளையி ருக்கிருனென்னும் சீவசிருஷ்டி யிருந்து சுகத்தைக்கொடுத்தது. பின்னொருவன்வந்து உன்பிள்ளை செத்தானென்று சொல்லக் கேட்டு நம்முடைய பிள்ளையை யிழந்தோமென்று சீவசிருஷ்டி மாறினவுடன் துக்கத்தைக் கொடுத்தது. அவன் செத்துப்போ யிருக்குங்காலத்தும் அந்தவார்த்தையைக் கேளாமலிருந்த கால மெல்லாஞ் சீவசிருஷ்டியிருந்து சுகத்தைக் கொடுத்தது. ஆத லாற் சகலபிராணிகளையும் பந்தப்படுத்துவது அந்தக்கரணப் பிர பஞ்சமே யல்லாமல் ஈசுவரப்பிரஞ்சமல்ல. ஆதலால் அந்தக்கர ணப் பிரபஞ்ச மாகிய சீவசிருஷ்டியைத் துடைத்தடக்க வே ண்டும்.

வினு : ௬. ஆனுல் அந்தக்கரணப் பிரபஞ்சத்திற்கு முன் னிலையான மூலம், ஈசுவரசிருஷ்டி யாகலின் ஈசுவரசிருஷ்டி யொழிந்தபின்னன்றோ அத்துவைதம் வரவேண்டும்?

விடை : ௬. சீவர்களது யத்தியோகத்திஞல் ஈசுவரப்பிர பஞ்சம் அழிக்கப்படுவதுமல்ல, சிருஷ்டிக்கப் படுவதுமல்ல, ஈசு வர சங்கற்பத்தின்படிஉண்டாகிறது.அவருடைய சங்கற்பத்தின் படி பிரளயத்தில் ஈசுவரசிருஷ்டி யாவுமொழிந்தவிடத்தும் அத் வைதம் ஒருவருக்குங் கூடாமையினுல் சாஸ்திரமுதலியமோக்ஷ சாதனங்களைக்கொண்டு ஈசுவரசிருஷ்டி நடக்கிற காலத்திலே யே அத்வைத ஞானத்திற்கு விரோதியாயிருக்கிற சீவசிருஷ்டி யை மாற்றி அத்வைதத்தைப்பெறலாம். ஆதலால் அது நமக் குச் சாதனமுமாம். அது நம்மால் அழிக்கப்படுவதுமன்று, இப் படி ஈசுவரத் துவைதமும் ஜீவத்துவைதமும் சொல்லப்பட்டது. ஆதலால் ஈசுவர சிருஷ்டி நம்மாலழிக்கப்படாததாம்.

வினு : எ. சீவத்வைதம் பந்தப்படுத்துவதாமாகலின் அது இத்தன்மையதென்றும், அதனையழிப்ப திவ்வாறென்றும், பிர மாண பூர்வகமாகச் சொல்லவேண்டும்.

விடை : எ. சாஸ்திரீயமென்றும் அசாஸ்திரீயமென்றும் சீவத்துவைதம் இரண்டு விதமாம். அவற்றில் சாஸ்திரீயமாவது, வேதாந்தசாஸ்திரஞ் சொன்னபடிகேட்டு மனதிலே நிர்ணயித்த தத்துவ சித்தாந்த யுத்திக் கிரமமுதலிய அந்தக்கரணப் பிரபஞ்சமாம். அசாஸ்திரீயமாவது, சாஸ்திரத்தைக் கடந்து பிரபஞ்சத்தைப் பிரமாணமாகவெண்ணி அந்தக்கட்டின்படியே நிர்ணயிக்கின்ற அந்தக்கரணப் பிரபஞ்சமாம். இது தீவிரமென்றும் மந்தமென்றும் இருவகையாம். இவற்றில் காரியபரியந்தம் நடக்கும் காமக்குரோதாதிப் பிரபஞ்சம் தீவிரமென்று சொல்லப்படும். பிரவிருத்தியற்றுப் பிரபஞ்சத்தைக் குறித்துச் சங்கற்பிக்கும் மனோராச்சியப் பிரபஞ்சமெல்லாம் மந்தமென்றுசொல்லப்படும். இந்தவிருவகையினையும் ஞானம் வேண்டுமென்பவன் சிரவணத்திற்குவருமுன்னே சாதனமப்பியசிக்கிற காலத்திலேயே தவிர்க்கவேண்டும். இல்லையாயின் கேள்வியில் சித்தம் ஒருமியாது. ஆனால் கேள்வி முடியுமட்டும் நீங்கியிருந்து திடமான பிற்பாடாயினும் அசாஸ்திரீயப் பிரபஞ்சம் வரலாமோ? வரலாகாது. வந்தால் சீவன் முத்திகூடாது. ஆதியில் நீக்குவது ஞானத்திற்கும்,அறிந்தபின் நீக்குவது சீவன்முத்திக்குமாம். ஆதலால்ஞானம் வந்தபின் அந்தக்கரணப் பிரபஞ்சத்தை நீக்காதிருந்தால் காமாதிப் பிரவிருத்தியில் முயன்று சுகதுக்காதிகளில் பந்தப்படுபவனுக்கு நிரந்தரம் நித்தியமுத்தனாய் நிரதிசயாநந்தமா யிருப்பவன் நானென்று நிற்காது மறைபடுதலால் சீவன் முத்திகூடாது. சீவன்முத்தி வேண்டியதில்லை, பிரஹ்ம சொரூபமான அவஸ்தாத்திரய சாக்ஷியே நாமென்று பிறித்தறிந்ததே முத்தியென்னும் சாஸ்திரமே போதுமெனின், இப்படி வந்ததனால் சந்தோஷிப்பவனால் குருசந்நிதானத்தில் வேதாந்தசாஸ்திர சிரவணம் பண்ணினமாத்திரத்தால் சுவர்க்கமுண்டென்னும் சாஸ்திரமே உனக்குப் போதும்.

வினா : அ. அசுராதியர் பீடைகளையும் புண்ணியம் குறைந்தெரிந்து விழுபவர்களையுங்கண்டு சுவர்க்கத்திலிச்சையில்லை.

விடை : அ. எழுபத்தொரு சதுர்யுகம் ஆநந்தபோகம் புசிக்கும் சுவர்க்கத்திலொவ்வோர் காலத்தில் வரும் அசுர பீடையினைக்கண்டு,அதில் வெறுப்புவந்து சுவர்க்கம் வேண்டாமென்னும் உனக்கு அனந்தகோடி சனனமரணாதி சம்சாரத்திற்கு மூலமான அந்தக்கரணப் பிரபஞ்சம் ஒழிந்து சீவன் முத்தியப்பியாசிக்கவேண்டுமென்பதும்,இற்றைவரைகேட்ட வேதாந்த சாஸ்திரங்களுக்கெல்லாம் சாக்ஷியே நானென்னும் புத்திமாறுமலிருக்கவேண்டுமென்பதும், சரீராதிகளில்நானென்னும்புத்திவாராமல் கெடவேண்டுமென்பதும், அதனை முன்னிட்டபிமானத்திற்கிடமான அகிலப்பிரபஞ்சத்தையும்மெய்யென்றுபாராமற்பொய்யென்றுதிடம்பண்ணவேண்டுமென்பதும்தாற்பரியமாகுதலால்,இவ்வர்த்தத்தைவிட்டுஇதற்குவிபரீதமானஅசுத்தபுத்தியைப்பண்ணிக்கொண்டு அசாஸ்திரீயப் பிரபஞ்சந் தவிரமாட்டேனெனின்; அப்பியசித்த சாஸ்திரம் வாக்கிலேமாத்திரம் கிளிப்பிள்ளைக்குச் சரியாம். அசுத்தப் பிரவிருத்தியினால் தத்துவஞானியும் நாயுஞ் சரியென வரும். இவ்வளவு மாத்திரமன்று. முன்னுளிற்றைவரையும் சம்சாரத்திலே பந்தப்படுத்தினது தன்னந்தக்கரண தோஷமென்றே கருதி, இப்போது தத்துவஞான மப்பியசித்துஞ் சீவன்முத்திவேண்டாம் அந்தக்கரணப் பிரபஞ்சத்தை கைவிடப்படாதெனின், இவன் கற்றஞானமென்ன செய்யும் அக்கிரமமென்னவென் றெல்லாருடைய வந்தக்கரண தோஷத்தினாலும் பந்தப்படுவன். ஆதலால் அந்தக்கரண கற்பனையை நன்றாய் ஒழித்து சாக்ஷியே நானென்று நின்று அந்தக்கரணத்தைச் சாக்ஷியிலொடுக்கிச் சரீராதி சகல சம்சாரத்தையுமறந்து, சகல லோகத்திலும் பட்டணத்துப் பிள்ளையைப்போலப் பூசிக்கப்பெற்று,ஆநந்தாவரணத்தைத் தள்ளிச் சீவன்முத்தியாற் பரப்பிரஹ்மமாகலாம்.

வினா : க. இப்படிச் சீவசிருஷ்டி பந்தப் படுத்துமானாற் றீவிரப்பிரபஞ்சத்தைக் கைவிடுவோம். காரியத்திற்கு வாராத மந்தமிருப்பதனால் ஹானியாது?

விடை : கூ. மனோராச்சியம் சகல பிரபஞ்சவிருத்திக்குந் திடப்பட்ட வனுசந்தானமான பீஜமாதலால் ஜனன மரணத் திற்கு மூலமென்றறிந்து மனோராச்சியத்தை முன்னர் ஒழிக்க வேண்டும். இப்படி இரும்பைக்கொண் டிரும்பை அராவுவது போலச் சாஸ்திரீயப் பிரபஞ்சத்தைக்கொண் டசாஸ்திரீயப் பிர பஞ்சமிரண்டையுந்தள்ளிப் பின்பு பிணஞ்சுடுதடிபோலச் சாஸ் திரீயப் பிரபஞ்சமும் ஒழியத் தானே தானாய்த் திடப்பட்டதே சீவன் முத்தி.

இப்படிச் சாஸ்திரீய மசாஸ்திரீய மிரண்டையுந் தவிர்ந்து தானேதானாய் அலைச்சலற நின்றவிடம் சீவன்முத்தியாகலின் இந்தப் பிரகரணத்தில் ஜீவசிருஷ்டியை ஈசுவர சிருஷ்டியினின் றும் விவேசனம்பண்ணிக் காட்டப்பட்டதென்றறிக.

ஒன்பதாவது துவைத விவேகம் முற்றிற்று.

ஆக வினா விடைகள் - கூ.

பத்தாவது மஹாவாக்கிய விவேகம்.

ஸ்ரீ வித்தியாரண்ணிய ஸ்வாமிகள், லோகோபகாரமாய் மஹாவாக்கிய விவேகஞ் சொல்லுகின்றார் :—

வினா : க. மஹா வாக்கியமென்பது யாது?

விடை : க. நாலுவேதங்களிலும் முடிந்த பொருளையே சொல்லும் நான்கு வாக்கியம் மஹாவாக்கியமாம்.

வினா : உ. அதற்கர்த்தமெப்படி?

விடை : உ. ஞானவடிவாயிருப்பதே பிரஹ்மமென்று இருக்குவேதஞ் சொல்லாநின்றது. நானே யந்தப்பிரஹ்மமென்று யசுர்வேதஞ் சொல்லாநின்றது. நீ யதுவாகின்றாயென்று சாம வேதஞ் சொல்லாநின்றது. இந்தவாத்மாவே பிரஹ்மமென்று அதர்வண வேதஞ் சொல்லாநின்றது.

வினு: ௩. இருக்குவேதத்திற் சொன்ன வர்த்தமெங்கே யிருக்கிறது?

விடை: ௩. எவ்வறிவினுற் சத்தமுதலான விஷயங்களறி யப்படுகின்றனவோ அந்தப் போதமே பிரஹ்மம்.

வினு: ௪. இத்தன்மைய பிரஹ்மமெத்தனை யுண்டு?

விடை: ௪. மும்மூர்த்திகண் முதலான தேவதைகளிடத் திலும், மனிதர்மிருகமுதலிய விடங்களிலும் சைதன்னியமொ ன்றேயொழிய விரண்டில்லை.

வினு: ௫. இப்படி முந்தியவாக்கியத்தினுல் ஞானநிர்ணய மானுல்; மற்ற மூன்று வாக்கியத்திற்கு மர்த்தம் யாது?

விடை: ௫. பரிபூரணமாயிருக்கும் பரமாத்மாவே இந்தத் தேகத்தில் புத்திக்குச்சாக்ஷியாயிருக்கும் சைதன்னியம். இப்படி த்தானுகவிருக்கும் பிரஹ்மமே அஹமென்று யசுர்வேதஞ் சொ ல்லாநின்றது. சீவனுடைய தேகேந்திரியாதிகட் ்கப்பாற்பட்டி ருக்கிற வஸ்து இந்தப் பிரஹ்மமாதலின், நீயே சகத்காரணப் பிரஹ்மமென்று சாமவேதஞ் சொல்லாநின்றது. இப்படிச்சுயம் பிரகாசமாக விருக்கிறவாத்மாவே பிரஹ்மமாம். வேறன்றென் றதர்வண வேதஞ் சொல்லாநின்றது.

பத்தாவது மஹாவாக்கிய விவேகம் முற்றிற்று.

ஆக வினு விடைகள் - ௫.

பதினோராவது - யோகாநந்தம்.

ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமிகள் தீபிகாபஞ்சகம், விவேக பஞ்சகம் என்னும் பத்துஞ்சொல்லி இந்தப்பத்திலுஞ் சொன்னபடி பிரஹ்மத்தைப் பகுந்தறிந்தவன் சகலதுக்கமும் போய்த் தடையற்ற வாநந்தத்தை யடைவனென்பதை ஆநந்த பஞ்சகத்தினுல் வெளிபண்ணுகின்றார்:—

வினா: க. பிரஹ்மஞானத்தி லிந்த விருவகைப் பிரயோஜனமு முண்டென்பதற்குப் பிரமாணம் யாது? அந்தஞானாநந்தமெத்தனைவிதம்? முன் இதனை யடைந்தவரார்? எப்படியடைந்தார்கள்? அடையும் அந்தப்பிரஹ்மமெதனாலாநந்தமா யிருக்கும்?

விடை: க. பிரஹ்மவித்துபரத்தையடைவன். ஆத்மஞானி சகலசோகமும் கடப்பன். பிரஹ்மரசம் புசித்தவனுக்கேயாநந்தம்; மற்றவனுக்கில்லை. சகலத்தையுந் தானாய்க்கண்டவனுக்கே பயம்போம். துவைதத்தைக் காண்பவனுக்கே பயமுண்டாம். பிரஹ்மாநந்தத்தை யறிந்தால் ஒருகாலு மெதன் நிமித்தமாயும் பயமில்லை. ஞானியைக் கர்மாக்கினி கிட்டாது. பிரஹ்மத்தை யறிந்தவுடனே சகலபாசமும் நசிக்கும். பரத்தை யறிந்தால் இருதயக்கிரந்தியும் சகல சந்தேகங்களும் வெந்து போம். ஞானிக் கொருகாலத்திலும் ஜனனமரணாதிகளில்லை. பிரஹ்மத்தை யறிந்தவன் பிரஹ்மமே யாவனென்பதே பயன். இப்படி முழுங்கும் வேதபுராணாதிக ளெல்லாம் பிரமாணம்.

பிரஹ்மாநந்தம், வித்தியாநந்தம், விஷயாநந்தம் என்று ஞானாநந்தம் மூன்றுவிதமா யிருக்கும். இதனை முன் வருணனிடத்தில் பிருகுகேட்டுப்பெற்றார். சனற்குமாரரிடத்திலும் நாரதர் பெற்றார். சகலரும் ஆநந்தத்திலே பிறந்து, ஆநந்தத்திலேயிருந்து, ஆநந்தமாத்திரமாய் மிஞ்சுதலாலே நாமே அத்வைதாநந்த மென்னும் கிரமத்தா லடைந்தார்கள். திரிபுடியில்லாததினால் பிரஹ்மமே ஆநந்தம்.

வினா: உ. திரிபுடியாது? திரிபுடியில் எதனாற் சுகமில்லை?

விடை: உ. விஞ்ஞானமயனென்னும் ஞாதுருவும், மனோமயனென்னும் ஞானமும், விஷயங்களென்னும் ஞேயமும் திரிபுடியாம். விஷங்கலந்த தேன்போல இந்தத்திரிபுடியில் வரும் விஷயசுகம் ஆபிரந்துக்கத்தோடே கூடியதாயிருத்தலின் சுகமன்று.

வினா: ங. அத்வைதத்தில் எப்படித் திரிபுடியில்லை?

விடை: ங. பூதோற்பத்திக்குமுன் அகண்ட ஆநந்தமானது சமாதி சுழுத்தி மூர்ச்சைபோலத் திரிபுடி யற்றிருக்கும்.

வினு : ௫. இப்படியானல் துவைதத்திலே யாநந்தமில்லா ததுபோல அத்வைதத்திலும் ஆநந்தமில்லை. உண்டெனின் லநுப விக்கவேண்டும். அதற் கங்கே திரிபுடியு மில்லை.

விடை : ௫. திரிபுடியற்றவிடத்தில் அத்வைதமென்றும், அதிலாநந்தமென்றும் இரண்டில்லை. அத்வைதமே ஆநந்த சொரூபம்.

வினு : ௬. அத்தன்மைய வாநந்த முண்டென்பதற்குப் பிரமாணம் யாது?

விடை : ௬. தானுகத்தோற்றிய வஸ்துவிற்குப் பிரமாணம் வேண்டியதில்லை.

வினு : ௬. அத்வைதாநந்தந் தானுய்த் தோற்றுமென்பது சொன்மாத்திரமன்றிக் காணப்படாதோ?

விடை : ௬. சுழுத்திபோல அறிக.

வினு : எ. சுழுத்தியிலே யத்வைதாநந்தந் தானுக விளங் குவதற்குப் பிரமாணம் யாது?

விடை : எ. சுழுத்தியிலே யிந்திரியமும் * திருஷ்டாந்த மும் இல்லாம லிருக்கையிலும், நான் சுகமாயிருந்தே னென் னும் உன்னுடைய வநுபவமே பிரமாணம்.

வினு : அ. சுழுத்தி யாநந்த மன்று; விக்ஷேப துக்கமில்லா ததனுல் சுகமென் ருரோபிக்கப்படுகின்றது.

விடை : அ. சுழுத்தியிலே சுகமேயில்லாவிட்டால், பாய் தலையணை முதலான சாதனமேன் தேடுகிருர்கள்.

வினு : க. துக்கம் போகவேண்டுமென்று பாய் தலையணை தேடுவதேயல்லாமல் சுழுத்தியில் சுகமில்லை.

விடை : க. அப்படியானல் வியாதிக்காரருக்கும் பாய் தலை யணையைக் கண்டவுடனே துக்கம் போகவேண்டும். அப்படி

---

* திருஷ்டாந்தம் என்றது - அன்னியன் சுழுத்தி.

யுங் காணேமே. ஆதலால் நித்திரைக்குச் சாதனமேயல்லாம லாநந்தத்திற்குச் சாதனமல்ல.

வினு: ௰. ஆனல் சுழுத்தி யாநந்தத்திற்குச் சாதனம் யாது?

விடை: ௰. ஜாக்கிர முதலான விக்ஷேபத்தில் நொந்த மனது சுழுத்தியிலே ஆத்மாவை நாடின வுடன் அதில் ஆநந்தம் பிரதிவிம்பிக்கும்; அந்த வாநந்தத்தை யநுபவித்தலால் ஒரு துக்கமுந் தோன்றுது. ஆதலால் சுழுத்தி யாநந்தமாகவேண்டும். ஆநந்தம் இல்லாதிருந்தாற் சகலருக்கும் நாட்டமுண்டாகாது. வேதத்திலே ஐந்து திருஷ்டாந்தமுஞ் சொல்லாது.

வினு: கக. சுழுத்தி யாநந்தமென்பதற்குச் சுருதியிற்சொன்ன ஐந்து திருஷ்டாந்த மெவை?

விடை: கக. வல்லூறு, பருந்து, குழந்தை, மஹாராஜா, மஹாப் பிராஹ்மணன்.

வினு? கஉ. இந்த வைந்துமெந்தவிதத்தில் திருஷ்டாந்த மாம்?

விடை: கஉ. கயிற்றினல் கட்டப்பட்ட வல்லூறு எந்தத் திக்கி லோடினலுந் தன்னிலையிலேவந்திளைப்பாறும். அதுபோல ஜீவோபாதியான மனதும் புண்ணிய பாவங்களைப் புசிக்கச் சாக்கிரத்திலுஞ் சொப்பனத்திலுஞ் சுழன்று சுழுத்தியிலே வந்து சுகமடையவேண்டும். பருந்தானது கூட்டிலே விழுகிறபோததிவேகமாய் விழுவதுபோலச் சீவனும் ஒன்றினலு மறிக்கப்படாமற் சுழுத்திசுகத்தை நாடுதலால் சுழுத்தி ஆநந்தமாகவேண்டும். முலையுண்டு மஞ்சத்திற்கிடக்கிற குழந்தை ராகத்துவேஷ மில்லாமையினல் ஆநந்தமா யிருப்பதுபோல ராகத்துவேஷ மில்லாதசுழுத்தியும் ஆநந்தமாகவேண்டும். சகல பூமியையுந் தன்வசம் பண்ணிக்கொண்ட ராஜா பின்பு திருப்தனு யிருப்பது போல திருப்தியா யிருக்கிற சுழுத்தியும் ஆநந்தமாகவேண்டும். ஜீவன்முத்தனு யிருக்கிற மஹாப்பிராஹ்மணன் இனிக் கற்க வேண்டிய தில்லையென்று கவலை கெட்டிருப்பதுபோலக் கவலை யில்லாத சுழுத்தியும் ஆநந்தமாகவேண்டும்.

வினு: கரு. இப்படிச் சீவன் முத்தியடைந்து பந்தம் நீங்கியவனுக்கன்றி மற்றவர்களுக்குச் சுகமில்லையோ?

விடை: கரு. நன்ருக விடுபெட்டவனுக்கும் நன்ருகப் பந்தப்பட்டவனுக்குஞ் சுகமுண்டு; நடுநாடனுக்குச் சுகமில்லை.

வினு: கச. சுழுத்தியிலே மற்ற வியாபாரமேன் றெரியவில்லை?

விடை: கச. ஸ்திரீயினுல் தழுவப்பட்டவனுக்கு வீட்டுக் காரியமும் வெளியில் நடக்கும் காரியமுந் தெரியாததுபோல, சுழுத்தியாநந்தத்தி லழுந்தினவனுக்கு நாடியினுட் சொப்பனமும், வெளியிற் சாற்கிரமும் தெரியாது. எழுந்திருந்தபின் சுகமாய்த் தூங்கினேன் ஒன்று மறியே னென்கிறதினுலே அஞ்ஞானமும் ஆநந்தமயமுங் காணப்படுகிறது. மனேமயனும் விஞ்ஞானமயனும் அஞ்ஞானத்திலே யழுந்தினகாலத்தில் ஆநந்தமயனென்று சொல்லப்படுவர். இப்படி அஞ்ஞானவிருத்தி சூக்ஷமமென்றும், மனேவிருத்தி ஸ்தூலமென்றும் வேதஞ் சொல்லுகிறது.

வினு: கரு. இப்படிப் பிரஹ்மாநந்தத்தி லேகமாயழுந்தியிருந்த ஜீவன் விக்ஷேபத்தி லேன் விழிக்கிருன்?

விடை: கரு. சன்மாந்தர கர்மத்தினுல் விழிக்கிருன். விழித்தும் அவ்விடத்துப் பக்ஷபாதம்விடாமற் சற்றுநேரம் நிர்விஷயமாயிருக்கிருன். பின்பு கர்மங்க ளதை மறக்கடித் திழுத்துச் செல்லுகின்றன. ஆதலால் நித்திரைக்கு முன்னும் பின்னும் பக்ஷபாத மிருத்தலால் ஆநந்தமே பிரஹ்மமாகவேண்டும்.

வினு: கசு. சும்மாயிருப்பதும் பிரஹ்மாநந்த மானுல், சோம்பலும் பிரஹ்மாநந்தமாக வேண்டுமே?

விடை: கசு. வேதமறிந்தவர்களுக்குத் தானங் கொடுக்கிருர்க ளென்பதைக்கேட்டு, வேதம் நான்கென்றறிவேன் எனக்குத் தானங்கொடு வென்பவன்போல நீயும் பரிகாசஞ் செய்கிருய். குருவையுஞ் சாஸ்திரத்தையும் விட்டு எவராலே பிரஹ்மம் அறியப்படும்; எவராலும் அறியப்படாது.

வினா: கஎ. வேதாந்தம் முழுவதும் படித்தாற் போதுமோ?

விடை: கஎ. அர்த்தமறிந்தாலொழியப் போதாது.

வினா: கஅ. விற்பத்தியினால் அர்த்தம் பார்த்துக்கொண்டாற் போதாதோ?

விடை: கஅ. சாக்ஷாத்காரம் வந்தாலன்றி போதாது?

வினா: கக. இனி எப்போது சாக்ஷாத்காரம் வரும்?

விடை: கக. கிருதார்த்தனுகுமளவுங் குருவை யுபாசித்தால் வரும்.

வினா: உ0. குருவை யுபாசித்தா லெப்படி வரும்?

விடை: உ0. அவர், விஷயநிமித்தமின்றி வரும் வாசனாநந்தத்தையும், விஷயம் லபித்து விஷயவாசை யொழிந்தபின் அந்தர்முகமான மனோவிருத்தியில் பிரதிபிம்பிக்கும் ஆநந்தங்களையும், இவை நம்முடைய சுபாவாநந்த வாசனை யல்லாமல் வேறல்லவென்று காண்கவென்று உபதேசிப்பார்.

வினா: உக. சுபாவாநந்தமானது பிரதிபிம்பாநந்தத்தையும், வாசநாநந்தத்தையும் எப்படி யுண்டுபண்ணும்?

விடை: உக. சுருதி யுத்தி யநுபவத்தினால் சுழுத்திகாலத்தில் தான் பிரஹ்மாநந்தமென்பது சுபாவசித்தமா யிருந்தாலும், அவ்விடத்தில் பிரதிபிம்பாநந்தமாகிய வாநந்தம் இருதயத்தை விட்டுக் கண்டத்தில்வந்து சொப்பனத்தில் விஞ்ஞானமயமாம். நேத்திரத்தில்வந்து சாக்கிரத்தில் காய்ச்சின விரும்பினுண்டைபோலத் தேகமெல்லாங் கலந்துநின்று உதாசீனன், சுகி, துக்கி, என்று மூவகையாகவிருக்கும். இதிற் சுகி, துக்கி, இரண்டும் கர்மகாரியம். உதாசீனம் தன்சுபாவமா யிருப்பது.

வினா: உஉ. சுகதுக்கமெத்தனை விதம்? இரண்டுமெல்லாமற் சும்மாவிருக்கும் வேளையில் எது தோற்றும்?

விடை: உஉ. வாகியபோகமென்றும், மனோராச்சியமென்றும் சுகதுக்கமிரண்டுவிதமாயிருக்கும். இவற்றின் இடைத்

தண்டிகளி லெனக்கொரு சிந்தனையுமில்லை, சுகமாயிருக்கிறே னென்றெல்லோருஞ் சொல்லுதலால், ஆத்மா சுபாவாநந்தமெ ன்பதில் சந்தேகமில்லை.

வினா : உரு. தன்னுடைய சுபாவாநந்த மிதுதானோ?

விடை : உரு. நீருள்ள குடத்தைத்தொட்டவுடன் காண ப்படும் குளிர்ச்சி நீராகாவிட்டாலும், அதனால் குடத்தில் நீருண் டென் றறிவதுபோல, உதாசீனவேளையில் காணப்படும் சுகமும் உள்ளே அகங்காரத்தினால் மறைபட்டிருக்கும் சுபாவாநந்தத்தின் வாசனையேயாம்.

வினா : உச. இப்படியானாற் சுபாவாநந்தமெப்போது தோ ற்றும்?

விடை : உச. பிரஹ்மாப்பியாசத்தினால் அகங்காரத்தை மறக்கமறக்கப் பிரஹ்மாநந்த சுபாவம் வெட்டவெளியாம். அக ங்காரத்தை நன்றாய் மறந்தாற் சித்தமிருத்தலால் நித்திரையு மல்ல. தேகமும்விழாது. இப்படித் துவைதமுந் தோற்றாமல் நித்திரையுமல்லாமலிருக்கிற பிரஹ்மாநந்த நிலை வெளியாம்.

வினா : உ௫. இப்படிப்பட்ட நிலை வரத்தக்கதாகப் பிரஹ் மாப்பியாசம் பண்ணும் கிரமம் யாது? அதற்குப் பிரமாணம் யாது?

விடை : உ௫. பிரபஞ்ச விஷயத்தில் விழாமற் புத்தியைத் திடம்பண்ணிக்கொண்டு பிரபஞ்சத்தினின்றும் மெல்லமெல்ல வொழியவேண்டும். எந்தவழியால்புத்தி பேதிக்கின்றதோ, அந்த வழியை மறுக்கவேண்டும். சஞ்சலமான மனதை யாத்மாவினி டத்தில் அசையாம னிருத்தவேண்டும். இப்படி நிறுத்தினால், இந்த யோகத்தினால் எதில் மனது நிற்குமோ எந்தச் சுகத்திற் காதியு மந்தமுமில்லையோ, எந்நிலைபெற்றால் இனி இல்லையெ ன்னப்பட்ட கர்மபந்தங்களினாலும் அசைக்கப்படாதோ, அந்தப் பிரஹ்மாநந்த மிவனை யடையும். இதுவே கிரமம். இப்படிச் சொன்ன கீதாவசனமே பிரமாணமாம்.

வினா : உசா. இந்த வப்பியாசம் செய்வ தெப்படி?

விடை: உரு. தர்ப்பை நுனியால் சிட்டுக்குருவி சமுத்தி ரத்தை யிறைத்தாற்போல் மனோநிக்கிரகம் பண்ணுவதும் இலே சப்படாமற் சிறுகச்சிறுக பண்ணவேண்டும். பிரபஞ்ச விருத்தி மறக்கும்போதெண்ணெயற்ற விளக்குப்போலவந்தக்கரணமுஞ் சின்மாத்திரமாக வழியும்.

வினா: உச. சித்தம் ஆத்மாவில் இலயித்ததனுல் கர்ம பந்த மெப்படி விடுபடும்?

விடை: உஎ. கர்ம சம்சாரங்களுக்குச் சித்தமே காரண மாதலால், அந்தச் சித்தத்தைத்தானே சோதிக்கும்போது சகல கர்மமும் விட்டுப்போம்.

வினா: உஅ. சித்தத்தைச்சோதிக்கும் கிரமம்யாது? இதை ச்சோதித்தால் மோக்ஷம், சோதியாவிட்டால் பந்தமென்பதற்கு ப் பிரமாணம் யாது?

விடை: உஅ. அந்தக்கரணத்தை விஷயத்திற் பற்றுவது போலப் பிரஹ்மத்திற் பற்றவைப்பதே சோதித்தலாம். அந்தக் கரணம் விஷயத்திற் பற்றினுல் அசுத்தம், பிரஹ்மத்திற் பற்றி னுற் சுத்தம். ஆதலால் மனதேபந்தத்திற்கும் முத்திக்குங் கார ணமாமென்னும் வேதம் பிரமாணமாம்.

வினா: உக. சமாதியில் ஆநந்தமெப்படியிருக்கும்? சமாதி யில்லாத வேளையி லெப்படியிருப்பன்? இப்படி யோகத்திலே மனது மூண்டவனுக் கடையாளம் யாது? இந்திரியங்கள் பலம் பண்ணிப் பிரபஞ்சத்திலிழுத்தாற் செய்காரியம் யாது? இவனு க்கு விஷயாநந்த மெப்படித் தோற்றும்?

விடை: உக. சமாதியில் நிர்மலாந்தக்கரணத்திற் கொரு சூசனை தெரியுமேயல்லாமல் வாக்கால் சொல்ல முடியாது. சமா தியில் நிச்சயித்தபடி மற்றவேளையிலும் நம்பிக்கையாயிருப்பன். பரபுருஷனை யடையும் நாரிபோல அநுசந்தானத்தில் கவனமா யிருப்பன்; பிரபஞ்சத்தில் கவனமற்றிருப்பன். சுமையெடுப்ப வன் சற்றுசற்று வைத்திளைப்பாறுவதுபோலச் சிறுகச்சிறுக இந் திரியங்களை மறித்துச் சமாதியி லிளைப்பாற்றுவன். அநுசந்தா

ணத்திற்கு விரோதியாய்வந்த விஷயாநந்தமும், நெருப்பிலேவிழப்போகிறவனுக்கு அதற்குத் தாமதகாரணமாகச் செய்யும் அலங்காராதிகளைப்போலத் தோற்றும்.

வினா: கூ௦. பிரஹ்மாநுசந்தானமும் பிரபஞ்ச வியாபாரமும் ஒரு மனதினாற் செய்யக்கூடுமோ?

விடை: கூ௦. ஞானியினுடைய மனது காக்கைக்கண்போல விரண்டிலும் போக்குவரத்தாயிருக்கும்.

வினா: கூக. சமாதியில்வரும் பிரஹ்மாநந்தத்தையும், அதற்கு * அவிரோதியாய் வரும் விஷயாநந்தத்தையும் அநுபவிக்கும் ஞானி யெப்படியிருப்பன்?

விடை: கூக. இரண்டு பாஷையு மறிந்தவன்போல விருவகை யாநந்தத்தையுங் கண்டு புசித்துக் களித்திருப்பன்.

இதனால் பிரஹ்மாநந்த கிரந்தத்தில் யோகிக்குப் பிரத்தியக்ஷமாயுள்ள யோகாநந்தஞ் சொல்லப்பட்டது.

பதினோராவது யோகாநந்தம் முற்றிற்று.

ஆக வினா விடைகள் - கூக.

பன்னிரண்டாவது ஆத்மாநந்தம்.

எவருடைய மூச்சுக்காற்றே வேதமாய் விளங்காநின்றதோ, எவர் வேதத்தினால் சகலசகத்தையு முண்டாக்கினாரோ, அந்த ஈசுவரனாகிய ஸ்ரீ வித்தியாரண்ணிய சுவாமியை நமஸ்காரம்பண்ணி ஆத்மாநந்தத்திற் கர்த்தஞ்சொல்லுவாம்.

வினா: க. யோகியானவன் யோகத்தினால் தன்னுடைய சுபாவாநந்தத்தை யறியட்டும்; இனி மூடனாயிருப்பவனுக்குக் கதி யாது?

---

* அவிரோதி என்றது - பகிர்முகமாதற் கேதுவல்லாத விஷய சுகத்தை.

விடை : க தர்மாதர்மவசத்தினுல் லக்ஷம் சன்மமெடுக்கட்டும்.

வினு : உ. இப்படித் தள்ளிவிடலாமா? எல்லோரிடத்திலுந் தயை யிருக்கவேண்டாமோ ?

விடை : உ. நாம் ஐயோவென்பதனுற் பிரயோஜனம் யாது ? அந்தமூடன் பகிர்முகனே அந்தர் முகனேவென்று நோக்கி அவனுக்கேற்ற வுபதேசம்பண்ணலாம்.

வினு : ௩. இவ்விருவகுப்பினரில் எவனுக்கெதை யுபதேசம் பண்ணலாம் ?

விடை : ௩. பகிர்முகனுயிருக்கும் மூடனுக்குக் கர்மவுபாசனைகளையும், அந்தர்முகனுயிருக்கும் மூடனுக்கு ஆத்மாநந்த மார்க்கத்தில் ஞானத்தையும் உபதேசிக்க வேண்டும்.

வினு : ௪. முன் இப்படி மூடருக்காத்மாநந்த முபதேசித்தவருண்டோ ? ஆத்மாநந்த வுபதேசமென்பது யாது ?

விடை : ௪. யாஞ்ஞவல்கியர் தம்முடைய பெண்சாதி மைத்திரிக் குபதேசித்தார். ஆநந்தமாயிருக்கும் வஸ்து ஆத்மாவென்று காட்டுவது உபதேசம்.

வினு : ௫. இப்படியானுல் விஷயங்களெல்லா மாத்மாவல்லவோ ?

விடை : ௫. பெண்சாதி, புருஷன், பிள்ளை, தனம், பசு, பிராஹ்மணஜாதி, லோகங்கள், தேவதைகள், வேதங்கள், பூதங்கள்; சகலமும் ஆத்மாவைக்குறித்துப் பிரியமேயன்றி இவை அநந்தமாகாவென்று வேதஞ் சொல்லுகிறது.

வினு : ௬. ஆநந்தமா யிருக்கும் இவைகளை யாநந்தமல்லவென்பதெப்படி ?

விடை : ௬. பெண்சாதிக்குப் புருஷனிடத்தில் விருப்பம் பிறந்தவேளையில் வியாதி பசியினுல் அவனிவளை யிச்சியாமையினுல் பர்த்தாவைக் குறித்துவந்த வாநந்தம் இவளுடைய சுபாவமேயல்லாமல் அவனை யாநந்த மென்னலாகாது. புருஷனுக்குப் பெண்சாதி யாநந்தமாய்த் தோற்றும்போது வியாதியினுல் யவ

ளிவனை விரும்பாமையினு லிந்தவாநந்த மிவனுடைய சுபாவமே யல்லாமல் அவள் பிரியவஸ்துவென்பதில்லை. முட்கள்போல மீசை தைக்க அழுதாலும் குழந்தையை முத்தமிட்டுக்கொள்ளும் ஆநந்தம் பிதாவுக்குத் தன்னுடைய வாநந்தமேயல்லாமற் குழந்தையாநந்தமல்ல. சந்தோஷப்பட வறியாத இரத்ன கனகாதிகளைச் சாவதானமாய் ரட்சித்துக்கொண்டு மகிழ்வது, இவனுடைய வாநந்தமேயல்லாமல் ஐசுவரியமாநந்தமல்ல. காளைகளிச்சியாவிட்டாலும் அதில் பொதியெடுப்பிக்கும் சந்தோஷம் செட்டிக்கேயல்லாமற் காளையின்பொருட்டல்ல. நான் பிராஹ்மணனென்று சபையில் பூஜையடையும் சந்தோஷந் தனக்கேயல்லாமல் அசேதனமான ஜாதிக்கல்ல. சுவர்க்கலோக பிரமலோகங்கள் நமக்கு வேண்டுமென்னும் வாஞ்சை தன்னுடைய சந்தோஷமே யல்லாமல் அந்தலோகங்கட் குபகாரமல்ல. சிவன் முதலான தேவதைகளைப் பாவம் போகவேண்டுமென்று பூஜிப்பது தான் பிழைக்கும்பொருட்டே யல்லாமற் றேவதைகளுக்காகவல்ல. வேதங்களை யோதுவது தனக்காகவே யல்லாமல் வேதங்களுக்காக வல்ல. இடம், தாகம், பாகம், உலர்த்தல், அவகாசம் என்பவற்றிற்காகப் பஞ்சபூதங்களை விரும்பும் சந்தோஷம் தனக்காகவே யல்லாமற் பூதங்களுக்காக வல்ல. இப்படி ஆண்டவனடியா னென்பது முதலானவைகளுந் தனக்காகவே யல்லாமற் பரத்துக்காகவல்ல. ஆதலாற் சகலவிஷயத்தையுங் குறித்துத் தானே பிரியவஸ்து வல்லாமல் விஷயங்கள் பிரியவஸ்துவல்ல. இதனுல் ஆத்மாவே யாநந்தமென்பதற்குச் சந்தேகமில்லை.

வினு: எ. இப்படிவரும் சந்தோஷமெத்தனை விதமாய்ச் சொல்லப்படும்.

விடை: எ. பொன்முதலான விஷயத்தில் ஆசையென்றும், கர்மவுபாசனையில் சிரத்தையென்றும், கிடையாதவஸ்துவில் இச்சையென்றும், குருதேவதைகளிடத்தில் பத்தியென்றும் நான்குவிதமாய்ச் சொல்லப்படும்.

வினு: அ. இந்த விஷயங்களிலிருக்கும் பிரீதிபோல, ஆத்மாவினிடத்திலு மொரு பிரீதியிருக்கிறது. அதனுல் விஷயம் பிரியமல்ல வென்பதென்னை?

விடை : அ. ஒரு விஷயத்தைவிட்டு ஒரு விஷயத்தை நாடுவதுபோல, ஆத்மா கைவிடப் படாததாகலின் ஆத்மாவே யாநந்தம்; மற்றவையாவும் ஆநந்தமன்று.

வினு : கூ. ஆத்மா இராகம் துவேஷமிரண்டற்கும் விஷயமாகா தெனின், ஓட்டினைப்போல வுபேக்ஷைக்கு விஷயமாகுமே?

விடை : கூ. உபேக்ஷிப்பவனுடைய சொரூபமா யிருத்தலால் ஆத்மா உபேக்ஷைக்கு விஷயமன்று.

வினு : க0. வியாதியும், கோபமும், அதிகரித்தவன், ஆத்மத் தியாகம் பண்ண நினைத்தலால், ஆத்மா துவேஷத்திற்கு விஷயமாகுமே?

விடை : க0. தியாகம்பண்ண யோக்கியமான தேகத்தைத் தியாகம் பண்ணுகிறானே யல்லாமற் றியாகம்பண்ணுகிறவனுயிருக்கிற தன்னைத் தியாகம் பண்ணவில்லை.

வினு: கக. இப்படியிருவகைக்கும் விஷயமாகாத வாத்மா பிரியத்திற்கே விஷயமாகட்டுமே?

விடை : கக. பிதாவுக்குப் புத்திரனே சகல பந்துக்களைவிட பிரியவஸ்துவாவதுபோல வாத்மாவைக்குறித்தே சகல விஷயமும் பிரியமாயிருத்தலால் ஆத்மா அதிகப்பிரியமான வஸ்துவே யல்லாமல் விஷயமல்ல.

வினு : கஉ. இப்படி அதிகப்பிரியவஸ்துவே யாத்மாவானுல் ஆத்மாவே பிள்ளையானுனென்றும், இவன் பண்ணின புண்ணியத்தினுல் ஆத்மாவே பிள்ளையானுனென்றும், பிள்ளையில்லாதவனுக்குக் கதியில்லையென்றும் வேதஞ் சொல்லுதலால் புத்திரனே யாத்மாவாகட்டுமே?

விடை : கஉ. கவுணுத்மா வென்றும், மித்தை யாத்மா வென்றும், முக்கியவாத்மாவென்று மிப்படி மூன்றுத்மா வுண்டு. ஒவ்வொரு வகையில் ஒவ்வொராத்மா பிரதானமா யிருக்கும். புத்திரனை யாத்மாவென்ப திந்தமூவகையி லொருவகையிலே யல்லாமல் முக்கியமல்ல.

வினா: கரு. இந்த மூவகை யாத்மாவாகச் சொன்னதென்ன? இதி லெந்த வாத்மா முக்கியம்?

விடை: கரு. ஒரு புருஷனைச் சிங்கமென்பது போலப் பிள்ளையை யாத்மாவென்பது கௌணம். கட்டையைக் கள்ளனென்பதுபோலப் பஞ்சகோசத்தைத் தானென்பது மித்தை. கட்டையைக் கட்டையென்பதுபோலச் சாக்ஷியைத்தா னென்பது முக்கியம். தான் செத்தாலும் பிள்ளைகள் பிழைத்தாற் போது மென்பதனாலும், குடும்பத்தை ரக்ஷிப்பதனாலுங் கௌணாத்மாவா யிருக்கிற புத்திரனே முக்கியம். நான் பருத்தேன் சிறுத்தே னென்னுமிடத்திற் றேகமே முக்கியமாய்க் கண்டாற்போல, சுவர்க்கலோகம் வேண்டுமென்று காயக் கிலேசமான தவசுபண்ணுமிடத்தில் மித்தை யாத்மாவான வகங்காரமே முக்கியம். நான் சுயம்பிரகாசன் நிர்விகாரியென்னுமிடத்தில் முக்கியாத்மாவான சாக்ஷியே முக்கியம். ஆதலால் பஞ்சகோசங்களைத் தள்ளினாலுந் தள்ளப்படாத வாத்மாவே யாநந்த சொரூபமாம்.

வினா: கசு. இவரைப் பிரித்தறியும் கிரமம்யாது? தள்ளப்பட்ட பஞ்சகோசாதிகளும் ஒவ்வொருகா லாநந்தமாய்த் தோற்றுவதென்னை?

விடை: கசு. தினமும் மூன்றவத்தைகளின் போக்குவரவைக் காண்கின்ற சுயம்பிரகாச சைதன்னியமே தானென் றறியவேண்டும். மற்றப்புத்திராதி பிராண பரியந்தமான யாவும், ஆத்மாவை நெருங்கியதற்குத் தக்க வாநந்த தாரதம்மியத்தைக் காணும்.

வினா: கஎ. ஆத்மாவைக் கிட்டக்கிட்ட வாநந்த தாரதம்மியங் காணும் வகை யெப்படி?

விடை: கஎ. உலகத்தில் ஐசுவரியஞ் சுகசாதனமாதலால் கைவிடப்படாத வாநந்தமென்று சொல்லப்படும். புத்திராதிகளுக்குப் பீடைவந்தபோ தைசுவரியத்தைக் கைவிட்டாவது பிள்

ளையை யிரக்ஷித்தலால் ஐசுவரியத்தைவிட பிள்ளையே யாநந்தமாகவேண்டும். தீப்பற்றினவீட்டில் புத்திரனைக் கைவிட்டா வது தானேடிப்போகின்றமையினல் புத்திரனைவிட சரீரமே யாநந்தமாகவேண்டும். கொசுகு விழும்போதும் தூளிக்காற்றடிக்கும்போதும் சரீரத்தை யுபேக்ஷித்து, இந்திரியங்களைக் காப்பதினல் சரீரத்தைவிட இந்திரியமே யாநந்தமாகவேண்டும். வெட்டக்கொண்டு போகும்போது இந்திரியங்களை யுபேக்ஷித்தாயினும் பிராணுதிகளை ரக்ஷித்தலா லிந்திரியங்களைவிட பிராணுதிகளே யாநந்தமாகவேண்டும். பிராணன் போகும்போ திந்தப் பிராணுதிகளெல்லா மினி நமக்குத் தகாவென்று நிச்சயித்துக் கைவிட்டுப் பிராணுதிக ளுண்டானபோது கூடவு முண்டாகாமல் பிராணுதிக ணசிக்கும்போது கூடவும் நசியாமல், அசங்கசைதன்னியமா யிருக்கிற தானே யொருக்காலுங் கைவிடப்படாத பரமாநந்த சொரூபம்.

விஞ; கசு. தகப்பனுக்குப்பின் அந்த வாதீனத்தில் இருந்து புசிக்கமாட்டாத சாக்ஷியை யாத்மாவென்பது ஒப்பத்தகுந்தல்ல; பாபம், பழியும், இரணமும், தன்னதாக வொப்புக்கொண்டு புசிக்கும் புத்திரனே யாத்மா வாகவேண்டும். இவனுக்கு மேற் பிரியவஸ்துவு மில்லை.

விடை: கசு. முன்சொன்ன விவேகமெல்லாம் விட்டுப் போட்டுத் திரும்பவும் இப்படிச் சங்கித்தவன் சிஷ்யனே பிரதிவாதியோ வென் றறிந்து, இருவகைக்கேற்ற வுத்தரஞ் சொல்லவேண்டும். அஃதெப்படி யெனின், சிஷ்யனுக்குச் சொல்லும் உத்தரம்:—பிள்ளை வருவதற்கு முன்னும் பிள்ளையில்லை யென்பது துக்கம். கர்ப்பத்திலே வந்தாலும் நசித்துப் போமென்பது துக்கம். நிர்ணயப்பட்டாலும் பெற்றுப் பிழைக்குமோவென்பது துக்கம். பிறந்தபின்பு கணங்கள், பறவைதோஷ முதலியவற்றல் துக்கம். குமாரனுல் மூர்க்கத்தனத்தினுல் துக்கம். பூணூலிட்டாற் படிப்பதில்லையென்பது துக்கம். வித்துவானுனல் வேட்பிக்கவேண்டுமென்பது துக்கம். எவ்வனம் வந்தால் பர

தாரகமனம் பண்ணுகிறுனென்பது துக்கம். குடும்பியானுல் தரித்திரப்படுகிறுனென்பது துக்கம். அவன் தனவானுனுல் நாம் காணுமற் செத்துப்போகிறேமோ வென்பது துக்கம். இப்படிப் புத்திரன் முதலியவற்றில் பகுத்துப் பார்க்கிற் றுக்கமே காணப் படுவது சுபாவம்.

பிரதிவாதிக்குச் சொல்லுவது :— குதர்க்க சங்கையினுல் இகபரம் இரண்டுமில்லாமற் கெட்டுப் போவாய்என்னும் சாபந் தான்.

வினு : கஎ. இவர் கோபித்ததனுல் பிரதிவாதிக்கு ஹானி யாது?

விடை : கஎ. பிரஹ்மவித்தா யிருப்பவன் பிரமசொரூப மாதலாற் சிஷ்யனுக்கும் பிரதிவாதிக்கும் அவன் பண்ணின வநுக்கிரகமும் நிக்கிரகமு மந்தப்படியே பலிக்குமென்பதனுலும், பிரஹ்ம வித்துக்களை விஷம சங்கை பண்ணினவன் ஆயிரஞ் சதுர்யுகம் இரௌரவ நரகத்திலே கிடப்பானென்னும் புராண வசனத்தினுலும் பிரதிவாதிக் கநர்த்தம் வரும்.

வினு : கஅ. மேற் சித்தாந்தம் யாது?

விடை : கஅ. இப்போது சொன்னபடி பகுத்தறிந்து சாக்ஷியாயிருக்கிற தானே சகலத்திலும் பிரியவஸ்துவென் றுத்மாநந்தத்தி லெந்நேரமுங் களித்திருப்பவனுக்கே முத்தியென்பது சித்தாந்தம்.

வினு : கக. இந்த வாத்மாவுக்குச் சைதன்னியம்போலச் சுகமுஞ் சுபாவமேயானு லந்தக்கரண விருத்திகளில் சித்துமாத்திரந் தோன்றி யாநந்தந் தோன்று திருப்பதென்னே?

விடை : கக. உஷ்ணமும் பிரகாசமுஞ் சுபாவமாயிருக்கும் அக்கினியின் உஷ்ணந் தண்ணீரிலும் பிரபை வீட்டிலும் பிரிந்து காண்பதுபோலவும், தாமரைப் பூவிற்குச் சுபாவமாயிருக்கும் ரூபரசகந்தங்களுள் ஒவ்வொரு விந்திரியத்தினு லொவ்வொருகுணந் தோற்றுவதுபோலவும், ஆத்மாவின் சிதாநந்தங்க

ளும் ஒவ்வொரு விருத்தியி லொவ்வொரு சுபாவமாய்த் தோற்றும்.

வினா : ൯0. எந்தவிருத்தியி லெந்தச்சுபாவந் தோற்றும் ?

விடை : உ0. நிர்மலமாயிருக்கும் சாத்வீகவிருத்தியி லாத்மாவின் சித்து ஙாநந்தமுந் தோற்றும். மலினமாயிருக்கும் ராஜசவிருத்தியி லாநந்தாம்சந் தோற்றாது.

வினா : உக. இத்தன்மைய ஆத்மாநந்தம் முன் அத்தியாயத்திற் சொன்ன யோகமின்றி இவ்வத்தியாயத்திற் சொன்ன விவேகத்தினாற்றானே சாதிக்கப்படுமோ? இதற்குப் பிரமாணம் யாது ?

விடை : உக, யோகத்தினால் எந்தப் பிரஹ்ம மடையப்படுகிறதோ, அதுவே ஞானத்தினாலும் ஆத்மாநந்தமாக வெளிப்பட்டது. இதற்குச் சாங்கியத்தினா லடையப்படும் பதமே யோகத்தினாலு மடையலாமென்னும் கீதாவசனம் பிரமாணம்.

வினா : உஉ. சாங்கியம் யோகமென் றிரண்டுவழியாய்ப் பகுத்துச் சொல்வதென்? இருவருக்கும் பலன் சரியாய் வருவதென் ?

விடை : உஉ. ஒருவனுக்கு யோக மெளிதாய்வரும், ஒருவனுக்கு ஞான நிச்சய மெளிதாய் வருமென்பதை மனதிற்கொண்டு கிருஷ்ணபகவான் இரண்டுவழியுஞ் சொன்னார். யோகி, ஞானியென்னும் இருவருக்குஞ் சின்மாத்திரமென்னும் ஞானமும், இராகத்துவேஷ மில்லாமையும், விஷயத்தை விலக்குவதும், பிரதியோகியாயிருக்கிற தேகாதிகளி லத்தியாசந் தவிர்வதும் சமமாகவின், மோக்ஷமுஞ் சமமாக வரும்.

வினா : உ௩. துவைதமெல்லாந் தோற்றுதலா லஃதெப்படிப் புத்தியில் படாமலிருக்கும் ?

விடை : உ௩. புத்திக்கேற்ப துவைதமே யில்லையென்று போகத்தக்கதாக, அத்வைதாநந்தமென்னும் பிரகரணத்தில் வெளிபண்ணுகிறோம்.

எந்நேரமு மிந்த வாத்மாநந்தத்தை யநுசந்தானம் பண்ணிக் கொண்டு பிரபஞ்சத்தைப் பாராமலிருப்பவன் காரியத்தினால் யோகியுமாவன். எளிதாகவும் மோக்ஷங் கிடைக்குமென்று மந்தனுக்கும் அநுக்கிரகம் பண்ணினோம்.

பன்னிரண்டாவது ஆத்மாநந்தம்-முற்றிற்று.

ஆக விளுவிடைகள் - உரு.

பதின்மூன்ருவது - அத்வைதாநந்தம்.

விஞ : க. முன் சொல்லப்பட்ட யோகாநந்தமே, ஆத்மாநந்தமாகட்டும், துவைதத்தோடு கூடியிருப்பவனுக்குப் பிரஹ்மத்துவ மெப்படிச் சித்திக்கும்?

விடை : க. ஆகாசமுதலாகத் தன் தேகபரியந்தமுள்ள ஜகத்தெல்லாம் தனக்குபாதான காரணமாயிருக்கிற ஆநந்தத்திலே தோன்றி யாநந்தத்திலேயிருந்து ஆநந்தத்திலே லயமாகிறபடியினால் மண்ணைத்தவிரக் கடமில்லையென்பதுபோல, ஆநந்தத்தைத்தவிர வேறல்லவென்று வேதஞ்சொன்னபடியினால், அத்வைதம் பிரஹ்மமென்பது கூடும்.

விஞ : உ. குயவனாலுண்டாக்கப்பட்ட கடம் குயவனாலே யுடைந்ததென்பதுபோலச் சகத்திற்குப் பிரஹ்மம் நிமித்தகாரணமாகலாமே?

விடை : உ. மண்ணைவிட்டுக் கடங்காணாததுபோலப் பிரஹ்மத்தை விட்டுச் சகத்திராதாகலின் நிமித்தகாரணமெனலாகாது. உபாதானகாரணமெனல் வேண்டும்.

விஞ : ௩. காரணத்தில் நின்று சகத்துண்டானது ஆரம்பமாகவோ? விவர்த்தமாகவோ?

விடை : ௩. பிதாவும் புத்திரனும் வேறுபட்டிருக்கக் கண்டாற்போலக் காரணத்தைவிட்டுக் காரியம்வேறுபட்டுக் காணாத

படியினுல் நிரம்சவஸ்துவில் ஆரம்ப பக்ஷங்கூடாது. பால் தயிரானுற்போலக் காரணந் தன்னுருக்கெட்டு வேறுருவாகாதபடியினுல் பரிணும பக்ஷமுங் கூடாது. பழுதையே பாம்பாகத் தோற்றுவதுபோல இங்குந் தன்னுருக் கெடாது வேற்றுருப் போலத் தோற்றுதலால் விவர்த்தபக்ஷமே சித்தாந்தம்.

வினு: ச. நிரம்ச வஸ்துவிலே விவர்த்தமும் கூடுமோ?

விடை: ச. நிரம்சமாயிருக்கிற வாகாசத்தில் தலம் நீலம் முதலியவற்றைக் கற்பிப்பதுபோல நிரம்சமாயிருக்கும் பிரஹ்மத்திலும் ஜகத்து விவர்த்தமென்பது கூடும்.

வினு: ரு. அசங்கமாயுள்ள பிரஹ்மம் சகத்தை யெப்படிச் சிருட்டிக்கும்?

விடை: ரு. இந்திர ஜாலக்காரனிடத்தி லிருக்கும் மாயை இந்திரஜாலத்தைக் கற்பிப்பதுபோலப் பிரஹ்மத்தினிடத்தில் ஒரு மாயா சத்தியுண்டு. அதுவே சகத்தைக் கற்பிக்கிறது; பிரஹ்ம மல்ல.

வினு: சு. மாயாசத்தி யொன்றுண்டெனின் அத்வைதங் கெடாதோ?

விடை: சு. அந்தச்சத்தியும் பிரஹ்மத்தைத் தவிர வேறல்ல. ஆதலால் அத்வைதத்துக்கு ஹானியில்லை.

வினு: எ. அப்படியானுல், அந்தச் சத்தியுமில்லை?

விடை: எ. காரியங் கண்டபடியினு லந்தச் சத்தியுண்டு.

வினு: அ. இந்த வசங்கதமெங்கேனுங் கண்டதுண்டோ?

விடை: அ. அக்கினியிலிருக்கிற தாபசத்தி அக்கினியாகவும், மணி மந்திரங்களினு லக்கினிக் கன்னியமாகவுங் காணப்படவில்லையோ.

வினு: கூ. இப்படிப் பிரஹ்மமுமல்ல, பிரஹ்மத்தைத் தவிர வேறு மல்லவென்னும் மாயாசத்தி யுண்டென்பதற்குப் பிரமாணம் யாது?

விடை : ௯. பிரஹ்மத்திற்கு அநந்த சத்தியுண்டு என்னும் வேதமும், வாசிட்டமும் பிரமாணம்.

வினா : ௧0. வாசிட்டத்தி லெப்படிச் சொல்லியிருக்கிறது?

விடை : ௧0. வாரீர் இரகுநாதரே! பிரஹ்மத்தில் அநந்த சத்தி யுண்டு. அந்த அநந்த சத்தியினால் பிரஹ்மமே பிரபஞ்ச மாய்த் தோற்றுகிறது. சரீரங்களில் சிற்சத்தியும்,ஆகாசத்தில் நிர வயவசத்தியும், வாயுவில் சலனசத்தியும், கல்லில் கடினசத்தி யும், சலத்தில் சீதசத்தியும், அக்கினியில் உஷ்ணசத்தியும், மற் றும் அநந்தசத்தியும் பிரஹ்மத்தில் காரியத்தினால் காணப்படுகின் றன; சிருஷ்டிக்குமுன் இந்தச்சத்தி, முட்டையிலே சூக்ஷமமா ய்ப் பாம்பிருப்பதுபோலவும், வித்தில் மரமிருப்பதுபோலவும், காணப்படாமற் பிரஹ்மத்தில் இருந்ததென்றும்;தேசகால விசித் திரத்தினால் பூமியில் பயிர்கள் முளைப்பதுபோலப் பிரஹ்மத்தில் சத்தியும், ஒவ்வொருகாற் சகத்தென்கிற ரூபமாய் விளங்குமெ ன்றும்; ஆதியிலே மனதுண்டாயிற்று, பின்பு பந்தமோக்ஷமுண் டாயிற்று, பின்பு ஆகாசாதி சிருஷ்டியுண்டாயிற் றென்றும் கூறிய கிரமமெல்லாம் பாலன்கதையைப்போல மூடனுக்குச் சொன்னதேயல்லாம லுண்மையல்ல.

வினா : ௧௧. இராமருக்குபதேசித்த பாலன்கதை யாது?

விடை : ௧௧. அசத்தென்னும் பட்டணத்தில் மூன்று இராஜ குமாரர்களுண்டு. இருவரினிமேற் பிறக்கப்போகிறார் கள். ஒருவனினிக் கர்ப்பத்திலே வரப்போகிறான். புண்ணிய வான்களாயிருக்கிற இந்த மூன்று இராஜ குமாரர்களும் வேட் டைக்குப் போனவிடத்தில் ஆகாசத்தில் நல்ல தோப்பிருக்கிற தென் றாமைகள் சொல்லக்கேட் டாகாசத்திலே போய்த் தோ ப்பைக் கண்டார்கள். அவ்விடத்திலே முயற்கொம்பைவெட்டிச் சிங்கநாதமா யூதிக்கொண் டினிமேல் வரப்போகிற பட்டண த்தி லின்றைக்குப் பிரவேசித்தாரென்று மூலைத்தாதி சொன்ன கதையைக்கேட்டு விசாரமற்ற குழந்தையும் மெய்யென்றே நம் பினான். இந்தச் சம்ஸார கற்பனையும் விசாரமில்லாத மூடனுக்

குண்மைபோலச் சொல்லி யிருக்கிறதென்றல் முதலான வுப கதைகளோடு மாயாசத்தியின் விஸ்தாரத்தை வசிஷ்டர் இராம நாதருக்குச் சொன்னார். அந்த மாயாசத்தியைத்தானே நாமும் நிரூபிக்கிறோம்.

வினா: கஉ. மாயாசத்திக்கு இலக்ஷணம் யாது?

விடை: கஉ. காரியத்திற்கும் ஆதாரத்திற்கும் விலக்ஷண மாயிருக்கும்.

வினா: கஈ. காரிய மென்பது யாது? ஆதார மென்பது யாது? சத்தி இவற்றிற்கு விலக்ஷணமென்பதெப்படி? இம்மூன் றையுமொரு திருஷ்டாந்தத்திலே பகுத்துக் காண்பதெப்படி?

விடை: கஈ. வாய் குவிந்து பண்டியுண்டாயிருக்கிற கட மே காரியம். ஐந்து குணமுடைய மண்ணே யாதாரம். கட சத்தி இந்த விரண்டிலக்ஷணமு மில்லாததாயிருக்கும்.

வினா: கச. இந்த விரண்டிலக்ஷணமு மில்லாத சத்தி யெப்படியிருக்கும்?

விடை: கச. அநிர்வசநீயமாம்.

வினா: கரு. இந்தக்கடசத்தி, இத்தன்மையதென்று சொ ல்லக்கூடாமையினால் அது இல்லையெனல்வேண்டும்.

விடை: கரு காரியவுற்பத்திக்கு முன் இந்தச்சத்தி தன க்காதாரமாயிருக்கிற மண்ணிற்குள்ளே யொளித்திருந்தது. நிமி த்தகாரணமாயுள்ள குலாலாதிகள் சகாயமாய்வந்து கூடினவு டன் விகாரமாயிருக்கும். கடவடிவை யடைந்து தனக் காதார மாயிருக்கும் மண்ணிற்கு மண்ணென்னும் பேரையு மாற்றிக் கடமென்பதினாலே சத்தியில்லை யெனலாகாது.

வினா: கசு. மண்ணிற்சத்தி காரியமாவதற்குக் குலாலன் வேண்டியதுபோலப் பிரஹ்மத்திற் சத்தி சகத்தாவதற்கு நிமித்த காரணம் யாது?

விடை: கசு. கடசத்தியுடையமண், சுவயம் சடமானபடி யினால் சைதன்னியமாயிருக்கும் குலாலனையபேக்ஷித்தது. மாயா

சத்தியையுடைத்தாய பிரஹ்மம் சுவயஞ்சுத்த சைதன்னியமா யிருத்தலின் அதற்கு வேறு நிமித்தகாரணம் வேண்டியதில்லை.

வினா: கஎ. மண்ணென்றும், சத்தியென்றும், அதன் விகாரம் கடமென்றும், லோகத்தி லொருவருஞ் சொல்லக் காணோம். எல்லாவற்றையுங் கூட்டிக் கடமென்றே சொல்லு கிறார்கள். இதில் காரணம் யாது?

விடை: கஎ. விசாரியாத வஞ்ஞானமே காரணம்.

வினா: கஅ. விசாரமாவது யாது விசாரித்தவனைக் கடம் என்பன்?

விடை: கஅ. குலால வியாபாரத்திற்கு முன் மண்ணெ னும் பெயரே வழங்குதலால் கடசப்தத்திற்குமண்ணர்த்தமல்ல. குலாலவியாபாரத்திற்குப் பின் கடமென்று வழங்கின பாண்ட மும் மண்ணைத் தவிர வேறு இல்லாததனாலே கடசப்தத்திற் கர்த்தம் மண்ணைத் தவிர்ந்தில்லையென்று பார்ப்பதே விசாரம். இப் படி விசாரித்தவன் கடமுஞ் சத்தியைப்போல அநிர்வசநீயமாக லின் அந்தச் சத்தியின் காரியமென்றறிவன்.

வினா: கக. அநிர்வசநீயத்தைச் சத்தியென்று சொல்ல வேண்டுமே யல்லாமற் கடமென்று நிருவகிப்பதெப்படி?

விடை: கக. இந்திரஜாலக்காரனிடத்திற் சத்தி வெளி ப்படாதபோது மாயையென்றும், வெளிப்பட்டபோது கந்தர்வ சேனையென்றுஞ் சொல்லப்படுவதுபோல் மண்ணிற் சத்தி காரி யமாய்த் தோற்றாதபோது சத்தியென்றும் தோற்றும்போது கட மென்றுஞ் சொல்லப்படும்.

வினா: உ0. இந்த யுத்திக்குப் பிரமாண முண்டோ?

விடை: உ0. இப்படி மாயாமயமா யிருப்பவை யாவும் வாக்கினால் சொல்லுதல் மாத்திரமே யல்லாம லர்த்தமில்லையெ ன்றும், அவிகாரமாயிருக்கும் மண்மாத்திரமே பொருளென்றும் வேதஞ் சொல்லுகின்றது.

வினு : உக. ஒருகாலத்தில் சத்தியென்றும், ஒருகாலத்தில் காரியமென்றும் காணப்படும் கடம் சத்தியமென் றங்கீகரியா விட்டால் விவகாரமெப்படிக் கூடும்?

விடை : உக. இருவகைக்கு மாதாரமாயிருக்கும் மண்ணை விட்டுப் பார்த்தால் வாக்குமாத்திரமே யல்லாம லிரண்டு காலத் தினு மொருபடித்தாயிருக்கிற மண்போலே பொருளாகாது.

வினு : உஉ. விகாரமென்றுங் கடமென்றுஞ் சொல்லப் பட்ட பொருளே பொய்யானுல் மண்ணென் றறிந்தவுடன் ஏன் காணுமற்போகவில்லை?

விடை : உஉ. விகாரம் பொருளுமல்ல வுண்மையுமல்ல வென்று காணப்பட்டதே தோற்றுமற் போனது.

வினு : உரு. காரியம் பொய்யென் றறிந்ததனுல் பிரயோசனம் யாது? காணுமற் போகவேண்டாமோ?

விடை : உரு. புருஷனிழற் றண்ணீரினுள்ளே தலைகீழாய்த் தோற்றினுலும் அவனில்லை பொய்யென் றறிவதுபோலக் காரி யந் தோற்றினுலும் பொய்யென் றறிவதே யில்லையென்றுபோனது; காணுமற் போவதன்று. அத்வைத வாதிகளுக் கிப்படிப் பட்ட வறிவுதான் புருஷார்த்தம்.

வினு : உச. இந்தத் திருஷ்டாந்தப்படி சகத்தையும் பொய் யென் றூன்றிப்பார்த்துக் கொள்ளும்படி யெங்கேயாகிலுஞ் சொல்லியிருக்கிறதோ?

விடை : உச. மண் பொன் இரும்பென்னும் மூன்று திரு ஷ்டாந்தமும். காரியமெல்லாம் பொய்யென்று பகுத்தறிவதும் சாமவேதத்திலே சொல்லியிருக்கிறது.

வினு : உரு. கடம் பூஷணம் கத்தியென்று பரிணமித் தவை விவர்த்தத்திற் கெப்படித் திருஷ்டாந்தமாம்?

விடை : உரு. பால் தயிரானுற்போல பரிபாகப் பட்டுப் போகாமற் மண்முதலியவற்றின் விகாரமழிந்தபோது காரண

ரூபமா யிருத்தலால் விவர்த்தத்திற்குத் திருஷ்டாந்தமாய்ச் சொல்லலாம்.

வினா: உசு. இச்சகத்தை எவ்வாறு காணவேண்டும்?

விடை: உசு. காரியமெல்லாங் காரணமென்று காணவேண்டும்.

வினா: உஎ. சத்தியத்தை யறிகிறவிடத்தில் அசத்தியமென்னும் அறிவெப்படி வரும்?

விடை: உஎ. சத்தியத்தை யறிகிறவிடத்தில் விகாரம் அசத்தியமென் றறிவதுபோல வரும்.

வினா: உஅ. மண்ணென்று எதற்காக வறியவேண்டும்? விகாரத்தை யேன் மறக்கவேண்டும்?

விடை: உஅ. உள்ளதை யுள்ளபடி பார்ப்பதே புருஷார்த்தம், இல்லாததை யுண்டென்று பார்ப்பதே அநர்த்தம்.

வினா: உகூ. ஆனால் சகல பிரபஞ்சத்தையும் சோதித்துப் பார்க்கவேண்டாமோ?

விடை: உகூ. ஒருகடத்தை மண்ணென் றறிந்ததனால் உலோகத்திலே யுண்டான பாண்டமெல்லாம் மண்ணென்று வகுப்பதுபோல, ஒரு விஷயத்தை யூன்றிப்பார்த்துப் பிரஹ்மமென் றறிந்தாற் சகல பிரபஞ்சமும் பிரஹ்மமென்று வகுப்பறும்.

வினா: ௩0. பிரஹ்மத்திற்கு இலக்ஷணம் யாது? சகத்திற்கு இலக்ஷணம் யாது?

விடை: ௩0. சத்துச் சித்து ஆநந்தமென்னும் மூன்றும் பிரஹ்மலக்ஷணம். நாமரூப மிரண்டும் சகத்துலக்ஷணம்.

வினா: ௩௧. கடதிருஷ்டாந்தத்தைப் போல் இவ்விடத்திலும் சத்தியின்னது, சத்திக்காதாரமின்னது, சத்தியின் காரியமான விகாரமின்னதென்பதைப் பகுத்துக் காண்பதெப்படி?

விடை: ௩௧. இத்தன்மையதென்று நிரூபிக்கப் படாத மாயையே சத்தி. பிரஹ்மமே சத்திக்காதாரம். நிர்விகற்பமா

யிருக்கிற பிரஹ்மத்தினிடத்திலே கற்பிக்கப்பட்ட நாமரூபமே சத்தியின் காரியமான விகாரம்.

வினா : ௬௨. இந்த மாயை எந்தக் கிரமத்தில் விகாரத்தை யடைந்தது?

விடை : ௬௨. சிருஷ்டிக்குமுன், இத்தன்மையதென்று காணப்படாமல் அவ்வியாகிருதமாக விருந்த விந்தமாயை, ஆதியில் ஆகாசமென்னும் விகாரத்தை யடைந்தது.

வினா : ௬௩. கடவிகாரத்திற்கு மண்ணே சொரூபமாய்க் காணப்பட்டாற்போல வாகாசவிகாரத்திற்கும் பிரஹ்மமே சொரூபமென்பதைப் பகுத்துக் காண்பதெப்படி?

விடை : ௬௩. அஸ்திபாதிப் பிரியத்தைத் தவிர அவகாசமென்னும் சொரூபத்திற்கும் ஆகாசமென்னும் நாமத்திற்குஞ் சொரூபமில்லாமையினால் நாமரூபம் சிருஷ்டியில் உண்டாய்ப் பிரளயத்திலே அழிவதனால் இந்தவிரண்டும் மித்தையென்றும், மண்போல சச்சிதாநந்த மெப்போதும் நிலை பெற்றிருத்தலால் பிரஹ்மமே சத்தியமென்றும் பகுத்தறிக.

வினா : ௬௪. ஆகாசத்திற்குப் பிந்தின விகாரங்கள் எவை? அவற்றில் சச்சிதாநந்தத்தைக் காண்பதெப்படி?

விடை : ௬௪. வாயு, அக்கினி, அப்பு, பிருதிவி, ஓஷதிகள், அன்னம், புருஷன், மிருகாதிகளெல்லாம் விகாரங்கள். இப்படி வெகு விதமாயிருக்கப்பட்ட நாமரூபங்களெல்லாம் சச்சிதாநந்தத்தை விட்டுக் காணமையினால் இத்தனையுஞ் சச்சிதாநந்தமென்பதிற் சந்தேகமில்லை.

வினா : ௬௫. சச்சிதாநந்தத்தை விடாதிருத்தலால் நாமரூபமும் நித்தியமாகலாமே?

விடை : ௬௫. உற்றுப்பார்த்தா லில்லாத நாமரூபங்கள் சத்தியமாயிராமற் பிரஹ்மத்தினிடத்தில் தோன்றி யழிந்துபோவதை விவேகம்பண்ணி யநுபவித்துக்கொள்ளுக.

வினா : ௬௬. விவேகம்பண்ணிப் பார்ப்ப தெப்படி?

விடை : ௬௬. அலை நுரைகள் சமுத்திரத்தி லுண்டாய், சமுத்திரத்திலே யிருந்து சமுத்திரத்திலே லயமாவது போல வென் றறிக.

வினு : ௬௭. எப்படிப் பார்த்தாலும் நாமரூபங்களே முன் னிற்கின்றன. அவை போவதற் குபாயம் யாது?

விடை : ௬௭. வழியிற் றுரும்புபோல நாமரூபத்தைக் கூர் மையாய்ப் பாராமல், அசட்டைசெய்து பார்க்குந் திசையெல் லாம் சச்சிதாநந்தமா யாதரவோடு அப்பியசிக்கும்போது நாம ரூப மின்னவிடமென்று காணமற்போய் அத்துவிதநிலை திடப் பட்டுச் சீவன்முத்தனுவன்?

வினு : ௬௮. நாமரூபம் பொய்யென்னும் உரம் எதனுல் திடப்படும்?

விடை : ௬௮. நாமரூபத்தைக் கண்டவுடன் மண்ணிற் சத்தி யநேகம் பொய்களைச் சிருஷ்டித்தாற்போலவும், நித்திரா சத்தியானது கூடாத சொப்பனங்களைச் சிருஷ்டித்தாற்போல வும், பிரஹ்மத்தினிடத்திலே மாயை சிருஷ்டித்த பொய்யல்ல வோ வித்தனையுமென் றெந்நேரமும் பார்த்ததிசயப்படாமலிருக் கில் நாமரூபம் பொய்யென்று திடப்படும்.

வினு : ௬௯. நித்திராசத்தி எங்ஙனம் கூடாத சொப்பனத் தைச் சிருஷ்டிக்கும்?

விடை : ௬௯. சொப்பனத்திலே தான் ஆகாசத்தில் பறக்க வும், தலையைவெட்டித் தன்கையில் தூக்கிப் போகவும், ஒரு நாழிகைக்குள்ளே யநேக வருஷம் வந்துபோகவும், செத்துப் போன புத்திராதிகள் திரும்ப வந்திருக்கவுங் காண்பதெல்லாங் கூடாதகாரியமல்லவோ?

வினு : ௭௦. இதனுலே பிரஹ்மவிசாரம் யாது?

விடை : ௭௦. நித்திராசத்திக்கே யித்தனைசத்தி யுண்டா னல், மாயாசத்தியானது நிர்விகாரமாயிருக்கிற பிரஹ்மத்தில்

சடங்களையுஞ் சிதாபாசர்களென்னும் விகாரங்களையுங் கற்பிப்ப ததிசயமல்ல.

வினா: சக. இந்த விகாரமும் பிரஹ்மமுங்கலந்து தோற்றுமிடத்திலே ஒன்று சத்தியமும், ஒன்று மித்தையுமாகப் பார்ப்பதெப்படி?

விடை: சக. எங்குஞ் சரியாயிருக்கிற புடவை சத்தியமென்றும், அதில் தனித்தனியே காணப்படுகிற சித்திரம் மித்தையென்றும் அறிவதுபோல, எங்குஞ் சரியாய்த் தோற்றுகிற சச்சிதாநந்தத்தைச் சத்தியமென்றும், அதிலே தனித்தனியே தோற்றுகிற நாமரூபத்தை மித்தையென்றுங் கண்டு உபேக்ஷிக்க வேண்டும்.

வினா: சஉ. தொழிலுடன்பட்டவனே, தானாகத் தோற்றுதலால் தன்னை யசங்கனென் றறிவதெப்படி?

விடை: சஉ. கிணற்றில் தலைகீழாய்த் தோற்றினாலும், அதைத் தானல்லவென்று தள்ளிக் கரைமேலேயிருக்கிற தன்னைத்தானென்று சந்தேகமறக் கண்டிருப்பதுபோல, மூன்றவஸ்தையிலுங் கர்த்தாவாயோடித்திரிகிற தன்னைத் தானல்லவென்று உபேக்ஷித்துச் சாக்ஷியாயிருக்கிற சித்தைத் தானென்று சந்தேகமறக் கண்டிருக்கவேண்டும்.

வினா: சரு. மனதிலே ஆவசியகமாய் மூண்டிருக்கிற பிரபஞ்சகாரியத்தை யுபேக்ஷை பண்ணுவதெப்படி?

விடை: சரு. க்ஷணத்திற்கொருகால் வெவ்வேறாய்வரும் மனோராச்சியத்தைச் சகலரும் அம்மட்டிலே உபேக்ஷிப்பதுபோல, வாலியத்திலே யௌவனம் வேண்டுமென்றாலும் வராமல், எவ்வனத்திலே வார்த்திகம் வேண்டுமென்றாலும் வராமல், நேற்றிறந்தவனை யின்றைக்கு வேண்டுமென்றாலும் வராமல், நேற்றைத்தின மின்றைக்கு வேண்டுமென்றாலும் வராமல், மனோராச்சியம்போல் கண்ட விடத்திலேயே யழிந்து போவத

னுல் நாமரூபந் தோற்றினுலும் பொய்யென் றுபேக்ஷிக்கவேண்டும்.

வினு : சச. இப்படிச் சர்வாத்மனுய்ப் பிரபஞ்சத்தை யுபேக்ஷிக்கச் சொன்னுற் சரீர நிருவாகமெப்படி நடக்கும்?

விடை : சச. கூத்தாடிபோல வாசனையே நிருவகிக்கும்.

வினு : சரு. ஒருகாற் பாலனென்றும் ஒருகாற் கிழவனென்றும், நானுவிதமாக வழங்குவதே தானுகக் காணப்படுவதனுல், தான் ஒருதன்மையாயிருக்கிற சைதன்னிய மென்பது மனதிலெப்படித் திடப்படும்?

விடை : சரு. வெவ்வேறே ஜலப்பிரவாகங்க ளெடுத்தாலும் நடுவிலிருக்கிற பருங்கல் லசையாததுபோல நாமரூபங்கள் வெவ்வேருகப் பரிபாகப்பட்டாலும், ஒருதன்மையா யிருக்கிற சின்மாத்திரமே நாமென்றறிக.

வினு : சசு. இந்தப் பாவனை முதிர்ந்தால் நிலை யெப்படியிருக்கும்?

விடை : சசு. கண்ணுடியிலே தோற்றின பட்டணம்போலச் சச்சிதாநந்தத்திலே சகம் காணும்.

வினு : சஎ. நாமரூபமல்லவோமுந்தித்தோற்றுவது அதை யுபேக்ஷிப்பதெப்படி?

விடை : சஎ. கண்ணுடியைக்காணுமற் பிரதிவிம்பம் தோற்றுததுபோலச் சச்சிதாநந்தந் தோற்ருமற் பிரதிவிம்பந் தோற்றமாட்டாது. ஆகையாலே முந்தித் தோற்றும் சச்சிதாநந்தத்தைப் பார்த்து மேல்நாமரூபத்திலே புத்தி நாடாமல் நிறுத்தினுற் றுடைப்பட்டது அவைதமாக வத்துவிதப் பிரஹ்மநிலை தானுகவே யிஞ்சும். இந்த நிலையிலேயே யெல்லோரும் நின்றிளைப்பாறக் கடவர்.

பதின்மூன்றவது அத்வைதாநந்தம் முற்றிற்று.

ஆக வினு விடை - சஎ.

பதினுன்காவது வித்தியாநந்தம்.

யோகத்தினுலும், ஆத்மாநந்த விவேகத்தினுலும், துவைத மித்தையென்கிற சிந்தனையினுலும், பிரஹ்மாநந்தங் கண்டவனுடைய வித்தியாநந்தத்தை நிரூபிக்கிறோம்.

வினு: க. வித்தியாநந்தம் யாது? அஃதெத்தனை விதமாயிருக்கும்?

விடை: க. விஷயாநந்தம்போல வித்தியாநந்தமும், அந்தக்கரண விருத்தி ரூபமாயிருக்கும். அது துக்கநிவிருத்தி யென்றும், காமியலாபமென்றும், கிருதகிருத்தியமென்றும், அடையவேண்டியதெல்லா மடைந்த சந்தோஷமென்று நான்கு விதமாயிருக்கும்.

வினு: உ. துக்கமெத்தனை விதம்? அவை ஞானத்தினுலெப்படிப்போயின? காமியமெத்தனைவிதம்? அவை ஞானத்தினுலெப்படியடையப்பட்டன? கிருத்தியமெத்தனைவிதம்? அவை ஞானம் வந்ததனுல் எப்படிச்செய்து முடிந்தவையாயின? அடையப்போகிற புருஷார்த்தம் யாது? அது ஞானத்தினுலெப்படி அடையப்பட்டது?

விடை: உ. இகலோகதுக்கமென்றும், பரலோகதுக்கமென்றுந் துக்கமிரண்டு விதமாயிருக்கும். ஆத்மாவே நாமென் றறிந்தாற் புசிக்கிறவனில்லாமற்போகிறபடியினுலும், நாமரூபம்பொய்யென்றறிந்தாற் போக்கியமில்லாதபடியினுலும் போக போக்கியங்களைக் குறித்து வருகிற விகலோக துக்கம் போயிற்று. தாமரையிலையிற் றண்ணீரொட்டாததுபோல ஞானியை ஆகாமிய கர்மம் பற்றுதபடியினுலும் அக்கினியிலிட்ட பஞ்சுபோல ஞானிக்குச் சஞ்சிதகர்மம் வெந்துபோனபடியினுலும், புண்ணியபாவ சிந்தனையாய்வருகிற பரலோகதுக்கம்போயிற்று. இவ்வாறு துக்கநிவிருத்தி சொல்லப்பட்டது. காமியம் பதினொருவிதமுண்டு. அவையாவன:—அழகிளமை யுடையவனுய் அரோகதிடகாத்தி

ரனைப் பஞ்சாசத்கோடி பூமண்டலமு மொருகுடைக்கீழாண்டு புசிப்பதொரு மநுடாநந்தம். இந்தக் கற்பத்திலே புண்ணியபல த்தினால் கந்தர்வனானவன் மநுஷ-கந்தர்வன் இவனாநந்தம் மநு டாநந்தத்திலும் நூறத்தனையதிகம். பூர்வகற்பத்துப்புண்ணியத் தினால் கந்தர்வபதத்தை யடைந்தவன் தேவகந்தர்வன்; இவனா நந்தம் மநுடகந்தர்வ னாநந்தத்திலும் நூறத்தனையதிகம். இதிலும் நூறத்தனையதிகம் பிதுர்லோகத்தி லொருவனாநந்தம். கற்பாதி யிலே தேவனாய்ப் பிறந்தவன் ஆசானதேவன். இவனாநந்தம் பிதிர்லோகத்தி லொருவனாநந்தத்திலும் நூறத்தனை யதிகம். இந்தக்கற்பத்திலே அசுவமேத முதலானவைகள்பண்ணி உந்நத பதத்தை யடைந்தவன் கர்மதேவன் இவனாநந்தம் ஆசானதே வாநந்தத்திலும் நூறத்தனையதிகம். இதிலும் நூறத்தனையதிகம் முக்கிய தேவாநந்தம். இதிலும்நூறுகொண்டது இந்திராநந்தம். இதிலும் நூறுகொண்டது பிகஸ்பதியாநந்தம். இதிலும் நூறு கொண்டது விராட் புருடாநந்தம். இதிலும் நூறுகொண்டது ஒரு*சூத்திராத்மாநந்தம் இப்படி வாக்குக்கும் மனதிற்கு மெட் டினவாநந்தம் பதினொன்றும் சொல்லப்பட்டன. வாக்குக்கும் மனதிற்கு மெட்டாத ஆத்மாநந்தத்தையடைந்த ஞானி இராக த்துவேஷாதிகளோடே கூடியிருக்கிறவிந்தப் பதினொருவகை யாநந்தத்தையும் நாய் கக்கினசோறுபோல தோஷங்கண்டு வெ றுத்தபடியினாலும், இத்தனையு மிந்திரஜாலமாய்க் காண்பதனா லும், இத்தனை பேராயிருந்து புசிப்பது நாமொருவன்றானேயெ ன்னும் அநுசந்தானத்தினாலும், அவர்களைப்போல கிரமமின்றி ஞானிக்குச் சகலபோகங்களு மொருமிக்க வந்தன. இகலோகத் தைக்குறித்தும், பரலோகத்தைக்குறித்தும், மோக்ஷத்தைக்குறி த்தும் கிருத்தியம் மூன்று விதமுண்டென்றும் இஃதெல்லாம் ஞானிக்குத் தீர்ந்தமுறியாகப்பண்ணி முடிந்ததென்றும், அடை யப்போகிறபுருஷார்த்தம் பிரஹ்மமென்றும், அஃது அபரோக்ஷ ஞானத்தினாலடைந்து வகுப்பற்றதென்றும், இப்படியிந்தநான்கு

* சூத்திராத்மா என்றது - பிரஹ்மா.

வகையும் திருப்திதீபத்தில் வெட்டவெளியாகச் சொல்லப்பட்டுள்ளன. அவற்றையும் இவ்விடத்தில் கண்டுகொள்ளவேண்டும்.

இப்படி வித்தியாநந்தஞ்சொல்லப்பட்டது. இந்தநிலை வருமளவும், பிரஹ்மாப்பியாசம் பண்ணவேண்டியது.

பதினான்காவது வித்தியாநந்தம் முற்றிற்று.

ஆக வினா விடை - உ.

உ

சிவமயம்.

பதினைந்தாவது விஷயாநந்தம்.

பிரஹ்மாநந்தத்தி லேகதேசமாய்ப் பிரஹ்மாநந்தத்திற்கு வழியாயிருக்கிற விஷயாநந்தத்தை நிரூபிக்கிறோம்:—

வினா: க. விஷயாநந்தமாவது யாது? அதனை எவ்விதத்தில் காணலாம்?

விடை: க. விருத்தியிலே பிரதிவிம்பித்தவாநந்தம் விஷயாநந்தம். அதை விவேகத்தினால் காணலாம்.

வினா: உ. எல்லாவிருத்தியிலும் ஆநந்தம் ஏன் பிரதிவிம்பிக்கவில்லை?

விடை: உ. ஜலத்தில் பிரதிவிம்பித்த சந்திரன்குழம்பின ஜலத்தில் சாமானியமாகத் தோற்றுவதுபோலவும், நிர்மலஜலத்தில் தெளிவாய்த் தோற்றுவதுபோலவும், சிறிது விருத்திகளிலாநந்தம் தோற்றும்; சிறிது விருத்திகளிற் றோற்றாது.

வினா: ௩. ஆனால் அந்தக்கரணவிருத்தி யெத்தனைவிதம்? அந்த விருத்திக்கு இலக்ஷணம் யாது?

விடை : ௧. அந்தக்கரணத்திற்குச் சாந்தவிருத்தி யென்றும், கோரவிருத்தியென்றும், மூடவிருத்தியென்றும் விருத்தி மூன்று விதமாகவிருக்கும். வைராக்கியம், பொறுமை, உதார முதலானவை சாந்தவிருத்தி. காமக்குரோதலோப முதலானவை கோரவிருத்தி. மயக்கம் கலக்கம் பயமுதலானவை மூடவிருத்தி.

வினா : ௨. பிரஹ்மம் இந்த விருத்தியிலெப்படிப் பிரதிவிம்பிக்கும்?

விடை : ௨. கோரவிருத்தி, மூடவிருத்தி இரண்டும் கலங்கின விருத்தியானபடியினால், சித்துமாத்திரம் பிரதிவிம்பிக்குமேயல்லாமல், ஆநந்தம் பிரதிவிம்பிக்கமாட்டாது. சாந்தவிருத்தி நிர்மலமானபடியினால், அதில் சித்தோடுகூட வாநந்தமும் பிரதிவிம்பிக்கும்.

வினா : ௩. இதற்குப் பிரமாணம் யாது?

விடை : ௩. கோரமூட விருத்திகளில் ஆநந்தாநுபவம் காணப்படவில்லை. சாந்தவிருத்தியில் ஒரு சுகாதிசயம் காணப்படுகிறது.

வினா : ௪. கோரமூடவிருத்திகளில் சுகாநுபவமில்லையென்பதெப்படி?

விடை : ௪. கிரகக்ஷேத்திராதி விஷயத்தில் ஆசையால் மூழ்கும்போது, இது நமக்குக் கிடைக்குமோ கிடையாதோ வென்னும் துக்கம் கூடவருதலாலும், கிடையாமற்போனாற் றுக்கமதிகமாதலாலும், கெடுத்தவன்பேரில் வயிரம் உண்டாகுதலாலும், அவனை நிக்கிரகிக்கக் கூடாவிட்டா லழுகையாய் முடிதலாலும் கோர மூடவிருத்தியில் துக்கமே யல்லாமற் சுகம் லேசமுமில்லை.

வினா : ௭. சாந்தவிருத்தியில் சுகாதிசய முண்டாவதெப்படி?

விடை : ௭. காமியம் லபித்தவுடன் சாந்தமான விருத்தியில் சுகப்பிரதிவிம்பம் மிகுந்து போகத்திலும் விருத்திசாந்த

மானபடியினால் சுகாதிசயம் தோற்றுகிறது. இப்படி விஷயம் கிடைத்ததற்குத்தக்கவாநந்தம் பிரதிவிம்பிக்கிறது. ஆதலால் சாந்த விருத்தி உள்ளவிடமெல்லாம் ஆநந்தந் தோற்றுதலால் சந்தேகம் வேண்டியதில்லை.

வினா: அ. இப்படிப் பிரதிவிம்பிக்கும் பிரஹ்மத்திற்குச் சுபாவமெத்தனை விதமாயிருக்கும்? எந்தவுபாதியி லெந்தச் சுபாவம் காணப்படும்?

விடை: அ. சத்தென்றும், சித்தென்றும், ஆநந்தமென்றும் பிரஹ்மத்திற்கு மூன்றுசுபாவமுண்டு. மண், கல்முதலான ஜடங்களில் சத்துமாத்திரந் தோற்றுமேயல்லாமல், மற்றவிரண்டுந் தோற்றாது. கோரமூட விருத்திகளில் சத்துஞ் சித்துந் தோற்றும்; ஆநந்தந்தோற்றாது. சாந்தவிருத்தியில் சத்துசித்து ஆநந்தம் மூன்றும் தோற்றும்.

வினா: கூ. மாயைக்கெத்தனை சுபாவமுண்டு. எந்தச்சுபாவமெதில் தோற்றும்?

விடை: கூ. அசத்தென்றும், ஜடமென்றும், துக்கமென்றும் மாயாசொரூபம் மூன்றுவிதமாயிருக்கும். அசத்து மநுடக்கொம்பு முயற்கொம்புகளில் காணப்படும். மண், கல் முதலானவைகளில் ஜடம்காணப்படும். கோரமூடவிருத்திகளில் துக்கம் காணப்படும். சாந்தவிருத்தியில் ஜடமும் போதமு மிருத்தலால் மாயை பிரஹ்மத்தோடு கலந்துகாண்பிக்கும்.

வினா: க0. இப்படித் தோற்றும் மாயா சொரூபங்களைப் பிரஹ்மமாகக் காண்பதெப்படி?

விடை: க0. அசத்தினை முயற்கொம்பு மநுடக்கொம்புகளைப்போல உபேக்ஷிக்க; சடங்களை நாமரூபத்தைவிட்டுச்சத்துமாத்திரமாய்ப்பார்க்க; கோரமூட விருத்திகளைத் துக்கத்தைத் தள்ளிச் சத்துஞ் சித்துமாய்ப்பார்க்க, சாந்தவிருத்திகளைச் சச்சிதாநந்தமாய்க்காண்க; இப்படி விஷயாநந்தத்தின் வழியே மூடனும் பிரஹ்மாநந்தத்தை யடையலாம்.

வினா: கக. மாயாசொரூபத்தையிப்படிப் பகுத்துத் தியானித்ததனுல் பிரஹ்மாநந்தமெப்படிக் கிடைக்கும்?

விடை: கக. இந்தத் தியானத்தில் சித்தமேகாக்கிரமான வுடனே பிரஹ்மவித்தை திடப்படும். இந்தப் பிரஹ்மவித்தையில் பேதமாயிருக்கிற வுபாதிகளெல்லாந் துடைபட்டபடியினுல் சச்சிதாநந்தம் அகண்டாகாசமாகத் தோற்றும்.

வினா: கஉ: பேதத்திற்கு உபாதிகள் எவை? அந்தவுபாதிகளெதனுற் றுடைபட்டன? பிரஹ்மம் நிருபாதியாய்த் தோற்றுவது எதனுல்?

விடை: கஉ. சாந்தவிருத்தி, கோரவிருத்தி, மூடவிருத்தி, கல் முதலான ஜடங்கள் இவைகளெல்லாம் பேதத்திற்குஉபாதி. யோகத்திஞலும் விவேகத்திஞலும் இந்த வுபாதிகளெல்லாந் தள்ளப்படும். பின் திரிபுடியில்லாதபடியினுல் நிருபாதியாய்ச் சுயம்பிரகாசமாயிருக்கிற பிரஹ்மதத்துவம் அகண்டாநந்தவடிவாய்த் தாஞகவே விளங்கும்.

இப்படிப் பிரஹ்மாநந்தத்திற்கு வாயிலாகவே விஷயாநந்தத்தை நிரூபித்தோம். இந்தவழியே எல்லோரும் மோக்ஷமடையக்கடவர்கள்.

பதினைந்தாவது விஷயாநந்தம் முற்றிற்று.

ஆக வினா விடை - கஉ.

ஆகப்பிரகரணம். கடு-க்குக் கூடிய வினா விடை சுகரு.

பஞ்சதசப்பிரகரணம் சமாப்தம்.